அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் முழுமையான சுகாதார பாதுகாப்புத்தன்மை கொண்டது.

பிரத்தியேகமான விசேட கிருமி எதிர்ப்புத் தன்மை கொண்ட இரசாயன கலவை மற்றும் இயற்கை மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட நறுமணம் மிக்க சிறப்பு நிறப்பூச்சைச் (பெயின்ட்) கொண்டு நமது பத்திரிகை அச்சிடப்படுகின்றது என்பதை வாசகர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

Follow us:

வாரவெளியீடு

# தமிழன்

THAMILAN WEEKLY

தமிලන් සතිඅන්තය

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

## நக்கல்நமசிவாயம்




மலர் : 01, இதழ் : 10 சார்வரி வருடம், ஆவணி மாதம், 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (30.08.2020) ஹிஜ்ரி - 1442 முஹர்ரம் பிறை-10, 0115886187 பக்கங்கள் 16 விலை ரூ.30

## 'வெடி'மணியம்



"கொறோணாவாலையும்" கன நன்மைகள் இருக்குது எண்டு கந்தசாமி அண்ணை சொன்னார்.

எனக்கு விசர் வந்து கத்திப்போட்டன்!

பதிலுக்கு "மணியம் உனக்கு மூலக்கொதி. எதுக்கெடுத்தாலும் வாள் வாளெண்டு கத்தாத" எண்டு கந்தசாமி அண்ணை எனக்கு மேல ஏறிப்போட்டார்.

என்னடா சங்கதி எண்டு விசாரிச்சால்...

யாழ்ப்பாணத்தில "பியர்" விற்பனை குறைஞ்சிருக்குதாம்.

அவசரப்பட்டு சந்தோசப்படவேண்டாம்!

போனகிழமை 4 பொடியள் "ஹெரோயின்" போதைப்பொருளோட கிளிநொச்சியில பிடிச்சவையாம்.

வடக்கில் "போதைப்பொருள்" பாவனை அதிகரிச்சிருக்கு எண்ட விசயத்தை ஒருத்தரும் பெருசா கவனத்தில கொள்ளாமல்;

அவையவை தங்கட அலுவலைப்பாத்துக்கொண்டு திரியினம்.

ஒரு நாள் எல்லாரும் தலையில கையை வைச்சுக்கொண்டு நடுச்சந்தியில இருந்து "ஒப்பாரி" வைக்கவேண்டிவரும்.

போனவரியம் 21 லச்சம் லீற்றர் பியர் மட்டும் யாழ்ப்பாணத்தில விற்பனையாகியிருக்கு.

"யாழ்ப்பாணத்தில் குடிநீருக்கு தட்டுப்பாடு அதனாலதான் பொடியள் பியரை வாங்கிக்குடிக்கிறாங்கள்" எண்டு கொடிகாமத்து கோப்பிறேசனில் கதைச்சவையாம்.

கொழும்பு கட்டுநாயக்கா விமானநிலையத்தில வைச்சு நாலு போதைப்பொருள் குற்றவாளிகளை கைது செய்திருக்கினம். இந்த கொறோணா கெடுபிடிகளில் எயாப்போட் பூட்டியிருக்கு எண்டாங்கள். விமானங்கள் ஒண்டும் ஓடயில்லை எண்டாங்கள். ஆனாலும் அதுக்குள்ளாலையும் சுழிச்சுக்கொண்டு தப்பி ஓட வெளிக்கிட்ட நாலுபேரை மடக்கிபிடிச்சிருக்கினம்.

பாருங்கோவன் புதினத்தை!

தாமரை "மொட்டை" தூக்கிப்பிடிச்ச கையுக்கு இப்ப கொஞ்சம் "வலிக்குதாம்"!

"கை" கட்சிக்காரர் கொஞ்சம் கடுப்பில இருக்கினமாம். முக்கியமா எங்கட மைத்திரியருக்கு ஒரு அமைச்சும் குடுக்கவில்லை எண்ட கோபத்தில கனபேர் கடுப்பாகிட்டினமாம்!

19 ஐ திருத்தி 20 ஆக்கிப்போட்டு;

புதிய அரசியலமைப்பை கொண்டுவந்து அதில "புதுசா பதவி" ஒண்டு தாறம் எண்டு மகிந்த சொன்னவராம் எண்டு ஒரு கதை!

ஆனால் அதுவரை மைத்திரியார் பொறுமையோட இருப்பாரோ தெரியவில்லை.

இந்த ஊட்டுக்குள்ள "ரெலிபோன் கட்சி" சஜித் மைத்திரிக்கு "தூண்டில்" போடுறதா ஒரு கதை உலாவுது.

மைத்திரியருக்கும் சஜித்துக்கும் நல்ல "பொருத்தம்" இருக்குமாப்போலத்தான் கிடக்கு.

இஞ்சால யானை இடறி விழுந்து கிடக்குது. அதை எழுப்ப கரு ஜெயசூரியா வருவார்போல கிடக்கு.

யானையை குழிக்குள்ள விழுத்தின ரணில் தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்றம் வந்து "றோல்சும் மாலு பண்ணும்" தின்ன ஆசைப்படுகிறாராம்.

ஆருக்கு "தேசியப்பட்டியல்" எண்ட புடுங்குப்பாடு இன்னும் யானைக்கட்சிக்காரர் தீர்க்கயில்லை!

எதிர்காலத்தில் யானையும் கையும் ரெலிபோனும் சேரும் வாய்ப்புகளும் இருக்கு!

சேரவேணும். அதுதான் அவைக்கு நல்லது!

மைத்திரியர் அமசடக்கா திரிஞ்சாலும் ஆள் கொஞ்சம் "விறைச்ச கட்டைதான்"

ஈஸ்ரர் பயங்கரவாத தாக்குதல் சம்பந்தமாக கோத்தாவின்ர குழு ஒண்டு விசாரணை செய்யினம்.

10 ≫

# சிங்களவர்களைச் சீண்டாதீர்!

## சபையில் விக்கியை எச்சரித்தார் பொன்சேகா!



இனங்களுக்குள் முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் சிங்களவர்களை சீண்டவேண்டாமென விக்னேஸ்வரனை எச்சரிக்க விரும்புகிறேன். மிதவாதமாக செயற்பட விரும்பிய அமிர்தலிங்கத்தை தமிழ் இளைஞர்களே சுட்டுக் கொன்றனர். ஆயுதமேந்தி நாட்டைப் பிரிக்க முயன்ற பிரபாகரனுக்கு என்ன நடந்தது என்பது உங்களுக்குத் தெரியும். எந்த நிலைமை ஏற்பட்டாலும் இந்த நாட்டை சிங்களவர்கள் விட்டுக்கொடுக்கமாட்டார்கள் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அவர்களின் பொறுமையை சோதிக்க வேண்டாமென நான் கேட்டுக்கொள்கிறேன். 02





கைதுசெய்யப்பட்ட நிலையில் காணாமல்போனவர்களை கண்டறிந்து தருமாறு காணாமற்போனோரின் உறவுகள் கொழும்பு உயர்நீதிமன்றத்தின் முன்னிலையில் அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டதை படத்தில் காணலாம்.

படப்பிடிப்பு : லலித் பெரேரா

## - ஐக்கிய மக்கள் சக்தியின் பேரினவாத நிலைப்பாடு -

# தமிழ் - முஸ்லிம் அரசியல் கட்சிகள் அதிருப்தி!

## தனித்துச் செயற்படுவதா? வெளியேறுவதா? என்பது குறித்து மந்திராலோசனை

● *நமது அரசியல் செய்தியாளர்*

கடந்த பொதுத் தேர்தலில் தமிழ் - முஸ்லிம் பெரும்பான்மை வாக்குகளில் கூடுதல் வாக்குகளை பெற்ற சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, பேரினவாத நிலைப்பாட்டை கொண்டிருப்பது குறித்து அந்த கூட்டணியின் பங்காளிகளான தமிழ் - முஸ்லிம் அரசியல் கட்சிகள் கடும் அதிருப்தியடைந்துள்ளதாக அறியமுடிகின்றது.

தமிழர்களின் சுயநிர்ணய உரிமை தொடர்பில் யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர் ஆற்றிய உரை குறித்து நாடாளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சக்தியே கேள்வியெழுப்பியிருந்தது. அதன் எம்.பி. மனுஷ நாணயக்கார இரண்டு சந்தர்ப்பங்களில் இந்த விடயத்தை நாடாளுமன்றத்தில் பேசியபோது கட்சித் தலைவர் மற்றும் சிரேஷ்ட உறுப்பினர்கள் அமைதி காத்தனர். இதன்பின்னர் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் இந்த விடயத்தை சர்ச்சையாக்கி பெரிதுபடுத்தினர்.

அதேபோல் கொவிட் தாக்கம் காரணமாக இறுதியாக உயிரிழந்த முஸ்லிம் பிரஜையின் ஜனாஸா எரிக்கப்பட்ட விடயம் தொடர்பில் கண்டனத்தை தெரிவிக்க ஐக்கிய மக்கள் சக்தி தவறியதாகவும், இதனால் சிங்கள மக்களின் அதிருப்தியை சம்பாதிக்க வேண்டிவருமென்பதால் அமைதிகாத்ததாகவும் சொல்லப்படுகிறது. 02

## 5 பெண் குழந்தைகளை ஒரே பிரசவத்தில் பெற்றெடுத்த தாய்

கொழும்பு டி சொய்சா பெண்கள் வைத்தியசாலையில், ஒரே பிரசவத்தில் ஐந்து பெண் குழந்தைகளை தாய் ஒருவர் பெற்றெடுத்துள்ளார். இந்த ஐந்து பெண் குழந்தைகளும் கடந்த வெள்ளியன்று பிறந்துள்ளன. குழந்தைகளும் தாயும் நலமாகவும் ஆரோக்கியமான உடல்நிலையுடனும்; இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கம்பஹா, பெபிலியாவெல பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய தாயாரே இவ்வாறு ஐந்து குழந்தைகளை பிரசவித்துள்ளார்.

# புலிகளுடன் தொடர்புடைய இருவரின் பெயர்களை சிவப்புப் பட்டியலிலிருந்து நீக்கக் கேட்கப்பட்டேன்!

## முன்னாள் அமைச்சர் மங்கள அழுத்தம் வழங்கியதாக புலனாய்வு அதிகாரி கேர்ணல் ஷம்மி தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடைய இரண்டு பேரின் பெயர்களை தேடப்படுவோரின் சிவப்புப் பட்டியலிலிருந்து நீக்குமாறு முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தனக்கு அழுத்தங்களை பிரயோகித்ததாக வெளிவிவகார புலனாய்வு தொடர்பாடல் அதிகாரியாக கடமையாற்றிய கேர்ணல் ஷம்மி குமாரரத்ன தெரிவித்துள்ளார்.

அரசியல் பழிவாங்கல் தொடர்பில் விசாரணைகளை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பிரகடனத்துக்கமைய தயாரிக்கப்படும் சிவப்புப் பட்டியலிலிருந்தே இருவரின் பெயர்களை நீக்குமாறு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டதாகவும் அவர் சாட்சி வழங்கியுள்ளார்.

இதன்படி, சுரேன் சுரேந்திரன் மற்றும் இமானுவேல் ஆகியோரின் பெயர்களையே பட்டியலிலிருந்து நீக்குமாறு அழுத்தம் கொடுக்கப்பட்டதாக கேர்ணல் குமாரரத்ன குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச ரீதியில் தமிழீழ விடுதலைப் புலிகளை புத்துயிராக்குவதற்கு நிதியுதவிகளை வழங்கியதாக கூறப்படும் சுரேன் சுரேந்திரன் மற்றும் அந்த அமைப்பின் இனவாத பிரசாரங்களை மேற்கொள்ளும்... 02

# "டொப் சீக்ரட்" - "ஐஸ் ஒன்லி" என்ற சொற்பதங்களை புலனாய்வுத்துறை அதிகாரிகள் புரிந்துகொள்வார்களென நம்பினேன்



## டீ.ஐ.ஜி. நிலந்த!

டொப் சீக்ரட் மற்றும் ஐஸ் ஒன்லி ஆகிய சொற்பதங்களை பயன்படுத்தியவுடன், அதன் அர்த்தத்தை தேசிய புலனாய்வுத் துறையின் தலைமைப் பதவிகளை வகிக்கும் நபர்கள் புரிந்துகொள்வார்கள் என தான் நம்பியபோதிலும், அவர்கள் அதனை புரிந்துகொள்ளவில்லை என அரச புலனாய்வுத்துறையின் முன்னாள் பணிப்பாளரும், கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருமான நிலந்த ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

அதனால், தனக்கு அவரின் பொறுப்பு தொடர்பிலும், கடமைகள் தொடர்பிலும் சஹ்ரானின் தாக்குதல் குறித்து அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட முடியாமை போனது தொடர்பில் தான் கவலையடைவதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சி வழங்கியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தில்ஸான் ஜயசூரிய குறுக்கு கேள்வியொன்றை எழுப்பிய சந்தர்ப்பத்திலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

"டொப் சீக்ரட்" என்ற சொற்பதத்திற்குப் பதிலாக "வெரி அர்ஜன்ட்"... 02



# இலங்கையின் அரசியல் கலாசாரம்

# ஊசலாடும் அரசியலமைப்பு



இலங்கை ஜனநாயக சோசலிஸ குடியரசு என விழித்து எம்மை ஒரு ஜனநாயக நாடாக பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கையின் முக்கிய நோக்கம் என்ன என கேட்டால் பெரும்பான்மை சமூகத்தை சேர்ந்த அரசியல் கட்சிகள் கூறுவது நீண்ட காலத்திற்கான நிலையான, ஸ்திரமான ஆட்சி என்பதாகத்தான் பதில் கிடைக்கும். ஸ்திரமான அரசியல் என்பது அடிப்படையில் ஜனநாயக அம்சமே இல்லை என்பதையே நாம் புரிந்துகொள்ளவில்லை என்பதைத்தான் இது வெளிப்படுத்துகின்றது.

உண்மையில் ஜனநாயகம் என்ற பதத்தை இலங்கையர்கள் நாம் சரியாக புரிந்து வைத்திருக்கின்றோமா என சிந்தித்துப் பார்த்தால், அதன் தேவைப்பாட்டையும், ஜனநாயகத்தின் மூலம் கிடைக்கும் நன்மைகளையும் புரிந்து வைத்திருக்கின்றோமே தவிர, உண்மையில் ஜனநாயகத்தின் பண்புகளையும், முக்கிய அம்சங்களையும் நாம் தெரிந்துகொள்ளவில்லை. பயன்கள், பண்புகள் இதில் என்ன வித்தியாசம் என்ற குழப்பம் இப்போது வாசிப்பவர்களுக்கு எழலாம். ஆம், குழப்பம் ஒருவகையில் நல்லதுதான். அது நம்மை சிந்திக்கச்செய்ய வல்லது.

ஜனநாயகத்தின் பயன்கள் என்றால், அது அத்தகைய ஆட்சியை கடைக்கொள்வதன் மூலமாக நாம் அடையக்கூடிய நன்மைகளாக இருக்கும். உதாரணமாக, பல கட்சி அரசியல் முறைமை, மக்களின் சர்வஜன வாக்குரிமை, நேரடி குடியாட்சி நுட்பங்களை கொண்டிருக்கக்கூடிய தன்மை, அரசியல் பங்காளர்ளாக மக்கள் இருப்பது, அடிப்படை மற்றும் மனித உரிமைகளை அனுபவிக்கும் உச்சபட்ச வாய்ப்பு, பொருளாதார வாய்ப்புகள் இவை எல்லாம் ஜனநாயக நாடாக இலங்கை இருப்பதன் மூலம் எமக்குக் கிடைக்கும் நன்மைகள் அல்லது பயன்கள். இவற்றை அனுபவிக்க முறையான சிறந்த ஜனநாயக ரீதியான ஆட்சி ஒரு நாட்டில் இன்றியமையாதது.

அத்தகைய ஆட்சியை முன்னெடுக்க ஒரு நாட்டின் மக்களும், அரசியல் கட்சிகளும் கைக்கொள்ளவேண்டிய விடயங்களே பண்புகள் எனக் கொள்ளப்படும். விபரமாகக் கூறுவதானால், குறுகிய நோக்கமற்ற அரசியல் கட்சிகளும் நடுநிலையான அமுக்கக் குழுக்களும், மனித உரிமை, அடிப்படை உரிமை பற்றிய அடிப்படை அறிவுள்ள பிரஜைகள், பொருளாதார கொள்கை வகுப்புகள், நீண்ட நிலையான அபிவிருத்தித் திட்டங்கள், ஒற்றுமையான சமூகம் இவை தேவையான அம்சங்கள். இவற்றைவிட மிக முக்கியமானது, விருப்பங்கள் தெரிவுகளுக்கு மதிப்பளிக்கும் தன்மை. இதுவே ஜனநாயகத்தின் அடிப்படை அம்சமாகும்.

பெரும்பான்மையான மக்கள் எதை விரும்புகின்றனரோ அதை தெரிவுசெய்து ஏற்றுக்கொண்டு செல்வது. இலங்கையை பொறுத்தவரையில், இந்த பெரும்பான்மை என்ற வார்த்தையே ஒரு இனவாதத்தை கக்கும் வாத்தையாக அனைத்துத் தரப்புகளாலும் பார்க்கப்படுவதுதான் எமது துரதிர்ஷ்டம்.

பெரும்பான்மை மக்களின் விருப்பம் என்பதன் உண்மைப் பொருள் என்னவெனில், ஒரு நாட்டின் அல்லது சமூகத்தின் பெரும் எண்ணிக்கையான அதாவது, அதிகூடிய மக்களின் தெரிவு என்பதேயாகும். ஆயினும் எமது நாட்டைப் பொறுத்தவரையில் எந்த முடிவாக இருந்தாலும் அதை பெரும்பான்மை சமூகமான சகோதர இன மக்களே தீர்மானித்து விடுவதாக அமைவதால், இயல்பாகவே சிறுபான்மையினர் என விழிக்கப்படும் தமிழ் பேசும் சமூகம் ஓரங்கட்டப்படுவதான நிலைப்பாடு ஏற்பட்டுவிடுகின்றது. இதற்குத் தீர்வு என்றால் அது வேறு ஒரு கோணத்திற்கு இக்கட்டுரையை இட்டுச்செல்லும். ஆகவே இங்கு அதைத் தவிர்த்து, பெரும்பான்மை என்ற வார்த்தைக்கே மீண்டும் வந்தால், நடைமுறையில் எமது ஜனநாயக புரிதல் தோற்றுப்போவதற்கு காரணம், கூடுதலான மக்களின் விருப்பத்திற்கும் பெரும்பான்மை சமூகத்தின் விருப்பத்திற்கும் இடையில் இருக்கக்கூடிய நிகழ்தகவுதான்.

அரசியல் கட்சிகள் ஆட்சிக்கு வந்தால் முதலில் அவர்களது இலக்கு இந்த ஐந்து ஆண்டுகள் என்பதையும் தாண்டி இனிவரும் காலம் அத்தனையும் என்பதாக அமைந்துவிடுவது இலங்கையில் ஜனநாயகம் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவாலாக அமைகின்றது. உதாரணமாக, ஆட்சியில் அமர்த்தப்பட்ட அரசாங்கம் 2010இல், 18ஆம் சீர்திருத்தத்தைக் கொண்டுவர தீவிரமாக செயற்பட்டது. அதன் பலனாக 18ஆம் சீர்திருத்தமும் கொண்டுவரப்பட்டு ஆட்சியில் தாமே தொடர்வதற்கான அத்தனை சட்ட ஏற்பாடுகளையும் சரிசெய்து வைத்திருந்தனர். ஆயினும், இறுதியில் மக்கள் தீர்ப்புக்கே தான் வந்து நிற்கவேண்டும் என்பதை மறந்து போயினர்.

முக்கியமாக, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை மேலும் பலமடையச் செய்கின்றோம் என்ற போர்வையில், ஒரு சர்வாதிகார நாட்டின் ஆட்சி எப்படி இருக்குமோ அத்தகைய ஒரு சாயலுக்கு இலங்கை படிப்படியாக இழுத்துச்செல்லப்பட்டது. இதன் காரணமாகத் தான் 2015இல் பெரும்பாலான மக்களுக்கு ஒரு அதிருப்தி மனநிலை ஏற்பட்டது. குடும்ப ஆட்சி, மாற்றுத் தெரிவுகளுக்கு வழியில்லாத நிலை, அதிகார துஷ்பிரயோகம் இப்படியான பல விடயங்களை அக்காலத்தில் மக்கள் கண்டு அஞ்சினர். அப்போது நல்லாட்சி அரசின் முக்கிய தேர்தல் வாக்குறுதியாக அமைந்ததே 18ஆம் சீர்திருத்தத்தை வலுவிழககச் செய்து 19ஆம் திருத்தம் மூலமாக மீண்டும் அரசியலமைப்பின் ஏடான ஜனநாயகத்தன்மையை வலுப்பெற வைப்பது என்பதாகவே அமைந்திருந்தது.

இருந்தபோதிலும், தற்போது மீண்டும் ஆட்சிபீடம் ஏறியுள்ள ஆளுந்தரப்பு உடனடியாக கை வைக்க நினைப்பது 19ஆவது திருத்தத்தில்தான். இது ஒரு ஆரோக்கியமான ஆட்சிக்கு வித்திடுமா என்பதை ஏனோ எந்த அரசியல்வாதியும் சிந்தித்ததாக தெரியவில்லை. ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறையும் அரசியல் அமைப்பில் திருத்தத்தைத் கொண்டுவர முயற்சிப்பதும், அதிலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவையாக அமையக்கூடிய பாரிய மாற்றங்களை மேற்கொள்வதும் நீடித்த நிலையான அபிவிருத்திக்கு பாதகமாகவே அமையும்.

ஒரு நாட்டின் அரசியலமைப்பு எவ்வளவிற்கு எவ்வளவு அவ்வாறு பேணப்படுகின்றதுவோ அவ்வளவிற்கு அங்கு ஜனநாயகம் பேணப்படுகின்றது என்று பொருள். அரசியலமைப்பு என்பதே ஒரு நாட்டின் உயரிய சட்டமாக இருக்கும்போது ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளும் குழந்தைகள் பந்து விளையாடுவதைப்போன்று ஆட்சியை கைப்பற்றும் தரப்பு சட்டத்தை தமக்கேற்றாற் போல் வளைத்து ஆட்சிசெய்ய முயல்வது மீண்டும் மக்களின் அதிருப்திக்கே வழி சமைக்கும்.

ஆக மொத்தத்தில் 19ஆம் திருத்தம் என்ற பந்து இப்போது நாடாளுமன்றம் என்ற மைதானத்தின் மத்தியில் கிடக்கின்றது. அடுத்த சில மாதங்கள் அது உதைபட்டு ஒரு வழியாக செயலிழந்து அடுத்ததாக ஒரு புதிய பந்தோ அல்லது 18ஆம் திருத்தம் என்ற பழைய பந்தோ உயிர்பெற வாய்ப்புள்ளது. எவ்வாறான போதும், மீண்டும் குடும்ப ஆட்சி அல்லாது மாற்றுத் தெரிவுக்கு வழியற்ற நிலை என்ற அரசியல் புலம் தோன்றினால் மக்கள் நிச்சயம் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் மாற்றுத் தெரிவை தேட முனைவர் அல்லது ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு இடையில் முறுகல் நிலை ஏற்பட்டு அதனால் கடந்த ஆட்சிபோல் வண்டியின் இரு சக்கரங்களும் வேறு வேறு பாதைக்கு இழுக்கும் ஒரு தொய்வு நிலை ஏற்படும்.

இதில் எது நடப்பினும் அது இலங்கையின் பொருளாதார, அபிவிருத்தி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு பெரும் சவாலாக அமையுமே தவிர, ஆக்கப்பூர்வமான எந்த விளைவையும் ஏற்படுத்தாது என்பதை உணர்ந்து ஆளும் தரப்புகள் சட்டத்தை வளைக்க முனைவதை தவிர்த்து இருக்கும் சட்டங்களுக்கு ஏற்ப நாட்டின் நிர்வாகத்தை முன்னெடுப்பது சாலச்சிறந்ததாக அமையும்.

**- யாக்யா -**



விசேட அதிரடிப்படையின் திட்டமிட்ட குற்றச்செயல்கள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கமைய கிரிந்திவெல, மெத்தேகம பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 3 வாள்களுடன் திட்டமிட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய குழுவின் உறுப்பினர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.



இதேவேளை, விசேட அதிரடிப்படையின் சூரியவெவ முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த மற்றுமொரு தகவலுக்கமைய சூரியவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, வீரியாகம பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 687 கிராம் கேரள கஞ்சாவுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## மண்டைதீவில் காணி அளவீடு முறியடிப்பு; தமிழ்க் கட்சிகள் கூட்டு நடவடிக்கை!

மண்டைதீவில் கடற்படையினரின் பாவனைக்காக பொதுமக்களின் காணியை சுவீகரிக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது. இந்த முறியடிப்பு நடவடிக்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.டி.பி. ஆகிய கட்சிகள் கூட்டாக இந்த நடவடிக்கையில் பங்கெடுத்தன.

மண்டைதீவு 7ஆம் வட்டாரத்திலுள்ள 4 குடும்பங்களுக்குச் சொந்தமான 62 பரப்பு காணியை கடற்படையின் தேவைக்காக சுவீகரிக்கும் அறிவித்தல், காணி உரிமையாளர்களுக்கு விடுக்கப்பட்டிருந்தது. இதையடுத்து, இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முயற்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம், பிரதேசத்திலுள்ள தமிழ் அரசுக் கட்சியின் இளைஞர் அணியினர் மேற்கொண்டனர். இதன் தொடர்ச்சியாக இன்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கட்சிகளின் இளைஞர் அணியினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரமுகர்கள் விந்தன் கனகரட்ணம், ஈ.சரவணபவன், சி.சிறிதரன், பா.கஜதீபன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் க.சுகாஷ், ந.காண்டீபன், ஈ.பி.டி.பி.யின் வேலணை பிரதேச சபை தவிசாளர் உள்ளிட்டவர்கள் அங்கு பிரசன்னமாகியிருந்தனர். யாழ். நில அளவையாளர் திணைக்களத்தினர் காணியை அளவீடுசெய்ய முயன்றபோது, அனைத்துத் தரப்பினரும் கூட்டாக எதிர்த்தனர். இதனால் அளவீடு செய்யமுடியாத நிலையில், அளவீட்டுக்கு ஒத்துழைக்கும்படி பொலிஸார் கோரினர். எனினும், பொதுமக்களின் காணியை அளவீடு செய்யமுடியாதென போராட்டக்காரர்கள் தெரிவித்ததையடுத்து, காணியை வழங்க சம்மதம் இல்லையென காணி உரிமையாளர்களின் எழுத்துமூல அறிவித்தலைபெற்று நில அளவை திணைக்களத்தினர் திரும்பிச்சென்றனர்.

## யாழ். பல்கலையின் புதிய துணைவேந்தர் பதவியேற்பு



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக கணிதப் புள்ளிவிபரவியல் துறையின் சிரேஷ்ட பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராஜா கடந்த 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை மிக எளிமையாகத் தனது தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

பல்கலைக்கழகத்தினுள் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் இடம்பெற்ற சமய வழிபாடுகளைத் தொடர்ந்து பீடாதிபதிகள், பல்கலைக்கழகப் பதிவாளர், விரிவுரையாளர்கள், அலுவலர்கள், பணியாளர்களால் துணைவேந்தர் அலுவலகத்துக்கு அழைத்துவரப்பட்ட பேராசிரியர் சிறிசற்குணராஜா தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராஜாவை புதிய துணைவேந்தராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று தெரிவுசெய்திருந்தார்.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் கோட்டாபயவின் பின்னணியில் இயங்கிய 'வியத்கம புத்திஜீவிகள்' அமைப்பின் யாழ்ப்பாண கலந்துரையாடலிலும் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராஜா கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### ஐக்கிய மக்கள்...

**அதேசமயம், 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகாவும் தமிழர்களின் அரசியல் நிலைப்பாடு குறித்து கடுமையாக சாடியிருந்தார். இந்த பின்னணியில் ஐக்கிய மக்கள் சக்தியின் பேரினவாத நிலைப்பாடு குறித்து அதன் பங்காளிகளான தமிழ்-முஸ்லிம் அரசியல் கட்சிகள் கடும் அதிருப்தியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் தனித்துவத்தை பேணி நாடாளுமன்றத்தில் தனி அணியாக செயற்படுவதா? அல்லது முழுமையாக வெளியேறி இயங்குவதா என்பது பற்றி சஜித் அணியின் தமிழ் - முஸ்லிம் அரசியல் கட்சிகள் ஆலோசனை நடத்திவருவதாக மேலும் தெரியவருகின்றது.**

### சிங்களவர்களை...

இவ்வாறு வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது விக்னேஸ்வரன் எம்.பி.யை எச்சரித்தார் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எம்.பி.

### புலிகளுடன்...

அருட்தந்தை இமானுவேல் ஆகியோரின் பெயர்களை தான் சிவப்புப் பட்டியலில் உள்ளடக்கியதாக அவர் கூறியுள்ளார்.

இந்நிலையில், குறித்த இருவரும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சார்பானவர்கள் கிடையாது எனவும், அவர்கள் தனது நண்பர்கள் எனவும் மங்கள சமரவீர தன்னிடம் கூறியதாக கேர்ணல் சாட்சி வழங்கியுள்ளார். இந்த பெயர்ப்பட்டியல் விவகாரம் தொடர்பில் ஆராய்வதற்காக தன்னை மங்கள சமரவீர வருகை தருமாறு அழைத்த சந்தர்ப்பத்தில், அங்கு முன்னாள் பிரதி அமைச்சர் அஜித் பீ பெரேராவும் இருந்ததாக கேர்ணல் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன், பாதுகாப்புப் பிரிவினர், ராஜபக்ஷ குடும்பத்தினர் ஆட்சிசெய்த சந்தர்ப்பத்தில் செயற்பட்ட விதத்தைபோன்று, தற்போது செயற்படக்கூடாது எனவும் அவர் குறிப்பிட்டதாக கேர்ணல் கூறியுள்ளார்.

### டொப் சீக்ரட்...

அல்லது “டொப் ப்ரையோரிட்டி” ஆகிய சொற்பதங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கும் பட்சத்தில், குறித்த தகவல் வேகமாக தேசிய புலனாய்வுப் பிரதானிக்கு சென்றிருக்க வாய்ப்புள்ளது என சட்டத்தரணி தில்ஸான் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இவ்வாறு செய்யாமையால், உங்களின் கடமைகளை நீங்கள் தவறவிட்டுள்ளீர்களா? என சட்டத்தரணி தில்ஸான் ஜயசூரிய கேள்வி எழுப்பியுள்ளார். அதற்குப் பதிலளித்த நிலந்த ஜயவர்தன, தான் புலனாய்வு அதிகாரியாக கடமையாற்றிய காலப்பகுதியில் “சீக்ரட்”, “டொப் சீக்ரட்”, “ஐஸ் ஒன்லி” ஆகிய வசனங்கள் பயன்படுத்தப்பட்டபோதிலும், “வெரி அர்ஜன்ட்”, “டொப் ப்ரையோரிட்டி” ஆகிய சொற்பதங்கள் பயன்படுத்தப்படவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான வசனங்களை பயன்படுத்தும் பட்சத்தில், புலனாய்வுத் தகவல்கள் மற்றும் புலனாய்வு பெறுமதி யாது? அது தொடர்பில் முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கை என்ன? ஆகியன புலனாய்வுத்துறையிலுள்ள அதிகாரிகள், பாதுகாப்புச் செயலாளர், பொலிஸ்மா அதிபர் ஆகிய பொறுப்புகளிலுள்ளவர்கள் அறிந்திருப்பார்கள் என தான் நம்பியதாகவும் அவர் கூறியுள்ளார்.

எனினும், தான் அனுப்பிவைத்த அறிக்கையை சரியான முறையில் புரிந்துகொண்டிருக்கும் பட்சத்தில், ஈஸ்டர் தின தாக்குதலை தவிர்த்திருக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.





# கிராமத்துக்குள் வரும் யானைகளை மீண்டும் காட்டுக்கு திருப்பியனுப்பும் பொறிமுறையை உருவாக்குங்கள்!

## ஜனாதிபதி கோட்டாபய அதிகாரிகளுக்கு பணிப்புரை

காட்டு யானைகள் கிராமங்களுக்குள் வருவதற்கு பதிலாக காட்டுக்கே திருப்பி அனுப்பக்கூடிய பொறிமுறையொன்றை தயார்செய்து யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையேயுள்ள மோதலுக்கு இரண்டு வருடங்களுக்குள் நிலையான தீர்வொன்றை வகுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

பல்வேறு மாவட்டங்களில் மக்கள் முகங்கொடுத்து வருகின்ற காட்டு யானைகள் கிராமங்களுக்குள் வரும் பிரச்சினை பற்றி சுமார் 40 வருட காலங்களாக கலந்துரையாடப்பட்டு வருகின்றது. பல்வேறு தீர்வுகளை செயற்படுத்தினாலும் பிரச்சினை தீரவில்லை. மனிதர்களையும் யானைகளையும் பாதுகாக்கக்கூடிய உடனடி மற்றும் நிலையான தீர்வை கண்டறிவது மிக முக்கியம் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

வனஜீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலிகள் மற்றும் அகழிகைகளை அமைத்தல் உள்ளிட்ட பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் மற்றும் காடுகளை மீண்டும் வளர்த்தல் மற்றும் வனவளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் எதிர்கால திட்டங்கள் தொடர்பாக நேற்றுமுன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

2019ஆம் ஆண்டு யானைகள் கிராமங்களுக்குள் உட்புகுந்ததினால் 122 மனித உயிர்கள் இழக்கப்பட்டன. 407 காட்டு யானைகள் இறந்துள்ளன. இவ்வருடத்தில் கடந்த 8 மாதங்களில் இழந்த மனித உயிர்களின் எண்ணிக்கை 62 ஆகும். இறந்த யானைகள் 200 ஆகும். இதனால் பயிர்ச்செய்கைகளுக்கும் அன்றாட வாழ்வுக்கும் அதுபோன்று காட்டு யானைகளின் இழப்புக்கும் ஏற்பட்டுள்ள சவால் மிகப் பெரியது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

12 இலட்சம் ஹெக்டெயார் வன நிலங்கள் வனஜீவராசிகள் திணைக்களத்தின் கைவசம் உள்ளது. காட்டு யானைகளின் உணவு தொடர்பாக கண்டறிவதும் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பொறுப்பென ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நீண்டகாலமாக நிலவிவருகின்ற பிரச்சினைக்குத் தீர்வொன்றை தேடுவதற்கு அல்லது உபாய மார்க்கங்களை தயாரிப்பதற்கு குறித்த துறைசார் அதிகாரிகளுக்கு முடியாமல் போனதையிட்டு ஜனாதிபதி தனது அதிருப்தியை தெரிவித்தார்.

காட்டு யானைகள் கிராமங்களுக்குள் ஊடுறுவதைத் தடுத்து, மனித வாழ்வையும் பயிர் நிலங்களையும் பாதுகாப்பதற்காக நிலையான தீர்வொன்றை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக கண்டறிவதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

வன ஒதுக்கீடுகளிலுள்ள குளங்கள், நீர் நிலைகளை புனர்நிர்மாணம் செய்வதுடன், அப்பிரதேசங்களில் புல்லினங்களை வளர்த்தலை அதிகரிப்பதன் முக்கியத்துவத்தை பொருளாதார புத்தெழுச்சி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

கண்டல் தாவர பாதுகாப்பு மற்றும் அதனை விரிவுபடுத்தலின் முக்கியத்துவம் பற்றியும் விரிவாக கலந்துரையாடப்பட்டது. கண்டல் தாவரங்களை பயிரிடும்போது மக்களுக்கு பயன் தரக்கூடிய வகையில் சட்டங்களை இலகுபடுத்த வேண்டியுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கண்டல் பிரதேசங்களில் இறால் வளர்ப்பை மேற்கொள்வதற்குள்ள இயலுமை பற்றியும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.



ஆறுகளில் மணல் அகழ்தலை கட்டுப்பாட்டுடன் முன்னெடுப்பதற்கு அப்பிரதேச மக்களுக்கு அனுமதியளிப்பது தொடர்பாகவும் அவதானம் செலுத்தப்பட்டது. மக்களின் ஊக்கப்படுத்தலுடன் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்கள் மக்களின் அவதானத்திலிருந்து நீங்கியுள்ள காலப் பகுதிகளில் அதனைத் தொடர்ந்து செயற்படுத்துவது அதிகாரிகளின் பொறுப்பாகுமென ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அமைச்சர் சீ.பி.ரத்னாயக்க, இராஜாங்க அமைச்சர் விமலவீர திசாநாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர மற்றும் அமைச்சரவை, இராஜாங்க அமைச்சுகளின் செயலாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## களுபோவிலயில் சுகாதாரமிகு உணவு விற்பனை நிலையம்



வரையறுக்கப்பட்ட பசுமை கூட்டுறவுச் சங்கம் மற்றும் பசுமை நட்புறவு வேலைத்திட்டத்தின் அங்கமாக ஏற்பாடுசெய்யப்பட்ட உடற் சுகாதாரத்துக்கு நலம் பயக்கும் தேசிய உணவுப் பாவனை ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ் கொழும்பு தெற்கு, களுபோவில - போதனா மருத்துவமனையில் சுகாதாரமான உணவு வகைகளை விற்பனை செய்யும் விற்பனை நிலையமொன்று மேல் மாகாண ஆளுநர் மார்ஷல் ஒவ் தி எயார் போஸ் ரொஷான் குணதிலக்கவினால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சுகாதாரத்துறை அதிகாரிகள், கூட்டுறவாளர்கள், விவசாயத்துறை வல்லுநர்கள் உட்பட ஏராளமான விருந்தினர்கள் கலந்து கொண்டனர்.

## 'வலம்புரி கவிதா வட்டம் 'நடத்தும் 70 ஆவது கவியரங்க நிகழ்வு

வலம்புரி கவிதா வட்டம் (வகவம்) நடத்தும் 70ஆவது கவியரங்கம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை பௌர்ணமி நாளன்று காலை 10 மணிக்கு கொழும்பு பழைய நகர மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலக்கியப் பேச்சாளரும் ஈஸ்வரன் பிரதர்ஸ் நிறுவனத் தலைவருமான கணேஷ் ஈஸ்வரன் பிரதம அதிதியாக கலந்துகொள்ளவுள்ளார். கவிஞர் கம்மல்துறை இக்பால் தலைமையில் மேற்படி கவியரங்கம் நடைபெறும்.

இக்கவியரங்கில் நான்கு நிமிடங்களுக்குட்பட்ட இந்நிலையில் கவிதை வாசிக்க விரும்புவோர் தலைவர் நஜ்முல் ஹுசைன் 0714929642 அல்லது செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன் 0777388149 அல்லது செயற்குழு உறுப்பினர் கவிஞர் ஈழகணேஷ் 0717563646 உடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். கொரோனா வைரஸ் சுகாதார விதிகளுக்கமைய நிகழ்வு நடைபெறும்.

சுபீட்சத்திற்கான திருப்புமுனை




இது MADE IN Sri Lanka யுகமாகும்!

MADE IN SRI LANKA யுகமொன்றை உருவாக்க விவசாயம், சிறுபோகம், மீன்பிடி, களிமண், பித்தளை, இரத்தினம் மற்றும் ஆபரணங்கள், பதிக் ஆகிய தொழில்துறைகளில் ஈடுபட்டுள்ள உங்களுக்காக கைத்தொழில் அதிகார சபையின் முழுமையான ஆலோசனைகள் மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் மக்கள் வங்கி அறிமுகப்படுத்தும் MADE IN SRI LANKA கடன் திட்டத்திற்கு நீங்களும் இன்றே விண்ணப்பம் செய்யுங்கள்.

உங்கள் வேலைத்திட்டம் அல்லது வணிகத்திற்கு தேவையான ஆலோசனைகள் மற்றும் தொழில்நுட்ப உதவி கைத்தொழில் அதிகாரச் சபையால் வழங்கப்படும் என்பதுடன் நிதி தொடர்பான வசதிகள் மக்கள் வங்கியால் வழங்கப்படும்.

MADE IN SRI LANKA
கடன் திட்டத்தின் நோக்கம்

- உள்நாட்டு தொழிற்துறையை கட்டியெழுப்புதல்
- ஏற்றுமதியை அதிகரித்தல்
- இறக்குமதியைக் குறைக்கும் திறன் கொண்ட தொழில்துறையை ஏற்படுத்தல்
- உள்நாட்டு தயாரிப்புகளின் தரத்தினை அதிகரித்தல்
- உள்நாட்டு தொழில்வாய்ப்பு ஊடாக சுயதொழில்களை அதிகரித்தல்
- பிராந்திய அபிவிருத்தி

MADE IN Sri Lanka கடன் திட்டம்

கைத்தொழில் அமைச்சின் கீழியங்கும் கைத்தொழில் அபிவிருத்தி சபை

மேலதிக விபரங்கள் இன்றே உங்களுக்கு அருகிலுள்ள மக்கள் வங்கியில் அல்லது 011 2481356 இலக்கத்தை அழையுங்கள்.

*நிபந்தனைகள் உண்டு

www.peoplesbank.lk
AA+ (lka) Fitch Rating, AAA- Brand Finance Rating

PEOPLE'S BANK
The Bank of the People

# இது மூன்று சக்கரத் தேரு...



தொலைக்காட்சி
மின்விசிறி
குடிநீர்ப் போத்தல்
சார்ஜர் வசதி
பற்றுச்சீட்டு
Wi-fi

சமீபத்தில் பயணம் செய்யும்போது ஓட்டோ சாரதியொருவரை சந்திக்க நேர்ந்தது. அதற்கு முன்னரும் ஓட்டோவில் பயணம்செய்த அனுபவம் இருந்திருந்தாலும், அன்று அந்த ஓட்டோவில் பயணித்தபோது அதில் ஒரு புது அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. பயணிகளுக்கு எவ்வாறான வசதிகள் தேவையோ அவற்றை பயணிகளின் எதிர்பார்ப்புக்கேற்பவும், தனது எண்ணங்களுக்கேற்பவும் நேர்த்தியாக தனது ஓட்டோவை அவர் வடிவமைத்திருந்தார்.

அவருடன் பயணித்த அனுபவத்தையும், இந்த சுயநல பூமியில் இவர் போன்ற சிலர் இருக்கிறார்கள் என்பதை பகிர்ந்துகொள்ளவும் விரும்பி ஒரு நேர்காணலை மேற்கொண்டேன். அவருடனான கலந்துரையாடல் வருமாறு:

"சவாரி வரும் பயணிகளின் நலன் குறித்தும் அவர்களின் தேவைகள் தொடர்பிலும் மிக அவ தானத்துடனே செயற்படுகிறேன். அவர்களுக்கு நான் வழங்கும் சேவையை நேர்மையான முறையில் வழங்கவேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு. அதேபோல், பயணிகள் எதிர்பார்க்கும் சகல வசதி களுடனும் எனது லிபா ஓட்டோவை வடிவமைத்துள்ளேன்" என்று உணர்வுபூர்வமான கருத்தை தெரிவித்தார் ஓட்டோ சாரதியான ஹஜரின் ஹுசைன்.

ஹஜரின் ஹுசைன் என்பவர் கொழும்பு, மருதானை பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயதுடைய ஓட்டோ சாரதி. இலங்கையில் ஓட்டோவின் பயன்பாடு ஆரம்பித்த காலப்பகுதியிலிருந்து, ஓட்டோ சாரதியாக பணிபுரிந்து வருகிறார். இந்த ஓட்டோவில் கிடைக்கும் நாளாந்த வருமானத்தி னூடாகவே தனது குடும்பச் செலவுகளையும் கவனித்துவருகிறார்.

அவரது ஓட்டோ தொடர்பிலும் அவரது தொழில்தொடர்பான அனுபவங்களையும் அவர் இவ்வாறு பகிர்ந்துகொண்டார்.

கேள்வி: எவ்வளவு காலமாக இந்தத் தொழிலில் இருக்கிறீர்கள்?

பதில்: கடந்த 30 வருடகாலமாக ஓட்டோ ஓட்டுவதை தொழிலாகக் கொண்டுள்ளேன். நீண்டகால அனுபவம் இருப்பதால், வாடிக்கையாக எனது வாகனத்தில் பயணிக்கும் வாடிக்கையாளர்களும் இருக்கிறார்கள்.

கேள்வி: 30 வருடங்களாக இந்தத் தொழிலை செய்துவருவதாக கூறினீர்கள். இந்த மூன்று தசாப்தத்தில் இந்தத் தொழிலில் எவ்வாறான மாற்றங்களைக் காண்கிறீர்கள்?

பதில்: 13 ஸ்ரீ வாகன இலக்கத் தகடு பயன்படுத்தப்பட்ட ஆரம்ப காலத்திலிருந்து ஓட்டோ சாரதியாக இருக்கிறேன். அந்தக் காலத்தில் 10 ரூபா அல்லது 15 ரூபாவே கட்டணங்களாக அறவிடுவோம். மீற்றர்கள் எதுவும் இருக்கவில்லை. உதாரணமாக, கொள்ளுப்பிட்டியிலிருந்து தேசிய வைத்தியசாலைக்கு வருவதாக இருந்தால் 10 ரூபா அல்லது 15 ரூபாவே கிடைக்கும்.

பொருட்கள் எல்லாம் விலை குறைவாக இருந்தது. ஆனால், இன்று ஒரு மீற்றருக்கு 50 அல்லது 60 ரூபா என்ற அடிப்படையில் கட்டணம் அறவிடப்படுகிறது. நான், சவாரி ஆரம்பித்த இடத்திலிருந்து முதல் ஒரு கிலோமீற்றருக்கு 50 ரூபா என்ற அடிப்படையில் அடுத்துவரும் ஒவ்வொரு கிலோமீற்றருக்கும் 40 ரூபா என்ற அடிப்படையில் கட்டணம் அறவிடுகிறேன். எனது தொழிலில் நான் நேர்மையாக இருக்கிறேன்.

கேள்வி: உங்களது ஓட்டோவை 'லிபா' என்று அழைப்பதற்குக் காரணம் என்ன?

பதில் : லிபா என்பது எனது மகளின் பெயர். அதன் காரணமாகவே அதனை லிபா என்று அழைக்கின்றேன். ஓர் உணர்வுபூர்வமாகவே அந்த பெயரை வைத்துள்ளேன்.

கேள்வி : பயணிகளுக்காக உங்களது ஓட்டோ பயணிகளுக்காக எவ்வாறான வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்துள்ளீர்கள்?







பதில் : சவாரி செய்தமைக்கான கட்டணச்சீட்டு வழங்கப்படுகிறது. இந்த முறை பயணிகளுக்கு பயனாக இருக்கிறது. என்னுடன் சவாரி வரும் பயணிகள் அவர்களது பெறுமதிமிக்க பொருட்களை ஓட்டோவில் கை தவறவிட்டுச் சென்றுவிடுவார்கள். அவ்வாறான பொருட்களை எனக்கு அழைப்பு விடுத்து மீண்டும் பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறு பெறுமதிமிக்க கைத்தொலைபேசி போன்ற பொருட்களை மீண்டும் அவர்களுக்கு வழங்கியுள்ளேன்.

சிறிய தொலைக்காட்சியொன்று, 2 சிறிய மின்விசிறிகள், எயார் கூலர், கைகளை சுத்தம் செய்யும் செனிடைசர், குடிநீர்ப் போத்தல், தொலைபேசியின் மின்சக்தி குறைவடைந்தால் அதனை சார்ஜ் செய்வதற்கான வசதி, முதலுதவிப் பெட்டி, சஞ்சிகைகல் போன்ற பயணிகளுக்குத் தேவையான சகல வசதிகளையும் எனது ஓட்டோவில் ஏற்படுத்திக் கொடுத்துள்ளேன். மேலும் ஓட்டோவின் இரு பகுதிகளிலும் பாதுகாப்புக் கதவுகள், பயணிகள் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய வகையில் பொருத்தப்பட்டுள்ளன.

**wi-fi** வசதியும் இருக்கிறது. ஆனால், பயணிகளின் தொலைபேசிகளில் இணைய வசதிகள் இருப்பதால் **wi-fi** ஐ அவர்கள் எதிர்பார்ப்பதில்லை. அவ்வாறு அவர்கள் கேட்டால் அந்த வசதியை ஏற்படுத்திக்கொடுப்பேன்.

கேள்வி: ஏனைய ஓட்டோக்களைவிட உங்களின் ஓட்டோ பயணிகளுக்கு ஏற்றவகையிலான வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்திருக்கிறீர்களே? ஏன் இவ்வாறு செய்யவேண்டும் என்ற சிந்தனை வந்தது?

பதில்: நான் நீண்ட நாட்களாக ஓட்டோ ஓட்டுவதையே எனது தொழிலாக இருந்து வருகிறது. இதனால் பயணிகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்பது எனது விருப்பம். அதேபோல், என்னுடன் பயணம்செல்லும் பயணிகளுக்கு பயணம் திருப்திகரமானதாக இருக்கவேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பு. அதற்காகவே எனது ஓட்டோவை பயணிகளுக்கு ஏற்றவகையில் மாற்றியமைத்துள்ளேன்.

கேள்வி: ஓட்டோ ஓட்டுவதே உங்களின் பிரதான தொழிலாக இருக்கிறது. இதனூடாக உங்களுக்குக் கிடைக்கும் வருமானம் உங்களுக்குத் திருப்திகரமானதாக இருக்கிறதா?

பதில்: போதுமானதாக இருக்கிறது. நாளொன்றுக்கு ஆயிரத்து 500 ரூபாவிலிருந்து இரண்டாயிரம் வரையில் வருமானம் கிடைக்கிறது. இதில் கிடைக்கும் வருமானத்திலேயே எனது சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்துவருகிறேன்.

கேள்வி : எமது நாட்டை பொறுத்தவரையில் அவசர பயணம் என்றால், ஓட்டோ தான் பயணிகளின் தெரிவாக இருக்கும். சிறிய தூர பயணம் சென்றாலும் அதிகளவான கட்டணத்தை அறவிடும் நிலை காணப்படுகிறது. இதுதொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன?

பதில் : யாராக இருந்தாலும் சென்ற தூரத்துக்கு ஏற்ற கட்டணத்தைவிட அதிக கட்டணம் செலுத்துவதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அதை நான் தவறாகவே கருதுகிறேன்.

கேள்வி : கொவிட் - 19 காலத்தில் உங்களது தொழில் நடவடிக்கைகள் எவ்வாறு இருந்தன? உங்களுக்குத் தேவையான வருமானம் கிடைத்ததா?

பதில் : கொரோனா நோய்த்தொற்று காரணமாக நாடுபூராகவும் ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. கொழும்பிலும் நீண்டகாலமாக தொடர்ச்சியான ஊடரங்குச்சட்டம் அமுலில் இருந்தது. அந்தக் காலப்பகுதியில் என்னால் தொழிலுக்குச் செல்வதற்கான நிலை இருக்கவில்லை. வருமானமும் இருக்கவில்லை. அந்த நாட்களை சமாளித்துவிட்டோம்.

எனக்கு மூன்று பெண் குழந்தைகள். அவர்களில் இருவர் திருமணமானவர்கள். எனது மூன்று குழந்தைகளுக்கான செலவுகளையும் ஓட்டோ ஓட்டுவதால் கிடைக்கும் வருமானத்தினூடாகவே பார்த்து வருகிறேன்.

கேள்வி : உங்களது ஓட்டோவிலிருக்கும் வசதிகளை பொருத்துவதற்கு எவ்வாறான முயற்சிகளை செய்தீர்கள்?

பதில் : பாரியளவான நிதியை செலவு செய்திருந்தேன். செலவு என்பதைவிட ஒவ்வொரு இடங்களுக்கும் அழைந்துதிரியவேண்டியதாக இருந்தது. பயணிகளின் சௌகரியத்துக்காக நான் செலவுகளை பொருட்படுத்துவதில்லை.

கேள்வி: பயணிகளுடன் தூரப் பயணம் செல்வதற்கான வாய்ப்பு கிடைத்ததா?

பதில் : ஆம். மஹியங்கனை, பிபில, மடோல்துவ, கண்டி, நுவரெலியா, காலி, மாத்தறை, அநுராதபுரம் போன்ற பிரதேசங்களுக்கு பயணிகளுடன் பயணித்துள்ளேன்.

கேள்வி : அவ்வாறு உங்களுடன் பயணம் வரும் பயணிகள் உங்களின் ஓட்டோ தொடர்பில் எவ்வாறான கருத்துகளை பகிர்ந்துகொள்வார்கள்?

பதில் : அவர்களின் மகிழ்ச்சியை எனக்கு அறியத்தருவார்கள். தூரப்பயணம் செல்வதாக இருந்தால் என்னை தொலைபேசியினூடாக தொடர்புகொள்ளும் பயணிகளும் இருக்கிறார்கள். காலையில் தொழிலுக்காக செல்பவர்களும் எனக்கு அழைப்பு விடுத்து எனது ஓட்டோவில் பயணம் செய்வார்கள். ஒருசில பயணிகள் அவர்கள் பயணம் சென்ற இடத்துக்கு ஏற்ற கட்டணத்தைவிட மேலதிக கட்டணங்களையும் வழங்குவார்கள்.

கேள்வி : ஒரு நாளைக்கு எத்தனை சவாரிகள் செல்வதற்கான வாய்ப்பு கிடைக்கும்?

பதில் : குறிப்பாக கூறுவதானால் 15 வரையில் சவாரிகள் செல்வேன்.

கேள்வி : உங்களுடன் பயணிக்கும் பயணியின் சவாரி முடிவடைந்ததும் கட்டண அறவீட்டு சீட்டொன்றையும் (டிக்கட்) வழங்குகிறீர்கள். பொதுவாக அந்த நடைமுறை பஸ்களிலேயே இருக்கிறது. ஓட்டோவில் இந்த நடைமுறை எந்தளவுக்கு சாத்தியமாகிறது? அந்த கட்டண அறவீட்டுச் சீட்டை எந்தமுறையில் பொருத்தியிருக்கிறீர்கள்?

பதில் : என்னுடன் சவாரிசெய்யும் பயணிகள் என்மீதுள்ள நம்பிக்கையை தக்கவைத்துக்கொள்வதற்காகவே இந்த முறையை ஓட்டோவில் பொருத்தியுள்ளேன்.

**சந்திப்பு: நா.தினுஷா**
**படப்பிடிப்பு: கிரிஷான் காரியவசம்**

ஓட்டோவில் பொருத்தப்பட்டிருக்கும் கட்டண அறவீட்டுக் கருவியுடன் (மீற்றர்) இந்த டிக்கட் கருவியும் இணைக்கப்பட்டுள்ளது. சவாரி முடிவடைந்ததும் அந்தக் கட்டணச் சீட்டு பயணிகளுக்கு வழங்கப்படும்.

அந்தக் கட்டணச்சீட்டில் அவர்களின் கட்டணத் தொகை, பயணித்த தூரம், பயணித்த நேரம் அனைத்தும் குறிப்பிடப்பட்டிருக்கும். அலுவலக வேலைக்காக என்னுடன் சவாரி வரும் பயணிகளுக்கு அவர்களது அலுவலகத்துக்கு சென்று பயணத்தொகை உள்ளிட்ட விபரங்களை வழங்கமுடியும்.

கேள்வி : ஓட்டோ சவாரி கட்டணங்கள் குறித்த தொகையை விட அதிகளவில் அறவிடப்படுவது தொடர்பில் என்ன நினைக்கிறீர்கள்?

பதில் : நான் அந்தத் தவறை செய்யாததால் அதுதொடர்பில் எனக்கு குறிப்பிட்டுக் கூறமுடியாது. ஆனால், என்னுடன் சவாரி வரும் பயணிகள் இதுபோன்ற அனுபவங்களை என்னுடன் பகிர்ந்துகொண்டுள்ளார்கள்.

# ஆஷூரா – தாஷூஆ நோன்புகளின் சிறப்பு



இஸ்லாமிய வருடத்தின் முதல் மாதமான "முஹர்ரம்" நம்மத்தியில் மலர்ந்துள்ள நிலையில், (29ஆம் திகதி) சனி, (30ஆம் திகதி) ஞாயிறு நாட்களில இரு முக்கிய சுன்னத்தான நோன்புகளான "ஆஷூரா" "தாஷூஆ" நோன்புகளை நோற்பதற்கு முஸ்லிம்கள் தயாராகிவருகின்றனர். இதுபற்றி, ரசூலுல்லாஹி ஸ்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் பல்வேறு ஹதீஸ்கள் மூலமாக சிறப்பித்துக் காண்பித்துள்ளார்கள்.

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "ஆஷூரா எனும் இந்த நாளையும் ரமழான் என்னும் இந்த மாதத்தையும் தவிர, வேறெதையும் ஏனையவற்றைவிடச் சிறப்பித்து தேர்ந்தெடுத்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நோன்பு நோற்பதை நான் பார்த்ததில்லை." (புகாரி 2006)

கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் கூறினார்கள். "நோன்புகளில் ரமழானுக்குப் பின் மிகவும் சிறப்பான நோன்பு அல்லாஹ்வின் மாதமான முஹர்ரம் மாதத்தின் நோன்பாகும். கடமையான தொழுகைக்குப் பின் மிகச் சிறப்பான தொழுகை இரவுத் தொழுகையாகும்."

(முஸ்லிம், அஹ்மத்)

இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அறியாமைக்கால (குறைஷி) மக்கள், ஆஷூராவுடைய நாளன்று நோன்பு நோற்கக்கூடியவர்களாக இருந்தார்கள். ரமழான் நோன்பு கடமையாக்கப்படுவதற்கு முன்னர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் முஸ்லிம்களும் அந்நோன்பை நோற்றார்கள். ரமழான் நோன்பு கடமையாக்கப்பட்டபோது நபிகள் நாயகம் ஸ்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "நிச்சயமாக ஆஷூரா நாள் அல்லாஹ்வுடைய நாட்களில் உள்ள நாளாகும். எனவே, விரும்பியவர் அந்நாளில் நோன்பு நோற்கலாம். விரும்பியவர் விட்டுவிடலாம்" எனக் கூறினார்கள். (முஸ்லிம் 1901)

ரமழான் நோன்பு கடமையாக்கப்படுவதற்கு முன்னர் மக்கள் ஆஷூரா (முஹர்ரம் பத்தாம் நாளில்) நோன்பு நோற்று வந்தார்கள். அதுதான் க..பாவுக்குப் புதிய திரை போடப்படும் நாளாக இருந்தது.

அல்லாஹ் ரமழானுடைய நோன்பைக் கடமையாக்கியபோது, "யார் ஆஷூராவுடைய நோன்பு நோற்க விரும்புகிறார்களோ, அவர் அதை நோற்றுக்கொள்ளட்டும். யார் அதை விட்டுவிட விரும்புகிறாரோ, அவர் அதை விட்டுவிடட்டும்" என்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள். ஆயிஷா (ரலி). (புகாரி 1592)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனா வந்தபோது, யூதர்கள் ஆஷூரா நாளில் நோன்பு நோற்பதைக் கண்டார்கள். "இது என்ன நாள்?" என்று கேட்டார்கள். "இது மாபெரும் நாள்! மூஸா (அலை) அவர்களை இந்த நாளில்தான் அல்லாஹ் காப்பாற்றினான். .ஃபிர்அவ்னின் கூட்டத்தாரை (கடலில்) மூழ்கடித்தான். ஆகவே, மூஸா (அலை) அவர்கள் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தும் விதத்தில் இந்நோன்பை நோற்றார்கள்" என்று யூதர்கள் கூறினர். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், "நான் அவர்களை விட மூஸாவுக்கு நெருக்கமானவன்" என்று கூறிவிட்டு, அந்த நாளில் தாமும் நோன்பு நோற்று, தம் தோழர்களையும் நோன்பு நோற்கும்படி கட்டளையிட்டார்கள். இப்னு அப்பாஸ் (ரலி). (புகாரி 3397)

### பாவங்களுக்குப் பரிகாரம்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "முஹர்ரம் பத்தாவது நாளில் (ஆஷூரா) நோன்பு நோற்பதை அதற்கு முந்தைய ஓராண்டின் பாவத்திற்குப் பரிகாரமாக அல்லாஹ் ஆக்குவான் என நான் எதிர்பார்க்கிறேன்." அபூ கதாதா (ரலியல்லாஹு அன்ஹு) (முஸ்லிம் 1976)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஆஷூரா நோன்பு பற்றிக் கேட்கப்பட்டது. அதற்கு, "அது கடந்த ஆண்டின் பாவத்திற்குப் பரிகாரமாகும்" என்றார்கள். அபூ கதாதா (ரலி) (முஸ்லிம் 1977)

### யூதர்களுக்கு மாறு செய்தல்

அல்லாஹ்வுடைய தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ஆஷூரா நாளில் தாமும் நோன்பு நோற்று, நோன்பு நோற்குமாறு மக்களுக்கும் கட்டளையிட்டார்கள். அப்போது மக்கள், "(அது) யூதர்களும் கிறிஸ்தவர்களும் கண்ணியப்படுத்தும் நாளாயிற்றே...?" என்று வினவினர். அதற்கு நபியவர்கள், "இன்ஷா அல்லாஹ், (அல்லாஹ் நாடினால்) அடுத்த ஆண்டில் நாம் (முஹர்ரம்) ஒன்பதாவது நாளில் (சேர்த்து) நோன்பு நோற்போம்...!" என்று கூறினார்கள். ஆனால், அடுத்த ஆண்டு வருவதற்குள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்கள் வபாத்தாகிவிட்டார்கள்.

மற்றொரு அறிவிப்பில், "அடுத்த ஆண்டு வரை நான் உயிரோடு இருந்தால், ஒன்பதாவது நாளிலும் நோன்பு நோற்பேன்" என்று வந்துள்ளது. இப்னு அப்பாஸ் (ரலி) (முஸ்லிம் 1916, 1917)

எனவே, ஷூராவுடைய நோன்புகளை முஹர்ரம் ஒன்பதாம், பத்தாம் (அதாவது, எதிர்வரும் சனி மற்றும் ஞாயிறு) நாட்களில் நோற்று, அல்லாஹ்வின் அன்பையும், ரஹ்மத்தையும் பெற்றுக்கொள்ள முனைவோமாக...!

**மௌலவி ஐ.ஏ.காதிர் கான் (தீனிய்யா),**
**மினுவாங்கொடை.**

# இனங்களை பிளவுபடுத்தும் முயற்சிகளை தோற்கடித்து ஜனாதிபதிக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்

**- கல்முனை ஸ்ரீ சுபத்திரராம விகாராதிபதி**



(பாண்டிருப்பு)

நாட்டுமக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மீது வைத்துள்ள விசுவாசத்தில் புதிய அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை அதிகாரத்தை வழங்கியுள்ளனர். எமது நாட்டை பிளவுபடாத இறைமையுள்ள ஒருதேசமாக கட்டியெழுப்பும் வல்லமை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கட்சிக்கே இருக்கின்றது. அந்தவகையில் இன, மத, குல வேறுபாடுகளைக் களைந்து நாம் இலங்கையர் என்றவகையில் மூவின மக்களின் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் செயற்படவேண்டும். கடந்த முப்பது வருட காலங்களுக்கு மேலாக அபிவிருத்தியில் பின்னடைந்துள்ள தேசத்தை ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு திட்டத்திற்கமைய மீளக் கட்டியெழுப்பவேண்டும்.

- இவ்வாறு கல்முனை ஸ்ரீ சுபத்திரராம மஹாவிகாரையின் விகாராதிபதி சங்கைக்குரிய ரன்முதுகல சங்கரட்ண தேரர் தெரிவித்தார்.

கல்முனை விகாரையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட விகாராதிபதி அங்கு மேலும் தெரிவிக்கையில்,

மிக நீண்டகாலத்துக்குப் பின்னர் நாட்டில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அதிகாரத்துடன் பலமுள்ள ஆட்சியமைந்துள்ளது. இந்த ஆட்சிப்பலத்தை வைத்து நாட்டில் சிதைவடைந்துள்ள பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவேண்டும். ஜனாதிபதியும், பிரதமரும் முன்னெடுக்கும் திட்டங்களுக்கு மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். தற்போது நாட்டை முன்னேற்றப்பாதையில் கொண்டுசெல்வதற்கு தடையாக இருக்கும் அரசியலமைப்பின் சில சரத்துகளையும் நீக்குவதுடன், புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்க வேண்டும்.

இந்நாட்டில் இனங்களை பிளவுபடுத்தும் எந்தவொரு செயற்பாட்டுக்கும் இடமளிக்கக் கூடாது. இன, மத, குல வேறுபாடுகளை களைந்து நாம் அனைவரும் இலங்கையர் என்ற மனப்பாங்குடன் செயற்படவேண்டும்.

கிழக்கு மாகாணம் அபிவிருத்தியில் பின்தங்கிய மாகாணமாக இருக்கின்றது. இம் மாகாணத்தின் அபிவிருத்திக்கு அரசாங்கம் உதவிசெய்யவேண்டும். குறிப்பாக, நான் வசிக்கும் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிரதேசத்தின் அபிவிருத்திக்கு பல மில்லியன் ரூபாவை ஒதுக்கீடுசெய்து கல்முனையை வளமான ஒரு பிரதேசமாக மாற்றியமைக்கவேண்டும்.

என்னிடம் இன, மத, குல வேறுபாடு கிடையாது. இந்நாட்டில் வாழும் மூவின மக்களும் ஒற்றுமையுடன் வாழவேண்டும் என்பதே எனது விருப்பமாகும் - என்றார்.




# கல்முனை மாநகர சபைக்கு கூரை ஓடு மாற்றிக்கொண்டிராமல் அதனை முழுமையாக புதிதாக கட்டிமுடியுங்கள்

**நகர முதல்வரிடம் கோருகிறார் உறுப்பினர் சிபான்**



(கல்முனை)

கல்முனை மாநகர சபையின் நிர்வாக கட்டமைப்பில் பல குறைபாடுகள் காணப்படுவதை உணரமுடிகின்றது. மேயர் - நிர்வாக உறுப்பினர்கள் ஒத்திசைந்து செல்லாமை, மாநகர சபையின் உயிரோட்டத்திற்கு ஒட்சிசன் இன்றி தவிப்பது போன்ற நிகழ்வுகள் அரங்கேறுவதை கண்கூடாக காணக் கூடியதாக உள்ளது. எதிர்வரும் காலங்களில் இந்த நிலை மாற்றம் பெறவேண்டும் - என கல்முனை மாநகர சபை உறுப்பினர் சட்டத்தரணி பீ.எம்.சிபான் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாலை சபா மண்டபத்தில் மாநகர முதல்வர் சட்டத்தரணி அபூபக்கர் ரக்கிப் தலைமையில் நடைபெற்ற மாதாந்த அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்தும் அவர் தெரிவித்ததாவது:

நமது மாநகர சபையின் திட்டமிடல் குழு கலைக்கப்பட்டு ஆங்காங்கே சிதறவிடப்பட்டு கிடப்பதால் அது எமது மாநகர சபையின் வினைத்திறனான செயற்பாடுகளுக்கு குந்தகமாக அமையும் என கூறிவைக்க விரும்புகின்றேன்.

அத்தோடு, கடைநிலை ஊழியர்களின் மேற்பார்வையின்கீழ் பட்டதாரிகள், நிர்வாக அதிகாரிகள், கண்காணிக்கப்பட்டு வருகின்றமையானது நமது மாநகர சபையின் செயற்பாட்டில் வீரியத்தை குறைத்து தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்களின் மூலம் சிறந்த வெளியீடுகளை பெறுவதற்கு தடையாக இருக்கும் நிலை கண்டு வருந்துகிறேன்.

விரயத்தையும் ஊழலையும் குறைக்கும் முகமாக தங்களால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு உரிய அதிகாரிகளின் ஒத்துழைப்பின்மையால் செயலிழந்து காணப்படுவது வேதனையளிக்கின்றது. சுகாதாரக் குழுவின் மேற்பார்வைக்கு MBBS வைத்தியர் ஒருவர் கல்முனை மாநகர சபைக்கு நியமிக்கப்பட்டமை வரவேற்கத்தக்கது. ஆனால், அவருக்கு உள்ளக கள விஜயத்திற்கான வாகன வசதி கூட இன்னும் செய்து வழங்கப்படாமை குறைபாடாகும்.

சுமார் 200இற்கும் மேற்பட்ட தன்னார்வ உத்தியோகத்தர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டு இன்னும் நிரந்தரமாக்கப்படாமையும் மாநகர சபையின் மாதாந்த வருமானம் மூலமே சம்பளம் வழங்கும் நடவடிக்கைகள் எமது மாநகர சபையின் வளர்ச்சியை இன்னுமின்னும் பின்நோக்கி நகர்த்தும் செயற்பாடுகளாகவேஅமைந்துள்ளன. இருந்தபோதிலும் அவர்களுடைய சம்பளங்கள் உரிய நேர காலத்திற்கு வழங்க ஆவண செய்யப்படுதல் வேண்டும்.

மேயர் அவர்களே, 1953 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கட்டப்பட்ட இந்த மாநகர சபை கட்டடத்தில் திருத்தி புதிதாக கட்டுவதற்கான முயற்சிகளை ஏன் உங்களால் கூட இன்னும் முன்வைக்கப்படவில்லை என்ற கேள்வியை நான் எழுப்புகின்றேன்? சிறுபான்மை மக்களின் இதயங்களில் ஒன்றாக இருக்கின்ற இந்த கல்முனை மாநகர சபை கட்டிடம் கம்பீரமாக உயர்ந்த தோற்றத்தில் இருக்கவேண்டும் என்பதே எங்கள் அனைவரினதும் அவா.

பழைய கட்டடத்துக்கு ஓடு மாற்றி மாற்றி இருக்கும் மேயராக நீங்கள் அல்லாமல் வெளிநாட்டு உதவிகளை அல்லது பொறுப்பான அமைச்சர்களை கொண்டு இந்த நீர்த்துப்போன கட்டடத்தை புதிதாக கட்ட உங்கள் பதவிக்காலத்தில் தகுந்த நடவடிக்கையை எடுக்கவேண்டும் என இந்த உயரிய சபையில் வேண்டுகோள் விடுக்கின்றேன் . உங்கள் நடவடிக்கைகளுக்காக எங்களாலான அத்தனை பங்களிப்புகளையும் செய்ய நாங்கள் தயாராகவுள்ளோம்!

நமது மாநகர சபை எல்லைக்குட்பட்ட மருதமுனை கிராமத்தில் பிற்பகல் வேளையில் கடற்கரையை நோக்கி வெளியூர்களில் இருந்தும் அதிகமான மக்கள் கூடுவதை நாம் அறிவோம். அவர்கள் தங்கள் அவசர நேரங்களில் மலசலம் கழிப்பதற்காக கடும் இடர்பாடுகளை எதிர்நோக்குவதாக அறியமுடிகின்றது . ஆகவே, கடற்கரையை அண்டிய பகுதிகளில் பொருத்தமான இடம் கண்டறியப்பட்டு கல்முனை மாநகர சபையால் பொது மலசலகூட வசதிகள் செய்துகொடுக்கப்படவேண்டும் - என்றார்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் 2,089 பட்டதாரிகளுக்கு நியமனம்

**இரண்டாம் திகதி வழங்கப்படவுள்ளதாக அறிவிப்பு**



(மட்டக்களப்பு )

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நாடு முழுவதுக்குமான ஒரு இலட்சம் வேலை வாய்ப்பை வழங்கும் விசேட வேலைத்திட்டம் தேர்தல் காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது தேர்தல் முடிவடைந்துள்ளமையால் மேற்படி நியமனங்கள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் இரண்டாம் திகதி வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நியமனங்கள் வழங்கப்படுகின்ற பட்டதாரிகளுக்கு தலைமைத்துவப் பயிற்சிகள் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சியுடன் மக்கள் தொடர்பாடல் பயிற்சி மற்றும் அரசாங்க திணைக்களங்களின் கட்டமைப்பு தொடர்பான பயிற்சிகளும் வழங்கப்பட்டதன் பின்னர் அரச திணைக்களங்களுக்கு அவர்கள் இணைத்துக்கொள்ளப்படுவர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 பிரதேச செயலகங்களுக்கு மொத்தமாக 2,089 வேலையற்ற பட்டதாரிகள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

உள்ளக பாதுகாப்பு உள்நாட்டு அலுவல்கள் அனர்த்த முகாமைத்துவ அமைச்சால் இணையதளத்தில் வெளியிடப்பட்ட பெயர் விபரங்களின் அடிப்படையில் இந்த நியமனங்கள் இடம்பெறவுள்ளன. அதற்கமைய அந்த விபரங்களின்படி, மண்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு 441 பேரும் காத்தான்குடி பிரதேச செயலகத்துக்கு 111 பேரும், ஆரையம்பதி பிரதேச செயலகத்துக்கு 142 பேரும், களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்துக்கு 480 பேரும், வெல்லாவெளி பிரதேச செயலகத்துக்கு 150 பேரும், பட்டிருப்பு பிரதேச செயலகத்துக்கு 103 பேரும், வவுணதீவு பிரதேச செயலகத்துக்கு 63 பேரும், கிரான் பிரதேச செயலகத்துக்கு 63 பேரும், வாழைச்சேனை பிரதேச செயலகத்துக்கு 116 பேரும், வாகரை பிரதேச செயலகத்துக்கு 21 பேரும், ஓட்டமாவடி பிரதேச செயலகத்துக்கு 61 பேரும், செங்கலடி பிரதேச செயலகத்துக்கு 193 பேரும், ஏறாவூர் பிரதேச செயலகத்துக்கு123 பேரும், கோறளைப்பற்று மத்தி வாழைச்சேனை பிரதேச செயலகத்துக்கு 22 பேரும் என மொத்தம் 2,089 பேர் நியமத்தைப் பெறவுள்ளனர்.

பட்டதாரிகள் தங்களின் பிரதேச செயலகங்களுக்குச் சென்று தங்களுக்குரிய நியமனக் கடிதங்களை பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் பிரதேச செயலகங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான திருமதி கலாமதி பத்மராஜா அறிவித்துள்ளார்.

**திருக்கோவில் - காயத்திரி கிராமத்தில்**

# உலக வங்கியின் 200 மில்லியன் செலவில் கிரவல் வீதிகள் 'கார்பட்' வீதிகளாக புனரமைப்பு

(திருக்கோவில் )

உலக வங்கியின் நிதியுதவியுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் திருக்கோவில் காயத்திரி கிராமத்தில் சுமார் 200 மில்லியன்



நிதி செலவில் 5 கிரவல் வீதிகள் கார்பட் வீதிகளாக புனரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அந்தவகையில் வீதியின் இரு பக்கமும் வசிக்கும் குடும்பங்களின் ஒத்துழைப்புடன் வீதிகள் விஸ்தரிப்புக்காக சட்டரீதியாக அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் வீதிகள் அளவை செய்யப்பட்டு எல்லைகள் இடும் பணிகள் நேற்று ஆரம்பமாகியிருந்தன.

காயத்திரி கிராமத்தில் ஒவ்வொரு வீதிகளும் 700 தொடக்கம் 800 வரையான மீற்றர் நீளமான வீதிகள் புனரமைக்கப்படவுள்ளதுடன், ஒவ்வொரு வீதிக்கும் 30 தொடக்கம் 40 வரையான மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வீதிகள் கார்பட் வீதிகளாக புனரமைக்கப்படுவதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைவாக வீதிகளை அளவை செய்தல் மற்றும் வீதிகளை விஸ்தரிக்கும்போது காணிகள் தேவைப்படுமிடங்களில் சிறிதளவான காணிகளை வழங்குவது தொடர்பாக இரு பக்க குடியிருப்பாளர்களின் சட்டரீதியான சம்மதங்களை பெற்றுக்கொள்ளல் போன்ற வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

இவ்வேலைத்திட்டத்தில் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன், திருக்கோவில் பிரதேச சபையின் தவிசாளர் இ.வி.கமலராஜன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.அனோஜா , வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரிகள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச சபை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு வீதி புனரமைப்புப் பணிக்கான வேலைத்திட்டங்களை ஆரம்பித்தனர்.

லீசிங் வசதிகளுக்கு மிகக் குறைந்த வாடகை

மாதாந்த வாடகை ரூபாய் 1,646/-* இலிருந்து



லீசிங் காலம்!

• பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத வாகனங்களுக்கு உங்கள் வருமானத்திற்கேற்ப வடிவமைக்கப்பட்ட விசேட லீசிங் வசதிகள்

நாடு முழுவதும் பரந்துள்ள கிளை வலையமைப்பு மூலம் இலகு சேவைகள்

7 வருடங்கள் வரையிலான நீண்ட மீள் செலுத்தும் காலம்

* பதிவு செய்யப்படாத வாகனங்களுக்கு 7 வருட, ரூபாய். 100,000/- பெறுமதியான லீசிங் வசதிக்கான மாதாந்த வாடகை.

மேலதிக விபரங்களுக்கு அருகில் உள்ள கொமர்ஷல் வங்கி கிளையை நாடுங்கள் அல்லது 011 566 4545 இலக்கத்தின் ஊடாக லீசிங் பிரிவுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

100 YEARS

COMMERCIAL BANK

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது | Fitch Rating AA+ (lka) | +94 112 353 333 | www.combank.lk

உங்கள் நலனே எங்கள் நோக்கம்

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.

தமிழன் வாரவெளியீடு
ஞாயிற்றுக்கிழமை, ஒகஸ்ட் 30, 2020

# பிரதமர் மஹிந்த தலைமையில் இடம்பெற்ற இராஜாங்க அமைச்சர் ஜீவனின் எதிர்கால திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல்

(மஸ்கெலியா)

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கீழ் இயங்கும் அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களினூடாக கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள், அத்தோடு எதிர்காலத்தில் இடம்பெறவிருக்கும் அபிவிருத்திகள் தொடர்பாகவும் கலந்துரையாடலொன்று பத்தரமுல்லையில் அமைந்துள்ள வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.



இதன்போது வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் கீழ் மலையகத்தில் அமைக்கவிருக்கும் வீட்டுத்திட்டம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இவ்வீட்டுத்திட்டங்கள் நிர்மாணிக்கும்போது வீட்டின் கூரைக்குப் பதிலாக சீமெந்து கொண்டு கொங்க்ரீட் சிலப் முறையிலான கூரைகள் அமைப்பது தொடர்பாகவும், அத்தோடு வீட்டின் உட்கட்டமைப்பு வசதிகளை உள்ளடக்கிய முறையில் வீட்டுத்திட்டத்தை மேற்கொள்ளவும் கலந்துரையாடப்பட்டது.

தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு அமைச்சின்கீழ் இயங்கும் சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந்நிகழ்வில், தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் அமைச்சின் செயலாளர் டி.பி.ஜி.குமாரசிறி, அமைச்சின் அதிகாரிகள், திணைக்களங்களின் அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# சிறுபான்மை மக்களின் அரசியல் பிரதிநிதித்துவத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தாத புதிய தேர்தல் முறையே வேண்டும்

## கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவிப்பு

புதிய தேர்தல்முறை மாற்றமானது தமிழ், முஸ்லிம் மக்களின் அரசியல் இருப்பை, பிரதிநிதித்துவத்தை பாதிக்காத வகையிலேயே முன்னெடுக்கப்படவேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.



நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இடைக்கால கணக்கறிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்ட வேலுகுமார் மேலும் கூறியதாவது,

"கண்டி மாவட்டத்திலிருந்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரொருவர் இரண்டாவது தடவையும் அதியுயர் சபைக்குத் தெரிவாவது இதுவே முதன்முறையாகும். எனவே, தமிழ் பேசும் சமூகமாக ஒன்றிணைந்து எனக்கு வாக்களித்த தமிழ், முஸ்லிம் மக்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எந்தவொரு சட்டதிருத்தத்தையும் மேற்கொள்வதற்கான பெரும்பான்மைப்பலத்தை 9ஆவது நாடாளுமன்றத்தில் ஆளுங்கட்சி கொண்டுள்ளது. எனவே, அந்த பலத்தை ஆளுந்தரப்பு எவ்வாறு, எதற்காக பயன்படுத்தப்போகின்றது என்பதே பிரதான கேள்வியாகும்.

அதேவேளை, ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரையில் இந்த நாட்டில் ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்காக கொண்டுவரப்பட்ட 19ஆவது திருத்தச்சட்டம் நீக்கப்படும் எனவும், 13ஆவது திருத்தச்சட்டம் மறுசீரமைக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக, புதிய அரசியலமைப்பில் புதிய தேர்தல் முறைமை அறிமுகப்படுத்தப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ், முஸ்லிம் மக்களின் அரசியல் இருப்புக்கும், பிரதிநிதித்துவத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தாத விதத்திலேயே புதிய தேர்தல் முறை உருவாக்கப்படவேண்டும்.

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் கூலி என்ற அடையாளத்தை மாற்றியமைத்து ஏனைய சமூகங்களுக்கு சமனான நிலையில் அவர்களை மேம்படுத்துவதே எமது திட்டமாக இருந்தது. அதற்கான அடித்தளத்தை கடந்த ஆட்சியில் இட்டிருந்தோம். எனவே, சமூக மாற்றத்துக்காக எம்மால் முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள் புதிய ஆட்சியிலும் தொடர வேண்டும்" – என்றார்.




# மருதானையில் ரயிலில் மோதுண்டு இளைஞன் பலி!

(பொகவந்தலாவ)

கொழும்பு, மருதானை பகுதியில் ரயிலில் மோதுண்டு இளைஞன் ஒருவர் பலியாகியுள்ளார்.



பொகவந்தலாவை சீனாகலை தோட்டத்தைச் சேர்ந்த இளைஞனே இவ்வாறு கடந்த 27ஆம் திகதி மாலை விபத்துக்குள்ளாகியதாக மருதானை பொலிஸார் தெரிவித்தனர்.

செல்வராஜ் கஜேந்திரன் (வயது–24) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கொழும்பிலுள்ள புத்தக விற்பனை நிலையமொன்றில் அவர் தொழில் புரிந்துள்ளார். இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

# தடைசெய்யப்பட்ட கிரீம் வகைகள் மற்றும் திரவங்களை விற்பனைக்காக வைத்திருந்தோருக்கு சட்ட நடவடிக்கை!

(இரத்தினபுரி)

இரத்தினபுரி மாவட்டத்தில் இரத்தினபுரி, எம்பிலிபிட்டிய, காவத்தை ஆகிய நகரங்களிலுள்ள விற்பனை நிலையங்களில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த முகங்களை, அழகுபடுத்தும் தடைசெய்யப்பட்ட கிரீம் வகைகள் மற்றும் திரவங்கள் என்பன இரத்தினபுரி மாவட்ட நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டு, அவை மீட்கப்பட்டுள்ளதுடன் அவற்றை விற்பனை செய்தோருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



இரத்தினபுரி மாவட்ட நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகளால் கடந்த சில நாட்களாக இரத்தினபுரி மாவட்டத்தில் இரத்தினபுரி, எம்பிலிபிட்டிய, காவத்தை ஆகிய நகரங்களின் வியாபார நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது ஆறு இலட்சத்துக்கும் அதிகமான தடைசெய்யப்பட்ட கிரீம் வகைகள் மற்றும் திரவங்கள் என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மேற்படி தடைசெய்யப்பட்ட கிரீம் வகைகள் மற்றும் திரவங்களை விற்பனைக்கு வைத்திருந்த சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலணி லொக்குபோத்தாகமவின் ஆலோசனைக்கமையவே இரத்தினபுரி மாவட்ட நுகர்வோர் அதிகார சபை பொறுப்பதிகாரி உதய நாமல்கம தலைமையில் மேற்படி சோதனைகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# கழிவுகளை முறையாக அகற்றாமைக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(மஸ்கெலியா)

நோர்வூட் பிரதேச சபை நிர்வாகத்தின்கீழ் உள்ள பொகவந்தலாவ பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களில் நாளாந்தம் உள்ள கழிவுகள் முறையாக அகற்றப்படாமையால் ஒருசிலர் கழிவுகளை கெசல்கமு ஓயாவில் கொட்டுவதாக புகார் தெரிவிக்கின்றனர்.

பொகவந்தலாவ நகரை ஊடறுத்து காசல்ரீ நீர்த்தேக்கத்திற்கு நீரை வழங்கும் பிரதான நதியான கெசல்கமு ஓயாவில் கழிவுகளை கொட்டுவதன் மூலம் நகரிலுள்ள ஒரு பகுதியில் தேங்கி துர்மணம் வீசுவதாக நகருக்கு வரும் பாவனையாளர்கள் மற்றும் நாளாந்தம் பாடசாலைக்கு வரும் மாணவர்கள், பாதசாரிகள் புகார் தெரிவிக்கின்றனர்.

இதுவிடயமாக நோர்வூட் பிரதேச சபையின் தவிசாளர் குழந்தைவேல் ரவியிடம் கேட்டபோது எங்களது பிரதேச சபை புதிதாக உருவாக்கப்பட்டது. எங்களிடம் 2 உழவு இயந்திரங்கள் மட்டுமே கழிவுகளை அகற்றவுள்ளது. மாகாண சபை அதிகாரிகள் ஊடாக கழிவுகளை அகற்ற பாரவூர்தியை கேட்டுள்ளோம்.

எனவே, கெசல்கமு ஓயாவில் கழிவுகள் கொட்டுவோருக்கு எதிராக பொகவந்தலாவ பொலிஸாருடன் இணைந்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# பிரதி முதல்வரை பதில் முதல்வராக நியமித்துள்ளமை சட்டத்தை கொச்சைப்படுத்தும் செயல்

## - டல்ஜித் அலுவிஹார

(மாத்தளை)

தன்னுடைய மாத்தளை மாநகர முதல்வர் பதவியை மூன்று மாதத்திற்கு தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளமை தன்மீது மேற்கொண்ட ஒரு அரசியல் பழிவாங்கல் என மாத்தளை மாநகர முதல்வர் டல்ஜித் அலுவிஹார தெரிவிக்கிறார்.



மாத்தளை மாநகர முதல்வரின் இல்லத்தில் வைத்து அவரின் பதவி இடைநிறுத்தம் பற்றி வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,


மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே மாகாண சபை சட்டத்தின்கீழ் ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கிணங்க, ஒரு சுற்றுநிருபம் மூலம் எனது பதவி தற்காலிகமாக இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு எனது பதவியை இடைநிறுத்தி வைப்பதற்கு ஆளுநருக்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை.

1989ஆம் ஆண்டு 12ஆம் இலக்க உள்ளூராட்சி சபைகளின் சட்ட விதிமுறைகளை தவறான முறையில் பாவித்து மாகாண ஆளுநரின் சுயவிருப்பத்துக்கேற்றவாறு என்னுடைய பதவியை மூன்று மாத காலத்திற்கு தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை உள்ளூராட்சி மன்ற சட்ட விதிகளுக்கு முற்றிலும் மாற்றமானதாகும்.

என்னை பற்றி தவறான கருத்துகளை முன்வைத்து சம்பந்தமாக அரச கணக்காய்வாளர் திணைக்களத்தின் மூலமாக முறையான விசாரணைகளை மேற்கொண்டு நான் நிரபராதி என உறுதிப்படுத்தப்பட்ட பின்னர், என்னை சேவையிலிருந்து நீக்கப்பட்டது சம்பந்தமாக நான் நீதிமன்றத்தை நாடவுள்ளேன். பிரதி முதல்வரை பதில் முதல்வராக நியமித்துள்ளமை சட்டத்தை கொச்சைப்படுத்தும் ஒரு செயல் - என்றார்.

# ஹட்டன் விஜிராபுர வீடொன்றில் திடீர் தீப்பரவல்







(மஸ்கெலியா)

ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹட்டன் விஜிராபுர வீடொன்றில் திடீர் தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் மதியம் 2.50 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் உயிராபத்துகளோ காயங்களோ ஏற்படாதபோதிலும் இவ்வீட்டின் ஓர் அறையும் அவ்வறையிலிருந்த பொருட்களும் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

குறித்த வீட்டில் வாடகைக்கு விடப்பட்ட பகுதி மூடியிருந்த நிலையில் அந்த வீட்டிலிருந்து புகை வருவதைக் கண்ட அயலவர்கள் சத்தமிட்டுள்ளனர். அதனைத் தொடர்ந்து குறித்த வீட்டின் கதவை உடைத்து பார்த்தபோது ஒரே புகை மண்டலமாக காட்சியளித்துள்ளது. அதனைத் தொடர்ந்து பிரதேசவாசிகள் இணைந்து குறித்த தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

இந்த விபத்து குறித்த ஹட்டன் நகரசபையின் தீயணைப்புப் பிரிவுக்கும் பொலிஸாருக்கும் அறிவித்தபோதிலும் தாமதமாகவே வருகை தந்தனர் என பொதுமக்கள் கவலை வெளியிட்டனர். தீ விபத்துக்கான காரணம் உறுதிசெய்யப்படாதபோதிலும் மின் ஒழுக்கு காரணமாக தீ ஏற்பட்டிருக்கலாம் என பொது மக்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறாயினும், பொலிஸார் மற்றும் பொதுமக்கள் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளதோடு, சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஹட்டன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பூண்டுலோயா ஹெரோ கீழ்ப்பிரிவு தோட்ட நிர்வாக அதிகாரிகளை இடமாற்றம் செய்யுமாறு வலியுறுத்தி தொழிலாளர்கள் போராட்டம்

பூண்டுலோயா ஹெரோ கீழ்பிரிவு தோட்ட நிர்வாக அதிகாரிகளை உடனடியாக இடமாற்றம் செய்யுமாறு வலியுறுத்தி தொழிலாளர்கள் கடந்த வெள்ளியன்றும் (28) இரண்டாவது நாளாகவும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



பூண்டுலோயா ஹெரோ தோட்டத்தைச் சேர்ந்த இளைஞர்கள் இருவர் கடல் அலையில் அள்ளுண்டுச்சென்று உயிரிழந்ததையடுத்து முழு தோட்டமுமே சோகத்தில் மூழ்கியது. இறுதிக்கிரியைகள் நடைபெற்ற தினத்தில் தொழிலாளர்கள் வேலைக்கு செல்லாது, அஞ்சலி செலுத்தினர்.

இதனால் தொழிலாளர்களை பழிவாங்கும் நோக்கில் தோட்ட நிர்வாகம், வெளியிலிருந்து ஆட்களை அழைத்துவந்து கொழுந்து கொய்துள்ளதாகவும், இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து தோட்ட அதிகாரியிடம் தொழிலாளர்கள் வினவியபோது, தாம் அப்படித்தான் நடப்போம், விரும்பினால் வேலை செய்யுங்கள், இல்லாவிட்டால் போங்கள் என எகத்தாளமாக பதிலளித்துள்ளார். எனினும், தோட்டத்துரை தான் தோன்றித்தனமாக செயற்படுகிறார் எனவும், அவரை உடனடியாக இடமாற்றம் செய்யவேண்டும் எனவும் வலியுறுத்தி இரண்டாவது நாளாகவும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 30 இலட்சம் பெறுமதியான உபகரணங்கள் மற்றும் நிதியுதவி வழங்கிவைப்பு!

(இரத்தினபுரி)

சப்ரகமுவ மாகாண சமூக நலன்புரி, சிறுவர் பராமரிப்பு, கிராமிய அபிவிருத்தி அமைச்சின் மூலம் இரத்தினபுரி மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 30 இலட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் மற்றும் நிதியுதவிகள் வழங்கப்பட்டன.







மேற்படி உபகரணங்கள் மற்றும் நிதியுதவிகள் வழங்கிவைக்கும் நிகழ்வு கடந்த 27ஆம் திகதி சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் மாகாண சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வைத்திய செலவுக்கான நிதியுதவி, வீட்டை திருத்துவதற்கான நிதியுதவி மற்றும் சுயதொழில் செய்வோருக்குத் தேவையான உபகரணப் பொருட்கள் மற்றும் கண்பார்வை அற்றோருக்கு கண்ணாடிகள், காது கேட்கும் கருவிகள் உட்பட அவர்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் என்பன வழங்கப்பட்டன.


இரத்தினபுரி மாவட்டத்தில் குறைந்த வருமானங்களைப் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த 232 பேருக்கு மேற்படி நிதியுதவி மற்றும் உபகரணங்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் ரஞ்சனி ஜயகொடி, சப்ரகமுவ மாகாண சமூக நலன்புரி, சிறுவர் பராமரிப்பு, கிராமிய அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எச்.டி.சிசிர மற்றும் அமைச்சின் ஆணையாளர் டி.டபிள்யு.ராஜபக்ஷ உட்பட அமைச்சின் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சீத்துவக்கேடு 60



காரைக்கவி
கந்தையா பத்மானந்தன்



பாட்டுச் சொல்லி முடிய ஆச்சி, ''உந்தக் கள்ளைக் குடிச்சுப் போட்டு எத்தினபேர் உன்னை மாதிரி வெறியில தேவையில்லாத வேலையள் செய்யினம். எத்தினை தேவை இல்லாத சண்டை சச்சரவுகள் இருக்கினம்.எத்தினை பெடி பெட்டை படிக்க ஏலாமல் கஷ்டப் படுகுதுகள். எத்தினை வீடுகளிலை குமர்கள் வாழாவெட்டியா இருக்குதுகள். எத்தினை பேற்றை சொத்துபத்து எல்லாம் ஈடு வைச்சு அறா விலைக்கு வித்து நாசமாப் போட்டுது. உதாலாதான் வருகுது. எத்தினை வெட்டுக் குத்து. எத்தினை பேருக்கு மண்டை, கை கால் எல்லாம் உடைஞ்சிருக்கு சொல்லு பாப்பம்'' எண்டுவா.

''எத்தினை வீடுகளில அரிசி, கறி, புளி வாங்க வைச்சிருந்த காசு, மருந்து வாங்க வைச்சிருந்த காசு, பெடி பெட்டைக்கு பள்ளிக் கூடத்துக்கு ரியூசனுக்கு எண்டு வைச்சிருந்த காசை, உடுப்பு கிடுப்பு எடுக்க வைச்சிருந்த காசை, வீட்டில வாற நல்ல கெட்ட காரியத்துக்கு எண்டு வைச்சிருந்த காசை, கோயில் குளத்துக்கு எண்டு வைச்சிருந்த காசை உன்னை மாதிரி ஆக்கள் கொண்டுபோய் குடிச்சிருக்கினம் தெரியுமே'' எண்டுவா.

உப்பிடி உந்தக் கள்ளுக் குடியால எத்தினை பெண்டுகள் கண்ணீரும் கம்பலையுமா என்னைப் போல ஆக்கள் குடிக்கக்கூடாது எண்டு சொல்லுறம். விளங்கிச்சே'' எண்டுவா ஆச்சி.

''குடிச்சுக் குடிச்சே எத்தினையோ பேர் கூத்தாடி இடையில சிதறிப்போக, வாழ வேண்டிய வயசில எத்தினை பொம்பிளையள் வாழா வெட்டியா வந்திருக்குதுகள். எத்தினை பிள்ளையள் அனாதையாப் போயிருக்குதுகள் எண்டு கொஞ்சம் என்டான்னை நினைச்சுப் பாரேன். நீ உதை எல்லாம் நினைச்சா நானும் பிள்ளையளும் இண்டைக்கு ராச வாழ்க்கை எல்லே வாழுவம்'' எண்டுவா ஆச்சி.

ஆச்சி சொல்லுறதிலையும் ஓர் உண்மை இருக்கு. கன ஆம்பிளையள் தங்கட வீட்டுப் பொறுப்பை கொஞ்சமும் நினைக்காமல் உழைக்கிற காசை குடிச்சு முடிச்சுப் போடுவினம். அப்பிடியான வீடுகளிலை பெண்டுகள்தான் சீட்டுக் கட்டி, ஆடு மாடு வளர்த்து, கோழியை கீழியை வளர்த்து, அருவி வெட்டி புல்லுப் பிடுங்கி சின்னச் சின்ன வேலையள் செய்து குடும்பத்தைக் காப்பாத்தி இருக்கினம். பிள்ளை குட்டியளின்ரை அலுவலைப் பாத்திருக்கினம்.

உந்தக் குடியால எங்கட எத்தினையோ படிச்ச ஆக்களும் உத்தியோகத்தரும் வாத்திமாரும் கூட குடிச்சுப் போட்டு வெறியில ரோட்டுவழியை விழுந்து கிடந்து உளள மானம் மரியாதை எல்லாம் கெட்டு சீரழிஞ்சும் இருக்கினம்.

என்ன எண்டாலும் கள்ளு ஒரு சமத்துவ பானம் எண்டுதான் சொல்ல வேணும். ஏனெண்டால் கள்ளுக் கொட்டில் வழியை படிச்சவன் - படிக்காதவன், முதலாளி - தொழிலாளி, இருக்கிறவன் - இல்லாதவன் அந்தச் சாதி - இந்தச் சாதி எண்டு சொல்லுறவன், அந்தச் சமயம் இந்தச் சமயம் எண்டு சொல்லுறவன் எல்லாம் ஒண்டாய் இருந்து ஒருத்தன் குடிச்ச கோப்பையிலே இன்னொருத்தன் குடிச்சு அவன்ரை கதையை இவன் கேட்டு இவன்ரை கதையை அவன் கேட்டு அவன்ரை கோப்பையில மீன் பொரியலை இவன் சாப்பிட்டு, இவன்ரை கோப்பையில மீன் பொரியலை அவன் சாப்பிட்டு எண்டு அன்னியோன்னியமாய் இருப்பாங்கள்.

எங்கட ஊரில சாதி பேசுற, குடும்பப் பெருமை பேசுற எத்தினையோ ஆக்கள் உந்தக் கள்ளு குடிக்கிறதுக்காக கள்ளு விக்கிறவையின்ரை வீட்டுக் கோடியுக்கை குடிக்கிற கள்ளுக்காகவும் பொரிக்கிற மீனுக்காகவும் மணித்தியாலக் கணக்கா தவம் இருப்பினம்.

இல்லாட்டில் கள்ளுச் சீவுற பனை வடலி தோட்டம் வழியை, வயல் பிட்டி வழியை, வயல் சாடுவாய் வழியை காவல் இருப்பினம். ஒரு வாய் கள்ளுக்காக சீவல்காரனை கெஞ்சு கெஞ்சு எண்டு கெஞ்சுவினம் பிறகு குடி வெறியிலை வேட்டி போற இடம் சால்வை போற இடம் தெரியாமல் வெக்கம் இல்லாமல் விழுந்து கிடப்பினம் பிறகு வெறி முறிய எழும்பி வந்து வெக்கம் இல்லாமல் சாதி பேசுவினம். சிலர் கள்ளு குடிக்கிறது வெளியில தெரிஞ்சா வெக்கம் எண்டு ஆரையும் விட்டு வாங்கி வீட்டில வைச்சு இரகசியமாக் குடிப்பினம்.

எங்கட குடிகாறர் கனபேர் கள்ளுக் குடிக்கப் போற இடங்களிலை கதைவழிப் பட்டு சண்டை சச்சரவுகளிலை வந்து சிலவேளை அது ஏரியாச் சண்டையாவும் மாறி பெருஞ் சண்டையாவும் முடிஞ்சிருக்கு. எங்கட வீட்டுக்கு கிட்ட ஒருத்தர் இருந்தவர் அவரைப் பார்த்தா சாதாரணமான நேரத்தில பிள்ளையாரைக் கும்பிட்டு வீபூதி பூசி சந்தனம் வைச்சு பக்திமானாக நல்ல அமைதியா பூனை மாதிரி இருப்பார்.

ஆனால், மத்தியானம் கள்ளுக் குடிச்சார் எண்டால் பெட்டைப் பூனையைக் கண்ட கடுவன் பூனை மாதிரி முக்கி முக்கி சீறுவார். அவர்தான் பெரிய வீரன் எண்டமாதிரி அவரின்ரை வாயிலை இருந்து வார்த்தைகளும் வாசமும் அளவு கணக்கில்லாமல் வீசும். ஒழுங்கேக்கை போறவாற ஆக்கள் ஆடுமாடு நாய் பூனை எல்லாத்தோடையும் சண்டை போடுவார் அரசியல் பேசுவார் ஞாயம் கேட்பார்.

வெய்யில் ஏற ஏற அவரின்ரை வீரம் ஏறும். வேலி மட்டைக் காலெல்லாம் தட்டித் தடவிக் கொண்டு போவார். உப்பிடி அளவுக்கு மிஞ்சிப் பேசி தும்புத்தடி விளக்குமாறு கிளுவங் கட்டை எல்லாத்தாலையும் வாங்கிக் கொண்டும் போவார்.

எங்கட வீட்டுக்கு கிட்ட இன்னொருத்தர் இருந்தவர். அவரை நாங்கள் சிறாப்பர் எண்டுவம். ஆள் வெள்ளைக்காரன் மாதிரி நல்ல நிறம். நாலு முழ வேட்டி கட்டி சால்வை போட்டிருப்பார். நாட்டுச் சுருட்டுப் புகையைப் புகைய பனை ஓலையை வெயிலுக்குப் பிடிச்சுக் கொண்டு கள்ளுக் கொட்டிலுக்குப் போவார் வருவார்.

வரேக்கை அவற்றை மனிசி பெடி பெட்டை சொந்த பந்தங்களுக்கு எல்லாம் அரச்;சனை நடக்கும். சிலவேளை பெடியள் பகிடி விட்டாங்கள் எண்டால் ரொப்பிக்கை மறந்து அவங்களை பேசத் தொடங்குவார். அப்பிடித் தொடங்கினால் எல்லாப் பெடியளின்ரையும் பரம்பரைப் பெருமை சந்திக்கு வந்திடும். இவரை மாதிரி சில வயசுபோன ஆக்கள் புளிச்ச கள்ளைக் குடிச்சுப் போட்டு வயித்தால போகப் போக போறது தெரியாமல் நாற நாற ஒழுங்கையளுக்குள்ளால போறதை எல்லாம் கண்டிருக்கிறம் .

முந்தி எங்கட ஊரில எல்லா வீடுகளிலையும் கக்கூசு இருக்காது. அதால கனபேர் பனை வடலிவழியைதான் போறவை. அப்பிடிப் போனால் சிலவேளை காகங்கள் மலத்தையும் சாப்பிட்டுப் போட்டு அந்த வாயால போய் எங்கேயும் பனையில திறந்தபடி கிடக்கிற கள்ளு முட்டியிலையும் வாய் வைச்சுப் போட்டுப் போகும். இதால அந்தக் கள்ளில அமீபா பெருகி அந்தக் கள்ளை குடிக்கிற ஆக்களுக்கு வயித்தால போகும் எண்டு எங்கடை ரீச்சர் சொல்லுறவ.

ஒருநாள் ஆரோ உப்பிடியான கள்ளைக் குடிச்சிருந்த ஒருத்தர்தான் எங்கட ஒழுங்கையால வரேக்கை வயித்தைக் கலக்கி எங்கட படலையுக்கை குந்தி இருந்து போட்டுப் போயிருக்க வேணும். உதைக் கண்டு போட்டு ஆச்சி வாயிலை வந்தபடி பேசி குப்பையை அள்ளி அதுக்கு மேல போட்டு உப்பு மிளகாய் நிறையப் போட்டு எரிச்சவ.

ஆச்சியிட்டை ஏனணை உப்பு மிளகாய் போட்டு எரிச்சனி எண்டு கேட்டால், அப்பதான்ரா அவனுக்கு குண்டி நல்லாப் பத்தி எரியும். பிறகு இனிமேல் இந்தப் பக்கம் வந்து இருக்கமாட்டான் எண்டுவா. உந்த குந்தி இருக்கிற பிரச்சினை சில நேரங்களிலை தொடர் பிரச்சினையா இருந்து பெடியள் காவல் இருந்து பச்சை மட்டையால வெளுத்ததும் நடந்திருக்கு.

(தொடரும்)



-மருதமுனை-
பி.எம்.எம்.ஏ.காதர்

# தேசிய உற்பத்தியில் மருதமுனை கைத்தறி ஆடை உற்பத்தியின் பங்கு

மனிதன் உலகில் வாழ்வதற்கு உணவு, உறைவிடம் முக்கியமானதைபோன்று உடையும் மிக முக்கியமானதாகும். அந்தவகையில் இன்றைய நவீன உலகில் ஆள்பாதி, ஆடைபாதி என்றாலும் பல்வேறுபட்ட வடிவமைப்புகளில் இன்றைய மனிதர்கள் ஆடைகளை அணிந்துவருகிறார்கள்.

ஆனால், பண்டைய காலத்தில் மனித நாகரீகம் வளர்ச்சியடையாத காலத்தில் இலை குழைகளையும், மரங்களின் பட்டைகளையும் அன்றைய மனிதர்கள் ஆடையாகப் பயன்படுத்தியதாகவும் காலக்கிரமத்தில் மிருகங்களின் தோல்களையும், ஆடையாகப் பயன்படுத்தியதாகவும் வரலாறுகள் கூறுகின்றன.

அதன்பின்பு மனிதனின் அறிவு வளர்ச்சி காரணமாக படிப்படியாக மறைக்கவேண்டிய முக்கிய உறுப்புகளை மறைப்பதற்கும், ஆரோக்கியத்துக்குமாக மெல்லிய துணி வகைகள் தயாரிக்கப்பட்டு அணிந்து வந்திருக்கின்றார்கள். இன்று ஆடை வகைகள் நாகரீகத்தின் உச்சத்திற்கு வந்திருக்கின்றது.

இருந்தாலும், இலங்கையில் ஆடைத் தொழிற்சாலைகள் பல அமைக்கப்பட்டிருக்கின்ற போதிலும் எமது நாட்டு மக்களுக்குத் தேவையான ஆடை வகைகளை தயாரிப்பதற்கான வசதி வாய்ப்புகள் இன்னும் ஏற்படுத்தப்படாததால் வெளிநாட்டு ஆடை உற்பத்திகளையே நம்பியிருக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இனி எமது நாட்டின் பண்டைய கால ஆடை உற்பத்தியைப் பற்றிப் பார்ப்போமேயானால், தேசிய மட்டத்தில் எத்தனையாம் ஆண்டு காலப்பகுதியில் கைத்தறி நெசவு ஆரம்பிக்கப்பட்டது என்பதைச் சரியாகச் சொல்லமுடியாதிருக்கின்றது.

ஆனாலும், கிழக்கு மாகாணத்தின் கைத்தறித்துறை பற்றி ஓரளவு அறிய முடிந்தது. அதை ஆதாரமாகக்கொண்டு நெசவுத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி அறிந்து ஆராய்ந்து இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

கைத்தறி உற்பத்திக்குப் பெயர்பெற்ற மருதமுனைக் கிராமத்தின் மற்றுமொரு சிறப்பம்சம் கல்விக்கும் பெயர்பெற்று விளங்குவதாகும்.

கிட்டத்தட்ட 500 வருடங்கள் பழைமை வாய்ந்த மருதமுனைக் கிராமத்தின் முக்கிய பண்டையகாலத் தொழிலாக கைத்தறி நெசவுத் தொழில் இருந்துவந்ததை பல சான்றுகளும், ஆதாரங்களும் உறுதிப்படுத்துகின்றன.

இது கிழக்கு மாகாணத்தில் மருதமுனையில் ஆரம்பித்து இயங்கிவந்திருக்கின்றது. பின்னர் காத்தான்குடி கிராமத்துக்கும் இந்த கைத்தறி நெசவுத்தொழில் ஆரம்பமாகி இயங்கிவந்திருக்கின்றது. இத்தொழிலை முஸ்லிம் மக்களே செய்து வந்திருக்கின்றார்கள்.

அன்றைய காலத்தில் காடுகளில் வளர்ந்திருந்த பருத்திகளை இனங்கண்டு அவற்றை நூலாக நூற்று அந்த நூலை மரப்பட்டைகள் மற்றும் இலை குழைகளை துவைத்து சாறு பிழிந்து வர்ணம் தீட்டியிருக்கின்றார்கள்.

அதேபோன்று பட்டுப்பூச்சிகளை வளர்த்து பட்டை பிரித்தெடுத்து பட்டுத்துணிகளையும், சோமன்பட்டு, கம்பாயம் போன்றவற்றை நெய்ததாக பல முதியவர்கள் சொல்லியதை அறிந்திருக்கின்றேன்.

துறைநீலாவணை குளித்திக் கோயில் பத்திரகாளி அம்மனுக்கு மருதமுனை



நூல் சுத்தப்படுகின்றது

மக்கள் நெசவு செய்துகொடுத்த சோமன் சேலைதான் அப்போது திருவிழாக் காலங்களில் அம்மனுக்கு அணிவித்ததாக ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர் மரஹூம் ஏ.எச்.எம்.மஜீத் எழுதிய 'எனது கிராமத்தைத் தேடுகிறேன்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

அப்போது நிலத்தில் நீள் சதுரமான குழியை வெட்டி அதில் மரப்பலகையைப் பொருத்தியே இயந்திரமாக்கியிருக்கின்றார்கள். இதை குழித்தறி என்று சொல்வார்கள். இக்குழித்தறியை 1970ஆம் ஆண்டு காலப்பகுதியில் மருதமுனையில் அப்பாசியர் என்பவரின் வீட்டில் நான் நேரடியாகப் பார்த்திருக்கின்றேன்.

அக்காலத்தில் வர்த்தகத்துக்காக இலங்கைக்கு வந்த தென்னிந்தியாவைச் சேர்ந்த முஸ்லிம்களே இந்த கைத்தறி நெசவுத்துறையை கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்கு அறிமுகப்படுத்தியதாக சொல்லப்படுகிறது. அக்காலத்தில் கைத்தறி ஆடைகளையே மக்கள் அதிகம் விரும்பி அணிந்திருக்கின்றார்கள்.

அக்காலத்தில் கைத்தறிக்கான உபகரணங்கள் மரப்பலகைகளாலும் மூங்கில் மரங்களாலுமே தயாரிக்கப்பட்டிருக்கின்றன. காலக்கிரமத்தில் இத்தொழில்துறை படிப்படியாக நவீனமடைந்ததன் காரணமாக குழித்தறிகள் கைத்தறிகளாக மாற்றம் பெற்றிருக்கின்றன.

அதன்பின் வளர்ச்சியடைந்த நாடுகளான இந்தியா, சீனா, ஜப்பான், மலேசியா, எகிப்து போன்ற நாடுகளிலிருந்து நூல் மற்றும் உபகரணங்கள், சாயமூட்டும் பவுடர்கள் என்பன வரத்தொடங்கின. இதனால் அநேகமானவர்கள் தைத்தறித் தொழிலை தங்கள் வாழ்வாதாரத் தொழிலாக மாற்றிக்கொண்டனர்.

ஒரு குடும்பத்தில் கணவன், மனைவி, பிள்ளைகள், மாமன், மாமி, தாய் - தந்தை, சகோதரிகள் என



நெசவு செய்தல்

எல்லோரும் ஒன்றிணைந்து வருமானம் ஈட்டுகின்ற தொழிலாக இத்தொழில் உயர்வடைந்தது. மருதமுனையில் காலையிலிருந்து மாலைவரை திரும்புகின்ற பக்கமெல்லாம் சக்கடி புக்கடி என்ற தறி ஓசையே கேட்கும்.

வயதுவந்த இளைஞர், யுவதிகளும் இந்தத் தொழிலில் ஆர்வங்காட்டினார்கள். மருதமுனை கைத்தறி உற்பத்திக்கு இலங்கையின் பல பாகங்களில் அதிகமான மவுசும் இருந்தது. உற்பத்தியாளர்கள் பலர் அவர்களாகவே வெளியூர்களுக்குச் சென்று விற்பனைசெய்து வந்தார்கள்.

மருதமுனையின் நெசவுத்துறையில் படிப்படியாக நற்பிட்டிமுனை, கல்முனைக்குடி, பாண்டிருப்பு, சாயந்துமருது, பாலமுனை, ஒலுவில், கல்லாறு, களுவாஞ்சிக்குடி, களுதாவளை, போரதீவு, கொக்கட்டிச்சோலை போன்ற கிராமங்களையும் சேர்ந்த இளைஞர்களும், யுவதிகளும் ஆர்வம் காட்டி மருதமுனைக்கு வந்து கற்று இந்தத் தொழிலைச் செய்தார்கள். காலக்கிரமத்தில் அந்த ஊர்களுக்கும் இந்தக் கைத்தறித் தொழில் விரிவடைந்து சென்றது.

இந்த நெசவுத் தொழில் காரணமாக தமிழ் - முஸ்லிம், மக்களுக்கிடையேயான உறவு மிகவும் அந்நியோன்யமானதாக மாறியது. தமிழ் - முஸ்லிம் இன நல்லுறவுக்கு மருதமுனை கைத்தறி நெசவுத்தொழில் பெரும் பங்காற்றியிருக்கின்றது என்று சொல்லாம். பயங்கரவாதம் உச்சநிலையில் இருந்த காலத்தில் இராணுவத்தினரின் தேடுதல் வேட்டிடைகளின்போது தமிழ் இளைஞர், யுவதிகளுக்கு அடைக்கலம் கொடுத்தது மருதமுனைக் கிராமமும் இங்குள்ள நெசவுத் கைத்தொழிலுமே ஆகும்.

இவ்வாறான நிலையில், சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமராக பதவியேற்றபின் வெளிநாட்டு ஆடைகள் மற்றும் துணி வகைகளின் இறக்குமதிக்குத் தடை விதித்திருந்தார். இதன் காரணமாக மருதமுனை நெசவுக் கைத்தொழில்துறை கொடிகட்டிப் பறந்தது. அந்தக்காலம் மருதமுனைக்கொரு பொற்காலமாகும்.

அந்தக் காலத்தில் இந்தத் தொழிற்றுறை மூலம் தங்களை உயர்த்திக்கொண்ட தனவந்தர்கள் பலர் இன்னும் மருதமுனையில் இருக்கின்றார்கள். இவர்களும் இவர்களது பரம்பரைகளும் இன்னும் இத்தொழிலையே செய்துவருகிறார்கள்.

சிறிமாவின் ஆட்சிக்குப் பின் ஆட்சிப்பீடமேறிய ஐக்கிய தேசியக் கட்சி வெளிநாட்டு ஆடைவகைகள் மற்றும் துணிகளுக்கு முன்னுரிமை வழங்கி இறக்குமதிசெய்தது. இதனால் மருதமுனையில் நெசவுக் கைத்தொழில்துறை பாரிய வீழ்ச்சியடைந்தது.

அதன்பின் 1978ஆம் ஆண்டு ஏற்பட்ட பாரிய சூறாவளி காரணமாகவும், மருதமுனை நெசவுக் கைத்தொழில்துறைக்கு பாரிய இழப்பும் ஏற்பட்டது. இதனால் முதலாளிமாரும் தொழிலாளர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இதிலிருந்து மீட்சிபெற மிகவும் கஷ்டமானதாகவே இருந்தது.

இதனால் நெசவுத்தொழிலில் இருந்த ஆர்வம் குறையத்தொடங்கியது. இதன் விளைவாக இளைய தலைமுறையினர் கல்வித்துறையில் ஆர்வங்காட்டி அதன்பால் ஈர்க்கப்பட்டதன் காரணமாக நெசவுத்துறை பலவீனமடைந்தது.

மேலும், ஒரு பகுதி இளைஞர், யுவதிகள் வெளிநாட்டு வேலை வாய்ப்பில் ஆர்வம் கொண்டு சென்றதனாலும் இத்தொழில் பாதிப்படைந்தது. இருந்தபோதும் பண்டைய காலத்தொழில் என்பதால் இத்தொழிலை விடாமல் இன்றுவரை பலர் செய்து வருகின்றனர்.

இந்நிலையில், 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட கடல்கோள் அனர்த்தத்தில் சுமார் 4,000இற்கும் மேற்பட்ட கைத்தறி இயந்திரங்கள்



உற்பத்திப் பொருட்கள்

முற்றாக அழிந்துபோனதோடு பெருந்தொகையான உபகரணங்களும் மூலப்பொருட்களும் அழிந்துபோயின.

இதேபோன்று நல்ல அனுபமுள்ள நெசவுத் தொழிலாளர்கள் 500இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துபோனார்கள். இதனால் ஒரு வருடத்திற்கு மேல் மருதமுனை பிரதேசத்தில் தறிகளின் சத்தம் கேட்கவே இல்லை. பாதிக்கப்பட்ட நெசவுத்தொழிலை உயிர்ப்பிக்க அரசு எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

இந்நிலையில், அரசசார்பற்ற நிறுவனங்களின் ஓரளவு உதவியால் நெசவுத்தொழிலுக்கு உயிரூட்டப்பட்டது. அதன் விளைவாக இன்றும் நெசவுத் தொழில் உயிர்பெற்றுவருகிறது. இருந்தபோதிலும் நூல் மற்றும் சாயம் போன்ற முக்கிய மூலப்பொருட்களின் விலை அதிகரிப்புக் காரணமாக நெசவாளர்கள் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

தரமான பொருட்களை உற்பத்திசெய்கின்ற போதிலும் வெளிநாடு களிலிருந்து வரையறை யற்ற வகையில் துணி வகைகள் இறக்குமதி செய்யப்படுவதால் கிழக்கு மாகாண கைத்தறி உற்பத்திகள் சிலவேளைகளில் தேக்க நிலையை அடைகின்றது.

வெளிநாடுகளிலிருந்து நூல் மற்றும் உபகரணங்கள் இறக்குமதிசெய்யப்படுகின்ற போதிலும் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற சாரம், சாரி மற்றும் துணி வகைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்து கைத்தறி நெசவாளர்களை மேலும் ஊக்குவிக்க ஆட்சிக்கு வருகின்ற எந்த அரசாங்கமும் முன்வருவதில்லை.

ஆனாலும், பண்டையகாலத் தொழில் என்பதால் விட்டுவிட முடியாமல் சிறிய அளவில் ஒருசிலர் இத்தொழிலை செய்துவருகின்றனர். முதலாளிமாருக்கு குறைந்த இலாபம் கிடைப்பதால் கூலிக்கு நெசவு செய்கின்ற தொழிலாளர்களின் வயிற்றிலேயே அடி விழுகிறது.

இந்த நிலையை மாற்றியமைக்க வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற நூல் மற்றும் சாயம் உட்பட ஏனைய உபகரணங்களுக்கு மானியம் வழங்க அரசு முன்வர வேண்டும் என்பதே நெசவுத் தொழிலாளர்களின் கோரிக்கையாகும். அதேபோன்று கிழக்கு மாகாணத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற உற்பத்திப் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்து சந்தை வாய்ப்பை ஏற்படுத்த அரசு முனையவேண்டும்.

மேலும், கிழக்கு மாகாணத்தில் அரசாங்கம் வர்த்தக கேந்திர மையமொன்றை ஏற்படுத்தி கிழக்கு மாகாண கைத்தொழில்துறையில் உற்பத்திசெய்யப்படுகின்ற பொருட்களை கொள்வனவுசெய்து நெசவாளர்களை ஊக்குவித்து அவர்களது வாழ்வாதாரத்தை உயர்த்த முன்வரவேண்டும். அதேபோன்று இந்த சிறுகைத்தொழிலை ஊக்குவிக்க மானியங்களும், கடன் உதவிகளும் வழங்க அரசாங்கம் முன்வரவேண்டும்.

தற்பொழுது மருதமுனையில் வெளிநாட்டவர்களைக் கவரும் வகையில் தரமான சாரம், சாரி, சல்வார் துணிகள், சேட் துணிகள் உள்ளிட்ட பலவகையான ஆடைவகைகள் உற்பத்திசெய்யப்படுகின்றன. கைத்தறி நெசவாளர்கள் குறைந்துவருவதனால் உற்பத்திகளுக்கும், துணிவகைகளுக்கும் கடும் கிராக்கியும், தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

மருதமுனையில் தரமான கைத்தறி துணிவகை உற்பத்தி செய்யப்படுவதனால் வெளிநாட்டவர் களும், வர்த்தகர்களும் மருதமுனையை நாடிவந்து துணிவகைகளை வாங்கிச்செல்கின்ற நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.



தமிழன்
THAMILAN WEEKLY
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42, தொலைபேசி : 0115 88 61 87
விளம்பரம் : 077 693 0739
மின்னஞ்சல் : thamilannews@yahoo.com

# கிடைக்காத ஞானம்!

மாகாண சபை முறைமையை தொடர்ந்து முன்னெடுப்பதில் அர்த்தமில்லையென்பதால் அதுகுறித்து இறுதித் தீர்மானத்தை எடுக்குமாறு புத்தசாசன செயலணிச் சபை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை கேட்டிருக்கிறது.

இத்தேபான தம்மாலங்கார தேரர் உட்பட்ட மகாநாயக்கர்மார் மற்றும் சிங்கள புத்திஜீவிகள் கையொப்பத்துடன் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடித விபரம் ஊடகங்களில் வெளிவந்துள்ளது.

"19ஆவது அரசியலமைப்புத் திருத்தம் மாத்திரம் நாட்டின் இந்த நெருக்கடி நிலைக்குக் காரணம் அல்ல. தற்போதைய அரசியலமைப்பில் உள்வாங்கப்பட்டுள்ள விகிதாசார தேர்தல் முறைமையை போன்று 13ஆவது மற்றும் 16ஆவது திருத்தம் உள்ளிட்ட இடைக்கிடை கொண்டுவரப்பட்ட பல்வேறு திருத்தங்களினூடாக நாட்டின் ஒற்றுமை, மக்களின் சமாதானம், ஒருமைப்பாடு மற்றும் தேசிய பாதுகாப்பு ஆகியன பலத்த அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளன. ஆகையால், இந்த சகல விடயங்களும் உடனடியாக திருத்தியமைக்கப்பட வேண்டும்.

மாகாண சபைகளை முன்னெடுத்துச் செல்வது, இலங்கையால் தாங்கமுடியாத செலவுகளை ஏற்படுத்துவது மாத்திரமன்றி அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கும் பாரதூரமான அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. மாகாண சபை முறைமை மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டும். 16ஆவது திருத்தத்தினூடாக வடக்கு – கிழக்கு ஆகிய இரு மாகாணங்களிலும் சிங்கள மொழி நிர்வாக மொழியாக ஏற்றுகொள்ளப்படவில்லை. வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளை ஒன்றிணைப்பதற்கு தேவையான சட்ட ஏற்பாடுகள் 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

மாகாண சபைக்கு, விடயப்பரப்புடன் தொடர்புடைய சட்டம் மற்றும் ஒழுங்கு ஆகியவற்றுடன் தொடர்புடைய சட்டங்களை பிரிக்க முடியும் என்பதுடன், நாடாளுமன்றத்தினால் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சட்டங்களுக்கு அப்பால் மாகாண சபைகள் சட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளன.

நாட்டை பிளவுபடுத்தும் வகையில் வெளிநாடுகளின் தலையீட்டுடன் உருவாக்கப்பட்ட ஏற்பாடுகளை நீக்குவதற்காகவே மக்கள் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை வழங்கியுள்ளனர். மேலும், 19ஆவது திருத்தத்தை மாற்றிவிட்டு, முக்கியமான திருத்தங்களை பின்னர் முன்னெடுக்கும் நிலைப்பாட்டை அரசாங்கம் மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதே எங்களின் நிலைப்பாடாகும்.

அரசியலமைப்பில் பலவந்தமாக உள்வாங்கப்பட்டுள்ள இவ்வாறான ஏற்பாடுகளை உடனடியாக திருத்தியமைக்க வேண்டும். இந்த மாகாண சபை தேர்தலினூடாக நாடுபூராகவும் 10 அமைச்சரவைகளை நடைமுறைப்படுத்தி, அவர்களுக்குத் தேவையான வசதிகள் மற்றும் வரப்பிரசாதங்களை ஏற்படுத்திக் கொடுக்கவும் மாகாணசபை தேர்தலுக்காக பெருந்தொகை நிதியை செலவுசெய்யவேண்டி ஏற்படும். அதனால் ஏற்படும் பொருளாதார தாக்கத்தை எம்மால் தாங்கிக்கொள்ள முடியாது.

நாட்டில் தற்போது செயற்பட்டுவரும் உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரங்களை நீக்குவதனூடாக மேற்குறிப்பிட்ட பிரச்சினைகள் மற்றும் சிக்கல்களுக்கும் தீர்வை பெற்றுக்கொள்ள முடியும். உத்தேச புதிய அரசியலமைப்பினூடாக ஏற்ற திருத்தங்களை கொண்டுவரும் வரை மாகாண சபை தேர்தலை நடத்தி அவற்றை உயிர்பெறச் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டாம் என்பதோடு, 13 மற்றும் 16ஆம் திருத்தங்களினால் ஏற்பட்டுள்ள ஆபத்தான விளைவுகளை உடனடியாக நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்."

இவ்வாறு அந்தக் கடிதத்தில் மகாசங்கத்தினர் குறிப்பிட்டுள்ளனர். பொதுத் தேர்தல் முடிந்த கையோடு, மாகாண சபைத் தேர்தலுக்கான அறிவிப்பு எப்போது வெளிவரும் என்றிருந்த எதிர்பார்ப்புகள் கேள்விக்குறியாகும் வகையில் நிகழ்வுகள் அரங்கேறிக்கொண்டிருக்கின்றன.

ஒருபுறம் மாகாண சபைத் தேர்தலை கடந்த அரசுகள் போல தமது அரசு தாமதப்படுத்தி இழுத்தடிக்காதென கூறிய இதே அரசின் உள்ளூராட்சி மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர, மாகாண சபைகளினால் இதுவரை நன்மைகள் நடந்திருக்கிறதா என்று கூறும் அறிக்கையொன்றை தருமாறு தனது அதிகாரிகளை கேட்டிருக்கிறார். அந்த அறிக்கை கிடைத்த பின்னர் அவர் எடுக்கும் நடவடிக்கை பற்றி அறியலாம்.

மறுபுறம் மாகாண சபை முறைமையை இலங்கைக்கு அறிமுகப்படுத்தி அதனூடாக தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வைத் தரலாமென விரும்பிய இந்தியா அமைதியாக எல்லாவற்றையும் அவதானித்துக்கொண்டிருக்கிறது.

இன்னொருபுறம் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தை அண்மித்த நாடாளுமன்ற அதிகாரத்தை பெற்றுள்ள ஆட்சியாளர்கள் முன் எதனை செய்வது, எதனை வலியுறுத்துவது, என்பன அறியாமல் தமிழ் அரசியல் கட்சிகள் தலைமேல் கைவைத்துக்கொண்டிருக்கின்றன. மாகாண சபை முறைமை மீது கையை வைக்கத் தயாராகிவரும் ஆட்சியாளர்கள், அதனை செய்ய வலியுறுத்தும் தரப்புகள் ஏதோ ஒரு விபரீதத்திற்கு கால்கோள் இடுகின்றனர் என்பது மட்டும் தெளிவாகிறது. கடந்த கால பட்டறிவுகள் யாருக்கும் எந்த ஞானத்தையும் வழங்கவில்லையென்பது துயரம்!

**"தமிழன்" பத்திரிகை தொடர்பான உங்கள் கருத்துக்களை news@liberty.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.**

# வெற்றுடல் மீதான அரசியல்



இலங்கைக்கு வெளியே தமிழர்கள் நம்பும் தரப்புகளாக இந்தியா, அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் சபை போன்றன காணப்படுகின்றன. இந்தத் தரப்புகள் உலகின் பலமான சக்திகள் எனவும், எப்போதும் நீதியின் பக்கம் நின்று தீர்ப்பு வழங்கவல்ல தேவதைகள் எனவும் தமிழர்கள் நம்பவைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் உண்மை அதுவல்ல என்பதை அந்நாடுகள் தம் உள்ளகப் பிரச்சினைகளைத் தீர்க்கப் படும்பாடுகளை அவதானிக்கும்போது மிக இலகுவாக உணர்ந்துகொள்ளலாம். உலகத்தை மிகச் சிறிய குட்டையாகச் சுருக்கி நம் கண்முன் நிறுத்தியிருக்கும் தொழில்நுட்பங்கள் நாடுகள் பற்றிய இந்தத் தேடலையும் இலகுபடுத்திவிட்டன. ஆனால், கிணற்றுக்குள் மாட்டிக்கொண்ட தமிழர்கள்தான் இன்னமும் அமெரிக்காவையும், ஐக்கிய நாடுகள் சபையையும், இந்தியாவையும் நம்பிக்கொண்டிருக்கின்றனர்.

### எப்போதிலிருந்து நம்பிக்கை?

1987ஆம் ஆண்டுக்கு முன்னரே தமிழர்களின் பிரச்சினை தொடர்பில் சர்வதேச நாடுகளின் கவனத்தை ஈர்க்கும் அரசியல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருப்பினும், அவை பெரிதான தாக்கத்தை செலுத்தவில்லை. இங்கு நடந்த "சம்பவங்களை", நாம் ஆப்கானிஸ்தான் குண்டுவெடிப்பு, ஈரான் குண்டுவெடிப்பு, காஷ்மீர் பயங்கரவாதிகள் ஒழிப்பு செய்திகளைப் படிப்பதுபோல படித்துக் கடந்துவிட்டது உலகு. 1987ஆம் ஆண்டுவரை வடக்கு, கிழக்கு பகுதிகளில் தாண்டவமாடிய இனவன்முறையை கட்டுப்படுத்த இந்தியா களமிறங்கியே ஆகவேண்டும் எனத் தமிழர்கள் மன்றாடினர். அதன்படி தன் புவிசார் அரசியல் பலப்படுத்தலுக்காக "அமைதி காக்கும் படை" என்ற பெயரில் இந்தியா உணவுப்பொட்டலத்துடன் தரையிறங்கியது. தமிழர்கள் ஆராத்தி, வாழ்த்தி வரவேற்றனர். உளப் புளகாங்கிதம் அடைந்தனர். ஆனால், வந்த இந்திய அமைதிப் படையோ, அமைதியெல்லாம் காக்கவில்லை. பல்லாயிரக்கணக்கான தமிழர்களை சுட்டுக்கொன்றுவிட்டுத் தன் தாயகம் திரும்பியது. பாடசாலைகள், மருத்துவமனைகள், கோயில்கள் எனப் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்படும் அனைத்து இடங்களிலும் பலியெடுத்த அமைதிப்படை, இலங்கையின் போரியல் வரலாற்றில் புதிய சகாப்தத்தையும் தொடங்கிவிட்டுப்போனது.

### நோர்வேயின் பங்கிற்கு…!

இந்திய அமைதிப் படை வெளியேற்றிதிலிருந்து 2002ஆம் ஆண்டுவரை பெரும்போர் நீடித்தது. இந்தக் காலப்பகுதிக்குள்தான் அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் மீதான நம்பிக்கையை தமிழர்கள் வளர்த்துக்கொண்டார்கள். தம்மைக் காப்பாற்ற இவர்களால்தான் முடியும் என்பதை அதீதமாக நம்பினர். 2002ஆம் ஆண்டில் விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட சமாதான பேச்சுகளுக்கான உடன்படிக்கையைத் தொடர்ந்து நீடித்த அமைதியும், பாதை திறப்புகளும் இந்த நம்பிக்கையை நூறு வீத நம்பிக்கைக்குத் தரமுயர்த்தின. எரிக் ஷொல்ஹெய்ம், யசுசி அகாசி, கோடன்வைஸ் போன்றவர்களும், போர் நிறுத்த கண்காணிப்புக்குழு, ஐக்கிய நாடுகள் சபையின் துணைநிறுவனங்கள் போன்ற நிறுவனங்களும்தான் இனித் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் மிகவேகமாகப் பரவியது. இந்த நிறுவனங்கள் 2002ஆம் ஆண்டு தொடக்கம் 2005ஆம் ஆண்டு வரையில் வடக்கு - கிழக்கு பகுதிகளில் மேற்கொண்ட உதவித் திட்டங்கள் அத்தகைய நம்பிக்கையை வளர்ப்பதில் பெரும் பங்காற்றின. ஆனால், இந்த நம்பிக்கை கர்த்தாக்களின் பலவீனமான – தந்திரமிக்க ஒரு பக்கச்சார்பான நிகழ்ச்சி நிரலினால் மீளவும் போர் ஆரம்பித்தது. அது முன்னைய காலப் போர்களை விட மிகக் கோரமாக இருந்தது. எனவேதான், தமிழர்கள் ஐக்கிய நாடுகள் சபையின் கிளிநொச்சி அலுவலக வளாகத்தின் வாயில் கதவைப் பிடித்துக்கொண்டு, "ஐ.நா.வே எமை அநாதையாய் விட்டு வெளியேறாதே" எனக் கதறினர். அந்தக் கதறல்களையெல்லாம் பிய்த்தெறிந்துவிட்டு நடையைக் கட்டியது ஐ.நா.

இறுதிப் போர் நேரத்திலும் அமெரிக்கா கப்பல் அனுப்பும், சண்முகம் கடையடியில் நிறுத்திவைத்துவிட்டு தேத்தண்ணி அருந்துகிறாராம் கப்பல் மாலுமி, இதோ இப்போது வந்துவிடும் அமெரிக்க கப்பல் போன்ற கதைகளெல்லாம் அவர்கள் மீதான அதீத நம்பிக்கையின்பாற்பட்டு அவிழ்த்துவிடப்பட்டன. ஆனால், ஐ.நா.வும் வரவில்லை, அமெரிக்க கப்பலும் வரவில்லை. எல்லாமே முடிந்து சாம்பலாகியது.

போரெல்லாம் முடிந்து மக்கள் நலன்புரி நிலையங்களுக்குத் திரும்பிய பிறகு, அப்போது ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளராக இருந்த பான் கீ மூன் திக் விஜயம் செய்தார். மக்கள் நலன்புரி நிலையங்களில் நன்றாக வாழ்வதாகச் சொன்னார். தமிழ் மக்களுக்கு இந்தியா மீதும், அமெரிக்கா மீதும், ஐக்கிய நாடுகள் மீதும் வெறுப்பு வரத் தொடங்க, இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அந்த வெறுப்பை விருப்பாக மாற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கின.

"இந்தியா ஒரு போதும் அதற்கு வழிவிடாது", "இந்தியாவை மீறி இனப்பிரச்சினைக்குத் தீர்வு சாத்தியமில்லை", "ஐக்கிய நாடுகள் சபை தலையிடும்" "போர்க்குற்ற விசாரணையை அமெரிக்கா தொடங்கும்" என முழங்கினர். யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த கனடா பிரதமரோடு யாழ். நூலகம் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், அங்கிருந்து"வல்லரசையே வளைத்துவிட்டோம்" என அறிக்கை விடுத்தனர்.

ஆனால், இந்த வல்லரசுகள் இலங்கை விடயத்தில் ஒரு வெங்காயத்தைக் கூட உரிக்க முடியாதளவுக்கு இருக்கின்றன என்பதை இவர்களால் எங்கேயும் மக்களுக்கு சொல்ல முடியவில்லை. ஏனெனில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படுத்தும் நிகழ்ச்சி நிரல் அப்படியானது.

எதுவித அரசியலுக்காகவும் – பேரம்பேசலுக்காகவும் தமிழர்களின் வாக்குகளைப் பயன்படுத்தாது, நல்லாட்சி என்கிற மேற்குசார்புடைய "கூழாம்பாணி" கொண்டுவருவதற்காக தமிழர்களின் வாக்குகளைத் திரட்டிக்கொடுத்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. இந்திய - மேற்கு சார்புடைய அரசொன்றின் நிறுவலுக்காக இடம்பெற்ற சூதாட்டத்தில் பலமிக்க தரப்புகளாகத் தமிழர்கள் இருந்தபோதிலும், வார்த்தையளவில் கூட தமிழர்களுக்கு நன்மைபயக்கும் காரியங்களுக்கு யாராலும் உறுதியளிக்கப்படவில்லை. வெறும் கறிவேப்பிலையாகத் தமிழர்களைப் பயன்படுத்தும் அனுமதியை மேற்கு நாடுகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்படுத்திக்கொடுத்தது. போருக்குப் பின்னர் தமிழர்கள் சர்வதேசத்திடம் இறைஞ்சிக்கொண்டிருந்த நீதிக்கான எந்தத் தீர்ப்பும் இல்லாமல் அனைத்தும் நீர்த்துப்போகச் செய்யும் பொறிமுறையொன்றை கூட்டமைப்பே மேற்கொண்டது. இவை அனைத்துக்கும் வைக்கப்பட்ட பெயர்தான் "சாணக்கிய அரசியல்".

இந்த சாணக்கிய அரசியல் சர்வதேச அளவில் தமிழர்களை வெற்றுடல்களாக நிறுத்தியிருக்கிறதோடு மட்டுமல்லாது, மிகவும் நல்லவர், மென்மையானவர், தீர்வைத் தரக்கூடியவர், உன்னதமான ஜனநாயகவாதி என கூட்டமைப்பினரால் விளம்பரப்படுத்தப்பட்ட மைத்ரிபால சிறிசேன, ரணில் விக்ரமசிங்க, சஜித் பிரேமதாஸ போன்றோரின் மெய்முகத்தையும் அம்பலப்படுத்தியிருக்கிறது. தம் கையில் ஆட்சி இருக்கும் வரைக்கும் தமிழர்கள் மீது உன்னதம் கொண்டவர்களாகக் காட்டிக்கொண்ட இவர்கள், ஆட்சி கைமாறியதும், பழைய நிலைகளுக்கே திரும்பிவிட்டனர். தமிழர்களின் இறைமை குறித்து பாராளுமன்றத்தில் தன் கன்னி உரையை வாசித்த பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் மீதான முதல் கல்லெறி நல்லாட்சி கோஷ்டியின் பக்கமிருந்தே விழுந்தது. அந்த உரையை நாடாளுமன்ற குறிப்பேட்டிலிருந்தே நீக்க வேண்டும் எனக் கங்கணங்கட்டி இறங்கியவர்களும் புனிதராக வலம் வந்த சஜித் அணியில்தான் இருக்கின்றனர்.

ஆக, தமிழர் முன்னால் நம்பக்கூடிய – நேசக்கரம் நீட்டக்கூடிய நாடுகளாக, நீதி தரக்கூடிய அமைப்புகளாக, நேர்மையான இராஜதந்திரிகளாக, உன்னதமான நேயமிக்க அரசியல் தலைவர்களாக அடையாளம் காட்டப்படும் அனைவரும் கொடூரமான பேயைவிட மோசமானவர்களாக இருக்கின்றனர். இந்த அனுபவங்களின்படியாவது இனிவரும் காலங்களில் தமிழர்கள் தம் வெற்றுடல் மீது நடத்தப்படும் அரசியலைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப செயற்படவேண்டும்.

- ஜெரா -

i ig l h l

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.



# 19 நாட்டை பம்பரமாக்கிய மிகப்பெரிய கலகக்காரன்



க. குணராசா
Kunarasa14@gmail.com

★ 20 - புதிய அரசின் பிரசவம்

★ 17ஆவது திருத்தம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. அரசும் (ஆளும் தரப்பும்) எதிர்க்கட்சியும் கூட்டாக நிறைவேற்றிய திருத்தச் சட்டம்.

★ 18, 19 ஆவது திருத்தங்கள் 17ஐ அடியொற்றியதாக செய்யப்பட்ட மாற்றங்கள்.

★ 20 ஆவது திருத்தமும் அடிப்படை மாறாத முக்கிய திருத்தமாக அமையும்.

★ உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு நல்லாட்சியே தார்மீகப் பொறுப்பு.

புதிய அரசாங்கத்தின் முதலாவது அமர்வு மிகவும் எளிமையாக நடந்துமுடிந்திருக்கிறது. காலையில் சம்பிரதாயபூர்வ அமர்வு. பிற்பகலில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கொள்கை விளக்கவுரையாற்றினார். சிம்மாசன உரையென்றும் இதனை அழைப்பது வழமை.

தன்மீது நம்பிக்கை வைத்த 65 இலட்ச மக்களின் எதிர்பார்ப்பை முழுமையாக நிறைவேற்றுவேன் என்று இதில் திருத்தமாகக் கூறிய அவர், ஊழல், விரயங்களை முழுமையாகத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

“ஊழல், விரயங்களில் ஈடுபடுவோரை தடுப்பதில் மட்டுமல்ல, தண்டிக்கவும் தயங்கமாட்டேன். அமைச்சுகள் மற்றும் நிறுவனங்கள் மூலமாக முன்னெடுக்கும் இலக்கு நோக்கிய வேலைத்திட்டத்தை நாம் கண்காணிப்போம். எவரேனும் தோல்வியடைந்தால் மாற்றங்களைச் செய்ய நான் பின்வாங்கமாட்டேன்'' என்றார் அவர்.

இவ்வாறு நிர்வாக ரீதியாக தனது கருத்துகளை தெளிவுபடுத்திய ஜனாதிபதி அரசியலமைப்புக்கான 19ஆவது திருத்தத்தை நீக்கப்போவதாக அறிவித்தார். அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தமும் மாற்றியமைக்கப்படுமென ஊடகங்களில் பரவலாக செய்திகள் வெளிவந்தன. புதிதாக நியமிக்கப்பட்ட புதிய அமைச்சர்களே இது தொடர்பாக எதிரும் புதிருமான கருத்துகளை தெரிவித்திருந்தனர். என்றாலும் ஜனாதிபதி இது தொடர்பாக எந்தவொரு கருத்தையும் தெரிவிக்கவில்லை.

19ஆவது திருத்தம் ஏன் நீக்கப்பட வேண்டும் என தனது கொள்கை விளக்கத்தில் தெளிவுபடுத்திய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பின்வருமாறு கூறினார்.

ஒரு ஜனநாயக ஆட்சியின் அடையாளமும் வெற்றியும் அதன் அரசியலமைப்பிலேயே தங்கியுள்ளது. 1978இல் உருவாக்கப்பட்ட யாப்பு 19 தடவைகள் திருத்தப்பட்டுள்ளன. இந்த யாப்பில் ஏற்பட்டுள்ள உறுதியற்ற தன்மைகள் காரணமாக நாட்டில் பல குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன. அரசியலமைப்பை திருத்துவதற்கு மக்கள் எமக்கு ஆணை வழங்கியிருக்கிறார்கள். இதன் முதலாவது கடமையாக 19 ஆவது திருத்தச்சட்டத்தை நீக்க நடவடிக்கை எடுப்போம். அதன்பின்னர் நாட்டுக்குப் பொருத்தமான புதிய அரசியலமைப்பை நாம் உருவாக்குவோம் – என தெளிவாக எடுத்துச் சொன்னார்.

உண்மையில் சுதந்திரத்தின் பின்னர் சோல்பரி அரசியல் யாப்பைத் தொடர்ந்து முதலாவது குடியரசு யாப்பு 1972ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அதில் பூரணத்துவம் இல்லை என்பது அனுபவ ரீதியாக கண்டறியப்பட்டதால், 2ஆவது குடியரசு யாப்பு 1978ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்தன தலைமையிலான ஐ.தே.க. அரசு கொண்டுவந்தது. 1978ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 7ஆம் திகதி கொண்டுவரப்பட்ட இந்த அரசியலமைப்புத்தான் இன்றுவரை நடைமுறையில் இருக்கிறது. இறுதியாக கொண்டுவரப்பட்ட யாப்பாகவே இதனைக்கொள்ளலாம். அதேவேளை, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இலங்கையில் அறிமுகப்படுத்திய யாப்பும் இதுதான்.

1978ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இந்தக் குடியரசு யாப்புக்கு இதுவரை 19 திருத்தங்கள் முன்வைக்கப்பட்டு 20ஆவது திருத்தத்தையும் எதிர்பார்த்த நிலையில் நடைமுறையில் இருந்துவருகிறது.

ஜே.ஆர்.ஜெயவர்தன தலைமையிலான ஐ.தே.க அரசு நிறைவேற்று அதிகாரம் கொண்ட இந்த யாப்பை கொண்டுவருவதற்கு மூன்று முக்கிய காரணிகள் பிரதானமாக அமைந்தன.

1 . 1972 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பின் குறைபாடுகள்.

2 . ஐ.தே.க.வின் நீண்டகால ஆட்சி அதிகார இலக்கு.

3 . 1977ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 2/3 பெரும்பான்மை வெற்றி.

இந்த மூன்றிலிரண்டு பெரும்பான்மையை வைத்தே முக்கிய தேர்தல் முறைமை ஒன்றையும் ஜே.ஆர்.உருவாக்கினார். இன்று பல்வேறு சிக்கல்களை தோற்றுவித்திருக்கும் விகிதாசார தேர்தல் முறைமைதான் அது. உண்மையில் ஐ.தே.க. சொந்த நலன் சார்ந்தே இந்தத் தேர்தல் முறைமையை வடிவமைத்தது என்பது அரசியல் ஆய்வாளர்களின் கருத்தாகும். அதாவது, தொடர்ச்சியாக ஆட்சியில் இருக்கக்கூடிய வகையிலேயே விகிதாசார தேர்தல் முறைமையை உருவாக்கியது.

என்றாலும், ஜே.ஆர்.ஜெயவர்தனவின் மிகவும் சூட்சுமமான திட்டத்தை ஒகஸ்ட் 5ஆம் திகதி நடந்த பொதுத் தேர்தல் தவிடுபொடியாக்கியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (SLPP) 145 ஆசனங்களைப் பெற்று தனிப்பெரும் கட்சியாக வெற்றிவாகை சூடியுள்ளது. 225 பேரைக்கொண்ட நாடாளுமன்றத்தில் 145 என்பது கிட்டத்தட்ட 2/3 பெரும்பான்மைக்கு அண்மித்த ஆசனங்களாகும்.

இந்த நிலையில் இலங்கையின் அரசியலமைப்பை (நடைமுறையிலுள்ள) மாற்றுவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

19 தடவைகள் இந்த அரசியலமைப்பு திருத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் அரசியலமைப்பின் உறுதியற்ற தன்மையை நாம் புரிந்துகொள்ள முடிகிறது. நாட்டில் ஏற்பட்ட பல்வேறு அரசியல் குழப்பநிலைகளுக்கு இதுவே காரணமாக அமைந்திருக்கிறது என்ற கருத்தை புறந்தள்ள முடியாது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு 2010 ஆம் ஆண்டு செப்டெம்பர் 8ஆம் திகதியன்று அரசியலமைப்புக்கான 18ஆவது திருத்தத்தை சபையில் நிறைவேற்றியது. இதற்கு ஆதரவாக 161 பேரும் எதிராக 17 பேரும் வாக்களித்தனர். 144 மேலதிக வாக்குகளால் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

18ஆவது திருத்தம் ஜனநாயகத்துக்கு எதிரானதென்று கூறியே 19ஆவது திருத்தத்தை நல்லாட்சி அரசு (மைத்திரி – ரணில்) கொண்டுவந்தது. என்றாலும் 19 நிறைவேற்றப்பட்ட பின்பே நாட்டில் அரசியல் ஸ்திரமற்ற பதற்றநிலை ஏற்பட்டது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நேரடியாக மோதும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. நிறைவேற்று அதிகாரமும் நாடாளுமன்றமும் நேரடி மோதலில் ஈடுபட்டதற்கு 19ஆவது திருத்தம்தான் காரணமாக அமைந்தது.

அரசியலமைப்புக்கான திருத்தங்களைப் பார்க்கின்றபோது 6 ஆவது, 13 ஆவது, 17 ஆவது, 18 ஆவது, 19 ஆவது திருத்தங்கள் நாட்டின் நிர்வாகம், சுமுகமான ஆட்சி ஆகிய விடயங்களோடு சம்பந்தப்பட்ட திருத்தங்களாகும. 6 ஆவது – நாட்டின் பிரிவினைக்கு தூண்டுபவர்களுக்கு எதிரானது. 13ஆவது திருத்தச் சட்டம் 9 மாகாண சபைகளுக்கான கட்டமைப்புக்குரியது.

அரசியலமைப்புக்கான 17ஆவது திருத்தம்தான் மிக முக்கியமான திருத்தச்சட்டமாகப் பார்க்கப்படுகிறது. 18, 19 ஆவது திருத்தங்கள் 17ஐ மாற்றியமைக்கும் திருத்தங்களாகவே இருக்கின்றன.

உண்மையில் 17 ஆவது திருத்தம் என்பது நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்துவதற்கான முதலாவது திருத்தமாகும். ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்துவதற்கான முதலாவது திருத்தமாகும். ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்தாவிட்டால் ஜனநாயகம் கேள்விக்குறியாகிவிடுமென்று அரசியல் கட்சிகள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வந்தனர். இந்த நிலையில்தான் 03-10-2001 அன்று 17ஆவது திருத்தச் சட்டம் சபையில் நிறைவேற்றப்பட்டது.

இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் அரசாங்கமும் எதிர்க்கட்சியும் சேர்ந்து நிறைவேற்றிய சட்டமே அரசியலமைப்புக்கான 14 ஆவது திருத்தமாகும்.

### அரசியலமைப்புக்கான 17ஆவது திருத்தம்

★ ஜனாதிபதியின் அளவுகடந்த அதிகாரங்கள் குறைப்பு

★ அரசியலமைப்பு பேரவை (Constitutional Council) உருவாக்கப்பட்டது முக்கிய விடயம்.

★ ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பகிரங்க சேவை ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு, நிதிச்சேவை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, எல்லை நிர்ணயக் குழு.

★ அரச தலையீடுகள் இல்லாத சுதந்திர ஆணைக்குழுக்களாக இவை அமைகின்றன.

★ அரசியலமைப்புப் பேரவையில் பல்வேறு தரப்பினரும் பங்கேற்க வாய்ப்பு.

★ சிறுபான்மையினருக்கும் முக்கியத்துவம்.

★ இந்திய வம்சாவளி மக்களையும் தனி இனக் குழுமமாக அங்கீகரித்து பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளது. இது சிறப்பம்சமாக கருதப்படுகிறது.

★ தேர்தல் ஆணைக்குழுவுக்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் அரசியல் தலையீடுகளை தடுத்துள்ளது.

★ பகிரங்க சேவை, தேர்தல், தேசிய பொலிஸ் சேவை ஆணைக்குழுக்கள் நேரடியாக நாடாளுமன்றத்துக்கு பொறுப்பு கூறவேண்டும். இது மக்கள் ஆட்சிக் கோட்பாட்டை வலுவேற்றுகிறது.

இவை அனைத்தும் 17ஆவது திருத்தத்தில் கோடிட்டுக் காட்டக்கூடியவை. என்றாலும் முக்கிய குறைபாடொன்றையும் இங்கே சுட்டிக்காட்ட வேண்டும்.

அரசியலமைப்பு பேரவையில் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் உறுதிசெய்யப்பட்டிருந்தாலும், திருத்தத்தின் மூலம் உருவாக்கப்படும் ஆணைக்குழுக்களில் சிறுபான்மை பிரதிநிதித்துவம் பற்றி எதுவும் சொல்லப்படவில்லை. 17ஆவது திருத்தத்தில் இதனையொரு சுட்டிக்காட்டத்தக்க குறைபாடாகவே காணமுடிகிறது.

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தைக் கட்டுப்படுத்தி (மட்டுப்படுத்தி) ஜனநாயக விழுமியங்களுக்கு இந்தத் திருத்தம் வழிவகுத்தாலும் ஒருதுளிகூட நடைமுறைப்படுத்தப்படவில்லையென்பது வருந்தத்தக்கது.

எப்படியோ ஆட்சியாளர்களால் இழுத்தடிக்கப்பட்ட நிலையில், (ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்னர்) 18ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது.

### அரசியலமைப்புக்கான 18ஆவது திருத்தம்

2010ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 18ஆம் திகதி அரசியலமைப்புக்கான திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இது தொடர்பிலான பிரேரணைக்கு ஆதரவாக 161 வாக்குகளும் எதிராக 17 வாக்குகளும் கிடைத்தன. அதாவது 225 பேர் கொண்ட சபையில் 144 மேலதிக வாக்குகளால் இந்தத் திருத்தம் நிறைவேற்றப்பட்டது.

கடுமையான அரசியல் விமர்சனங்களுக்குள்ளும் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதென்பதையும் நாம் இங்கு சுட்டிக்காட்டவேண்டும். ஜனநாயகம் கேள்விக்குறியாகிறதென எதிர்த்தரப்பினர் கூக்குரலிட்டாலும் ஜனநாயகத்துக்கு வலுவேற்றவே திருத்தம் முன்வைக்கப்படுவதாக அரசாங்கத் தரப்பு உறுதியாகப் பதிலளித்தது.

18ஆவது திருத்தம் என்பது 17ஆவது திருத்தத்தின் அடிப்படையை ஒத்ததாகும். அதாவது, 17ஆவது திருத்தத்துக்கான மற்றொரு திருத்தமாகவே இதனைக்கொள்ள முடியும். 18ஆவது திருத்தத்தின்படி 17ஆவது திருத்தம் நிராகரிக்கப்படுகிறது.

★ ஜனாதிபதி மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை நாடாளுமன்றுக்கு சமுகமளிக்கவேண்டும். இதன்படி சகல எம்.பி.க்களுக்கும் உள்ள சிறப்புரிமைகளையும் அவர் பெறுவார். என்றாலும், ஜனாதிபதிக்கு சபையில் வாக்களிக்கும் உரிமை கிடையாது.

★ ஜனாதிபதி தேர்தலில் எப்போதும் போட்டியிடலாம். இரண்டு தடவைகளுக்கு மேல் போட்டியிட முடியாது என்ற வரையறை மாற்றப்பட்டு தொடர்ந்தும் போட்டியிடுவதற்கு வழி வகுக்கப்பட்டுள்ளது.

★ Constitutional Council - அரசியலமைப்புப் பேரவை 5 பேர் கொண்ட நாடாளுமன்ற கவுன்ஸிலினால் வழிநடத்தப்படும். (17ஆவது திருத்தத்தின் கீழ் உள்ள இந்தப் பேரவையில் 10 பேர் கொண்ட உறுப்பினர்கள் நியமிக்கப்படுவர்.)

★ சுயாதீன ஆணைக்குழுக்கள் ஜனாதிபதியின் அதிகாரத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. (17ஆவது திருத்தத்தில் அரசியலமைப்புப் பேரவையினாலேயே ஆணைக்குழுக்களின் தலைவர்கள் நியமிக்கப்படுவர்.)

இவை உட்பட மிக முக்கியமான விடயங்கள் 18ஆவது திருத்தத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. என்றாலும் இந்தத் திருத்தமும் துரதிர்ஷ்டவசமாக முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு தேர்தலில் தோல்வியடைந்ததையடுத்து இது கிடப்பில் போடப்பட்டது.

இதன்பின்பு ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னர்தான் 19ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டது. 2015இல் பதவிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கத்தில்தான் 19ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன – பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான தேசிய அரசாங்கமே ‘நல்லாட்சி’ அரசாங்கமென பிரகடனப்படுத்தி செயற்பட்டுவந்தது. நாட்டில் ஜனநாயகத்தை வலுப்படுத்தும் வகையில் 19ஆவது திருத்தத்தைக் கொண்டுவருவதாக அறிவித்தனர். இதன்படி 2015ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி இந்தத் திருத்தம் நிறைவேற்றப்பட்டது.

225 பேர் கொண்ட சபையில் 215 பேர் பிரேரணைக்குச் சார்பாக வாக்களித்தனர். ஒரேயொரு வாக்கு எதிர்ப்பாக போடப்பட்டது. 8 உறுப்பினர்கள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

### 19ஆவது திருத்தம்

★ அரசியலமைப்பின் 17ஆவது திருத்தத்தின் மிகவும் முன்னேற்றகரமான திருத்தமாகவே இது கருதப்படுகிறது. (Improvement of 17th Amendment)

★ 1978ஆம் ஆண்டு குடியரசு யாப்பின் கீழ் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைப்பதற்கான திருத்தம் (Dilution many powers of Executive Presidency – 1978 Constitution)

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்

# இரத்தினக்கற்கள்



– அனுஷா மாசிலாமணி

மரகதப்பச்சையானது நவக்கிரகங்களில் புதனுக்குரியதாகும். சூரியன் மிதுனராசியில் பிரவேசிக்கும் ஆனி மாதத்தில் அதாவது, ஜூன் 15ஆம் திகதியிலிருந்து ஜூலை16 வரையான காலப்பகுதியில் பிறந்த புதனின் ஆதிக்கத்துக்கு உட்பட்டவர்கள் அணிவதால் மிகுந்த பலன்களை தரக்கூடியதாம். இந்தக் கல்லானது மனவலிமையை தரக்கூடியது எனவும், மனதை ஒருநிலைப்படுத்தி தைரியமான, தெளிவான முடிவுகளை எடுக்கக்கூடிய ஆற்றலைத்தரும் எனவும் சாஸ்திரங்களில் கூறப்படுகிறது. மேலும் இந்த கற்களானது மோதிரம் மற்றும் டொலர்களில் பதித்து அணியும்போது நோயற்ற வாழ்வை தரக்கூடியது எனவும் கூறுகின்றனர்.

அடுத்ததாக நவரத்தினங்களில் வஜ்ரம் என்று அறியப்படும் வைரக்கல்லை பற்றி பார்ப்போம். இது ஒளி ஊடுருவக்கூடிய கற்களில் நிறமற்ற வகையாகும்.

உலகில் இதுவரை கண்டறியப்பட்டுள்ள அனைத்து இரத்தின வகைகளிலும் மிகவும் உறுதித்தன்மை கூடிய, உடைக்கமுடியாத கடினமான கல்லாகும். பூமிக்கடியில் பல்வேறுபட்ட இரசாயன காரணிகளால் காபன் எனும் மூலகம் மட்டும் இறுக்கமடைவதால் இந்த வைரம் உருவாவதாக இரத்தினவியலாளர்கள் கூறுகின்றனர். வைரத்தை வைரம் கொண்டே அறுக்கலாம் என்றொரு பழமொழி உள்ளமை நாம் அறிந்ததே, இதன் கடினத்தன்மைக்கு உவமானமாகவே அந்த பழமொழியை உபயோகிக்கின்றனர்.

இந்த வகைக் கற்கள் கொங்கோ, ரஷ்யா போன்ற நாடுகளிலும் மற்றும் பல ஆபிரிக்க நாடுகளிலும் தாராளமாக கிடைப்பது குறிப்பிடத்தக்கது.

நவக்கிரகங்களில் சுக்கிரனுக்கான இரத்தினமாக இந்த வைரக்கல் அறியப்படுகின்றது. வாழ்க்கையில் எல்லாவிதமான சுகபோகங்களையும் பெற்றவர்களை சுக்கிரன் உச்சத்தில் உள்ளவர்கள் என பகிடியாக கூறுவார்கள். ஆனால், அதுவே நிஜம் என சோதிடவியலாளர்கள் கூறுகின்றனர். சுக்கிரனின் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் வைரக்கல்லை அணியவேண்டியவர்களாவர். அதிர்ஷ்டத்துக்காகவும், தொழில் வியாபார விருத்திக்காகவும் வைரக்கல்லை வெள்ளி மோதிரத்தில் பதித்து ஆண்கள் வலது கையிலும், பெண்கள் இடது கையிலும் அணியவேண்டும். வைரமானது அணிபவர்களுக்கு தைரியத்தையும், வெற்றியையும், பலத்தையும் கொடுக்கக்கூடியது எனவும் எதிர்மறை எண்ணங்களிலிருந்து விடுபட செய்யும் எனவும் நம்பப்படுகின்றது. ஆகச்சிறந்தவைகளே உலகில் வைரத்தோடு ஒப்பிடப்படுகின்றன. எனவே, விலையிலும் சற்று அதிகமான வைரத்தில் தரமானதை தெரிவுசெய்து அணிவதன் மூலம் நல்ல பலன்களை பெறலாம்.

நவரத்தினங்களில் அடுத்ததாக பவளம் பற்றி விரிவாக பார்க்கலாம்.

தொடரும்...

## 19: நாட்டை பம்பரமாக்கிய..

09ஆம் பக்கத் தொடர்ச்சி

★ 19ஆம் திருத்தத்தின்கீழ் நாட்டின் தலைவராக ஜனாதிபதியும் அரசாங்கத் தலைவராக பிரதமரும் விளங்குவர். (Head of State – Executive President, Prime Minister – Head of Government)

★ ஜனாதிபதி நேரடியாக பிரதமரைக் கட்டுப்படுத்த முடியாது. சபாநாயகருடனேயே அவருடைய தொடர்பு இருக்கும்.

★ பிரதமரின் ஆலோசனையுடன் பிரதிப் பிரதமர் ஒருவரை ஜனாதிபதி நியமிக்கலாம்.

★ ஜனாதிபதியை நீக்குவதற்கு நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரலாம். அதற்கு 2/3 பெரும்பான்மை அவசியம். 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பில் உள்ளதுபோல – Impeachment - அரசியல் குற்றப்பிரேரணை என்பது இல்லாமல் செய்யப்பட்டுள்ளது.

★ நாட்டின் தலைவரான ஜனாதிபதி முப்படைகளின் தளபதியாகவும் செயற்படுவார்.

★ அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் 30இற்கு மேற்படக்கூடாது. பிரதி அமைச்சர்கள் 40இற்கு மேற்படக்கூடாது.

★ நாடாளுமன்றம் கூடி 4 ½ வருடங்களின் பின்பே நாடாளுமன்றை கலைக்கும் அதிகாரம் அதற்கு முன்பு கலைப்பதாயின் 2/3 பெரும்பான்மையுடன் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

★ இரட்டைப் பிரஜாவுரிமையுள்ளவர்கள் தேர்தலில் போட்டியிட முடியாது.

★ தகவல் அறியும் உரிமைச் சட்டம் அறிமுகம். (Right to Information Act)

★ அரசியலமைப்புப் பேரவைக்கு (Constitutional Council ) முழுமையான அதிகாரங்கள்.

★ சுயாதீன ஆணைக்குழுக்கள் (முழுமையான செயற்பாட்டில்)

19ஆவது திருத்தத்திலுள்ள சிறப்பான விடயங்கள் இவை. இதனை விடவும் நிறைவேற்று அதிகாரத்தை மட்டுப்படுத்தும் அதிகாரங்களும் இந்தத் திருத்தத்தில் இருக்கின்றன.

“நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதியாக இருந்துகொண்டே தனது அதிகாரங்களைக் குறைப்பதற்கு ஒப்பமிடும் ஜனாதிபதி உலகில் நான் மட்டுந்தான்” என அப்போதைய நல்லாட்சி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மார்பு தட்டினார்.

ஜனநாயகத்தை வலுப்படுத்தி நாட்டில் நல்லாட்சியை நிலைநிறுத்துவதே தனது ஒரே இலட்சியமென அவர் அப்போது கூறினார்.

ஆனால், நடந்ததெல்லாம் பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கான கதையாகத்தான் முடிந்தது.

நாட்டில் ஒரு ஸ்திரமற்ற நிலை உருவாகுவதற்கு அரசியலமைப்பின் 19ஆவது திருத்தம் அமைந்துவிட்டதையே அது நன்கு உணர்த்துகிறது.

ஜனாதிபதி மைத்திரியினதும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினதும் தேனிலவுக் காலம் முறிவதற்கும் 19தான் காரணமாக அமைந்தது.

நாடாளுமன்றத்துக்கு வழங்கிய அதிகாரங்களை வைத்து ரணில் மோசடிகளிலும் ஏமாற்றும் சதிவேலைகளிலும் ஈடுபடுகிறாரென்று பொது வெளிகளிலும் தொலைக்காட்சிகளிலும் ஜனாதிபதி மைத்திரி குற்றஞ்சாட்டினார். மத்திய வங்கி பிணைமுறி மோசடி பொலிஸாரையும் பொலிஸ் விசாரணைகளையும் திசை திருப்புகிறாரென பிரதமர் ரணில் மீது சரமாரியான குற்றச்சாட்டுகளை முன்வைத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது அதிகாரங்களுக்கு உட்பட்டு பிரதமரை மாற்றினார். முன்னாள் ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷவை அழைத்த மைத்திரிபால சிறிசேன திடீரென பிரதமராக சத்தியப்பிரமாணம் செய்துவைத்தார். ஆனால், பிரதமர் மஹிந்தவால் 52 நாட்களே பதவியில் இருக்க முடிந்தது. இதற்கு 19இல் உள்ள குழப்பமே காரணமாக அமைந்தது.

ஆனாலும், உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கமைய பிரதமர் மஹிந்த பதவி விலகினாரென்பது உலகறிந்த உண்மை. 52 நாட்களில் நாடாளுமன்றத்துக்கும் நிறைவேற்று அதிகாரத்துக்குமிடையில் ஏற்பட்ட அதிகார இழுபறி, நாடாளுமன்றத்தை ரணகளமாக்குமளவுக்கு மாறியது. இரண்டு அதிகாரங்களும் கத்தியோடும் கதிரையோடும் மோதியது உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கிறது.

ஈற்றில் ஒன்றை மட்டும் உணரமுடிந்தது. 19ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் பிரதமரை நீக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லையென்ற உண்மை உறுதியானது. பதவி நீக்கும் அதிகாரம் தன்னிடமிருந்து பறிக்கப்பட்டது தெரியாது என்று அப்போதைய ஜனாதிபதியான மைத்திரி பகிரங்கமாகக் கூறினார். அவருடைய இந்த அறிவிப்பு வெட்கப்படக்கூடியதாக இருந்தாலும் ரணிலின் கபடத்தனத்தையும் அவர் போட்டுடைத்தார்.

19ஆவது திருத்தம் வரையப்படும்போது சிங்களத்திலொன்றும் ஆங்கிலத்தில் வேறொன்றும் புகுத்தி சில விடயங்களை தன்னால் புரியாத வகையில் ரணில் தன்னை மாற்றியுள்ளாரென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கவலையோடு தெரிவித்தார்.

19ஆவது திருத்தத்தை ரணில் தனக்குச் சாதகமான முறையில் மாற்றியிருப்பது பின்னர்தான் சகலருக்கும் புரியக்கூடியதாக இருந்தது.

நீண்ட இழுபறிக்குப் பின்னர் மிகவும் நொந்துபோன ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 19ஐ உடனடியாக மாற்றியே ஆகவேண்டுமென அறிவித்தார்.

19ஆவது திருத்தத்தைக் கொண்டுவருவதற்கு முழுமூச்சுடன் செயற்பட்ட ஜனாதிபதி மைத்திரி, அதனை மாற்ற வேண்டுமென்ற நிலைக்குத் தள்ளப்படுவதற்கு அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கதான் காரணமென்பதை ஏற்கும் அளவுக்கு நிலைமை தள்ளப்பட்டது.

நல்லாட்சி என்ற பெயரில் உருவாக்கப்பட்ட அரசாங்கம் சிதைந்து சின்னாபின்னமாகப் போனதற்கு 19ஆவது திருத்தமும் ஒரு காரணமாக அமைந்தது. இரண்டு பெரும் தேசியக் கட்சிகளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து அமைத்த தேசிய அரசுதான் நல்லாட்சி என்ற பெயரில் மிளிர்ந்தது. (ஆரம்ப காலகட்டத்தில்)

என்றாலும் 19ஐப் பயன்படுத்தி அரசியல் அதிகாரங்களை தன்வயப்படுத்த (ஐ.தே.க.) ரணில் முயன்றதனால்தான் நல்லாட்சி என்ற சொல்லே இன்று மக்களை கசப்படையச் செய்திருக்கிறது.

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல்கள் இலங்கையை நிலைகுலையச் செய்தது. 30 வருட யுத்தத்தை முடித்து பெருமூச்சுவிட்ட நமக்கு பேரிடியாகவே இது இருந்தது.

அன்றைய தினம் கிறிஸ்தவ தேவாலயங்களிலும் கொழும்பில் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களிலும் தொடர்ச்சியாக நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல்களில் 253இற்கும் அதிகமானோர் உயிரிழந்ததோடு, ஆயிரக்கணக்கானோர் படுகாயமடைந்தனர்.

இஸ்லாமிய அடிப்படைவாதிகளால் நடத்தப்பட்ட இந்த பயங்கரவாதத் தாக்குதல் உலகத்துக்கு மிகப் பெரிய செய்தியைக் கொடுத்தது. இப்படியான தாக்குதலொன்று நடக்கப்போவதாக இந்திய உளவுப் பிரிவு முன்கூட்டியே இலங்கைக்கு அறிவித்திருந்தது. அதேநேரம், இலங்கை உளவுப் பிரிவும் இது தொடர்பான தகவல்களைத் திரட்டி உஷாரடைந்தது. என்றாலும் அதனைத் தடுப்பதற்கான எந்தவொரு நடவடிக்கையும் உயர்மட்டத்தினரால் வழங்கப்படவில்லை.

அதாவது, தகவல் தெரிந்திருந்தும் தாக்குதல்களை தடுப்பதற்கான நடவடிக்கைகளை உயர்மட்ட அதிகாரிகள் எடுக்கவில்லை. இது தொடர்பில் அப்போதைய பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவும் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோவும் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

தாக்குதல் தொடர்பில் உரிய தகவல்கள் வழங்கப்பட்டும் தடுப்பு நடவடிக்கைகளில் இவர்கள் இருவரும் ஈடுபடவில்லையென்பதே இவர்கள் மீதான குற்றச்சாட்டாகும். உளவுப் பிரிவு தகவல் கொடுத்தும் இருவரும் அலட்சியமாக இருந்துள்ளார்கள் என்பதுதான் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து ஊர்ஜிதமாகியிருக்கிறது.

நல்லாட்சி அரசாங்கத்தில் பொலிஸ் அதிகாரம் பிரதமரின் கீழ் இருந்தது. ஜனாதிபதி முப்படைகளின் தளபதியாக இருந்தார். என்றாலும் பாதுகாப்புக் கவுன்ஸில் உரியவாறு கூடுவதில்லையெனக் கூறப்பட்டது. இதனை ஹேமசிறி பெர்னாண்டோவும் பூஜித் ஜயசுந்தரவும் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர். பாதுகாப்புக் கவுன்ஸில் செயற்பாட்டில் இருக்கும்போதே தனிப்பட்ட குழுவொன்றை (பாதுகாப்பு) அமைத்து ஜனாதிபதி நிலைமைகளை அவ்வப்போது ஆராய்வது வழக்கம். இதனால் பிரதமர், ஜனாதிபதி ஆகியோரை சந்திப்பதும் சிரமமாக இருந்ததென்றும் இருவரும் சுட்டிக்காட்டினர்.

விசேட ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் இதற்காக அமைக்கப்பட்டு துரித விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தாக்குதல்களைத் தடுக்க முடியாமல் போனதற்கு யார் காரணகர்த்தாக்கள் என்பது துரிதகதியில் கண்டறியப்பட்டு விடுமென்ற நம்பிக்கை மக்களிடம் இருக்கின்றது.

தொடர் குண்டுத்தாக்குதல்களை தடுக்க முடியாத குற்றவாளிகளில் 19ஆவது திருத்தமும் ஒரு காரணமாகவே இருக்கப்போகிறது. நல்லாட்சியின் இரு தலைவர்களும் (மைத்திரி – ரணில்) அதிகாரப் போட்டியின் உச்சத்தில் இருந்தபோதுதான் பயங்கரவாதிகள் தாக்குதல்களை நடத்தியிருக்கின்றனர். நல்லாட்சியில் ஏற்பட்ட பலவீனம் பொருளாதாரத்திலும் பாதுகாப்பிலும் பெரும் வீழ்ச்சியை ஏற்படுத்தியது. இந்தப் பலவீனத்தையே பயங்கரவாதிகள் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டார்கள்.

இலங்கையில் பாதுகாப்பில் ஏற்பட்ட பலவீனமே பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்த காரணமாக அமைந்திருக்கிறதென சர்வதேச நாடுகள் கருத்துத் தெரிவித்திருந்தன.

ஆகவே, நல்லாட்சி அரசாங்கமும் அதன் 19ஆவது திருத்தமும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கான பொறுப்பை தார்மீகத்தோடு ஏற்றேயாகவேண்டும்.

ரணில் – மைத்திரி (நாடாளுமன்றம் – நிறைவேற்று அதிகாரம்) அதிகார மோதலுக்குள் சிக்கி நாடு பலவீனம் அடைந்ததன் விளைவுதான் உயிர்த்த ஞாயிறு தாக்குதல். இதனால் நிலைகுலைந்து போன மக்கள் நிம்மதி தேடி வழங்கிய தீர்ப்புத்தான் ஆட்சிமாற்றமும் பொதுஜன பெரமுன கட்சியின் அறுதிப்பெரும்பான்மை வெற்றியும்.

அச்சத்திலிருந்து மக்கள் தங்களுக்குப் பாதுகாப்பு வழங்கக்கோரியே புதிய அரசுக்கு 2/3 பெரும்பான்மையை வாரி வழங்கியிருக்கிறார்கள் என்பது தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

145 ஆசனங்களைப் பெற்று தனிப்பெரும் கட்சியாகத் திகழும் பொதுஜன பெரமுன தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்குத் தயாராகிவிட்டது. தேர்தல் பிரசாரங்களின்போது, 19ஐ நீக்குவோமென சூளுரைத்த பொதுஜன பெரமுன இன்று முழுமையான ஆட்சியதிகாரத்துடன் 19ஆவது திருத்தத்தை நீக்குவதற்கு எடுக்கும் முயற்சி அர்த்தபுஷ்டியானது. கடந்த 20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் கொள்கை விளக்க உரையாற்றிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, 19ஐ உடனடியாக நீக்கப்போவதாக அறிவித்திருப்பது மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது. அரசியலமைப்புக்கான 20ஆவது திருத்தத்தை முன்வைக்க புதிய அரசு தயாராகிறது, நாட்டை நல்வழிப்படுத்தும் திருத்தமாக அது அமைய வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

## ‘வெடி’மணியம் தொடர்ச்சி

’மைத்திரியை விசாரணைக்கு கூப்பிட்டவையாம்.

“நீங்கள் கூப்பிடுற இடத்துக்கெல்லாம் வரேலாது. ஏலுமெண்டால் என்ர வீட்ட வாங்கோ” எண்டு மைத்திரியர் சொல்லிப்போட்டார்.

கோத்தாவின் விசாரணைக்குழுவும் மைத்திரி வீட்ட போய் 9 மணிநேரம் விசாரிச்சவையாம்.

தனக்கு அமைச்சுப்பதவி கிடைக்கயில்லை எண்ட கடுப்பில இருக்கிற நேரம்;

மைத்திரியரை சும்மா நோண்டினால் அந்தாளுக்கு கோபம் வரும் தானே!

இப்பிடி 1008 பிரச்சினை கொழும்பில ஓடுது. இஞ்சால யாழ்ப்பாணத்தில இன்னொரு கதை இந்தக்கிழமை பெரிசா அடிபடுகுது.

“கைக்கட்சி” அங்கஜன் புதுசா ஒரு கட்சியை ஆரம்பிக்கப்போறாராம்.

“ஜனநாயக சுதந்திர மக்கள் முன்னணி” எண்டுகினம்.

அம்மாவாணை எனக்கொண்டும் தெரியாது. ஆக்கள் சொல்லுகினம்.

அங்கஜன் கொஞ்சம் “ஓவரா” துள்ளுறார் எண்டு டக்ளஸ் கொதிக்கிறார்.

அங்கஜன் இந்தக்கிழமை கடிதம் ஒண்டை மாவட்ட அரச அதிபருக்கு அனுப்பியிருக்கிறார்.

“என்னைக்கேக்காமல், எனக்குத்தெரியாமல், என்னைத்தாண்டி ஒரு திட்டமும் நடக்கக்கூடாது” எண்டு கடிதத்தில் எழுதியிருக்காம்.

வாசிச்ச அரச அதிபர் மகேசனுக்கு கோபம் வரயில்லை.காரணம் அவர் அங்கஜனோட “நல்ல” மாதிரி எண்டுகினம்.

னால் டக்ளசுக்கு கோபம் வந்திட்டுது. வரத்தானே வேணும்.

இவ்வளவு காலமும் “அபிவிருத்தி” எண்ட படத்தின் கதாநாயகன் டக்ளஸ். ஊட்டுக்குள்ளால அங்கஜன் திடீரெண்டு தன்ர படத்தை ஓட்டினால் பிரச்சினை வரும் தானே!

“முன்ன வந்த கொம்பை பின்னுக்கு வந்த செவி மறைக்கப்படாது!”

யாழ்ப்பாணத்தில ஒரு உறைக்குள்ள “ரண்டு கத்தி”!

ஏற்கனவே அங்கஜனுக்கு எதிரா தேர்தல் விதிகளை மீறினதா ஒரு குற்றச்சாட்டை ஈ.பி.டி.பி தேர்தல் ஆணையத்தில் முறையிட்டுள்ளதாக செய்தி வந்தது.

அங்கஜனின் அமைச்சுப்பதவியை புடுங்கினது டக்ளஸ் தான் எண்டு;

அங்கஜன் அழுதவரெண்டு கூட நிண்ட பொடியள் சொல்லுறாங்கள்.

காலகாலமாக புட்டும் தேங்காய்ப்பூவும் போல ஒட்டியிருக்கும் டக்ளசை மகிந்த விட்டுக்குடுக்கார்.அது வடிவாத்தெரியும்.

ஆனால் கெதியில அங்கஜனும் டக்ளசும் குத்துப்பட்டு ஒரு முடிவுக்கு வருவினம். மகிந்த உதுக்குள்ள பெரிசா தலைப்போடார்.அதுவரை நாங்கள் பேசாமல் “ புதினம்” பாப்பம்.

யாழ்ப்பாணத்தில பொலிசுக்காறர் “பேப்பர் றிப்போட்டர்” ஒருத்தரை கூப்பிட்டு செய்தி குடுத்திருக்கினம்.

அப்பிடி என்ன முக்கியமான செய்தி எண்டு நீங்கள் நினைப்பியள்!

“பொலிசாரை தாக்கிய இளைஞன்”

பொலிஸ் குடுத்த செய்தி எண்டு பத்திரிகையில் போட்டபிறகு;

தீர விசாரிச்சால் கதை பொய்யாம்!

பொலிஸ்தான் ஒரு ஆட்டோக்காரபொடியனை பிடிச்சு அடிச்சு துவைச்சுப்போட்டு;

கதையை மாத்தி பேப்பருக்கு செய்தி குடுத்திருக்கினம்.

இதையெல்லாம் ஆரும் கேப்பார் இல்லை!

நல்லூர் தேர்த்திருவிழாவில 7 சங்கிலியும் ஒரு தாலிக்கொடியையும் அறுத்துக்கொண்டு ஓடியிருக்கிறாங்கள்.

ஆரெண்டு சீ.சீ.ரிவி கமராவிலையும் பிடிக்கிறது கஸ்ரம். ஏனெண்டால் சனம் முழுக்க முகமூடிக்கொள்ளைக்காரர் போல “மாஸ்க்” போட்டுக்கொண்டு நிண்டதால கள்ளங்களுக்கு வாய்ச்சுப்போச்சு!

“உது பறுவாயில்லை முந்தி ஆறேழு தாலிக்கொடி அறுக்கிறவங்கள். இந்தமுறை ஒண்டுதான்” எண்டுறார் ஒரு பக்த அடியார்.

“சனத்துக்கும் புத்தியில்லை. என்ன கோதாரிக்கு உந்த சனக்கூட்டத்தில தாலிக்கொடியோட நெரிபடுகினம்?” எண்டு கச்சான் விக்கிற ஆச்சி ஏசுது.

ஆச்சி சொல்லுறதிலையும் ஒரு நியாயம் இருக்குத்தான்!

கிளிநொச்சியில் ஒரு “தேசிய விளையாட்டு மைதானம்” பெரும் எடுப்பில கட்டி கோலாகலமாக திறந்து வைச்சது கனபேருக்கு தெரிஞ்சிருக்கும்.

தெரியாத விசயம் அந்த தேசிய மைதானத்தில் ஆடும் மாடும் நாயும் தான் இப்ப விளையாடுதாம்.

கவனிப்பாரற்று சீரழிஞ்சு போய்க்கிடக்கெண்டு சொல்லுகினம்.

இந்த சீத்துவத்தில யாழ்ப்பாணத்தில் மண்டைதீவில ஒரு சர்வதேச கிறிக்கட் மைதானம் அமைக்க நடவடிக்கை எடுக்கினமாம்.

ஏற்கனவே அங்க சனத்தின்ர காணிகளை நேவிக்காறங்கள் பிடிச்சு வைச்சிருக்கிறாங்கள்.

அந்தப்பிரச்சினை முடிக்காமல் மேலும் காணிகளை சுவீகரித்து விளையாட்டு மைதானம் கட்டுறது சரியில்லாத வேலை!

ஆர் கேப்பினம்? இல்லை உண்ணாண தெரியாமல்த்தான் கேக்குறன். அரசாங்கத்துக்கு முட்டு கொடுக்குற எவனுக்கு முதுகெலும்பு இருக்கு!

35 ராஜாங்க அமைச்சுக்கான செயலாளர்கள் அறிவிச்சிருக்கினம்.

ஒரே ஒருத்தர்தான் தமிழர்.

இதுக்கு நான் என்னத்தை சொல்ல?

“அபே சிறிலங்கா” எண்டு நரம்புபுடைக்க நாட்டுப்பற்றோடை கத்தி செத்துப்போகவேண்டியதுதான்.

விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்தவர்கள் காணாமல் போயிருந்தால்;

அவர்கள் வெளிநாட்டுக்கு சென்றிருப்பார்கள்.சம்பந்தப்பட்ட குடும்பங்களுக்கு நட்ட ஈடு அல்லது நிவாரணம் வழங்கினால் பயங்கரவாதத்தை ஊக்குவிப்பது போலாகும் எண்டு அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல சொன்னவராம்!

1000 நாளையும் தாண்டி வீதியில் நிண்டு போராடும் பெத்தவயிறு எரிஞ்சு வாற கண்ணீர் சும்மா லேசுப்பட்டதில்லை ரம்புக்கல!

கவனமா இருங்கோ.

இந்தமாதக்கடைசியில மிகப்பெரிய ஒரு ஆர்ப்பாட்ட பேரணியை ஒழுங்கு செய்திருக்கினம் “வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம்”!

அது பெரியளவில இங்க உள்ள வெளிநாட்டு தூதரகங்களால கவனிக்கப்படும் எண்ட கடுப்பிலதான் ரம்புக்கலவுக்கு மூலக்கொதி வந்திருக்கலாம் எண்டு பொன்னம்பலம் பரியாரியார் சொல்லுறார்.

ரில முந்தி பள்ளிக்கூடம் போறம் எண்டுபோட்டு களவா எங்கயாவது போய் விளையாடிப்போட்டு;

பள்ளிக்கூடம் முடிய பொடியளோடு பொடியளா வீட்ட போறனாங்கள்.

உந்த பழக்கம் எங்கட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கண்டு மகிந்த நக்கலடிக்கிறார்.

வீட்டில இருந்து வெளிக்கிடும் போது “நாடாளுமன்றம் போட்டு வாறம்” எண்டு சொல்லிப்போட்டு;

நாடாளுமன்றம் வராமல் கூத்தடிக்கினமாம்.

நாடாளுமன்ற அமர்வுகளை நேரடி ஒளிபரப்பு செய்தால் கனபேற்ற கள்ளம் பிடிபடும்.

நாடாளுமன்ற கன்ரீனில் 3000 ரூபா பெறுமதியான சாப்பாடு 200 ரூபாக்குத்தானாம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு குடுக்கினமாம்.

ஒரு சிலர் சாப்பிட்டு போட்டு வீட்டுக்கும் கட்டிக்கொண்டு போகினம் எண்டு நக்கல் அடிக்கிறாங்கள்.

யாழ்ப்பாணத்தில 435 கிராமங்களில் கிராமசேவையாளர்கள் ஊடாக 20 லச்சம் பெறுமதியான திட்டங்கள் செய்யப்போறம் எண்டு அரச அதிபர் மகேசன் சொல்லியிருக்கிறார். நல்லவிசயம் தான்!

ஆனால் ஊரில உள்ள ஒரு சில விதானைமாரின் “பொக்கற்றுகள்” நிரம்பாமல் பாத்துக்கொள்ளவேண்டியது முக்கியம் பாருங்கோ!

தமிழ்மொழி மூத்தமொழி எண்டும் தமிழர்கள்தான் மூத்தகுடிகள் என்றும் விக்கினேஸ்வரன் நாடாளுமன்றத்தில் உரையாற்றினார். அதைக்கேட்டு சிங்கள இனவாத நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஊழையிட்டார்கள். குலைத்தார்கள்!

விக்கினேஸ்வரனின் பேச்சை நாடாளுமன்ற பதிவேட்டில் இருந்து நீக்கச்சொல்லி இண்டைவரைக்கும் கனபேர் குலைச்சுக்கொண்டு திரியினம்.

ஆனால் விக்கினேஸ்வரனின் பேச்சு நாடாளுமன்ற பதிவேட்டில் வந்திட்டுது. இனி அழிச்சால் என்ன ? விட்டால் என்ன?

ஆனா ஒண்டு... சிங்களப்பேரினவாத சிங்கங்கள் சிரிப்பது போல நடிச்சாலும்;

அவற்றின் “கோரப்பற்கள்” அப்பப்ப வெளிய தெரிகிறது.

கோத்தாவின் ஆட்டம் இன்னும் ஆரம்பமாகவில்லை. இனி வரும் காலங்களில் இலங்கையில் பல மாற்றங்கள், அதிரடிகள், கைதுகள் நடக்கலாம் எண்டு சிவசம்பு சாத்திரியார் சொல்லுறார்.

சாத்திரியார் சொன்னால் அப்பிடியே அச்சொட்டாய் நடக்கும் எண்டு ஊரில கதைக்கினம்.

தமிழர் தரப்பு “சில்லம்பல்லமாய்” உடைஞ்சு சிதறிக்கிடக்கும் இந்த நேரத்தில்;

சிங்களப்பேரினவாத சக்திகள் தங்கட “அலுவலுகளை” அமசடக்கா செய்து முடிக்கப்போகிறது.

குறுக்காலபோன “எங்கடையள்” பதவிக்காக தங்களுக்குள் கடிபட்டு சாகினம்!

கோதாரிவிழுவாரே!

நம்பி வாக்களிச்ச சனத்தை ஒரு நிமிசம் எண்டாலும் யோசியுங்கோ.

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.



# பொக்கெட் பேனா



## சைக்கிள் பயணங்கள்

ஏ.ஜே.ராஜ்

புலமைப்பரிசில் பரீட்சை நிறைவடைந்த காலம் அது. என்ன நான் ஆரம்பித்ததுமே என் வயது, அனுபவமுடைய எல்லோரும் தம் வாழ்க்கையின் ஞாபகங்களை மனதோடு மீள புரட்டிப் போட ஆரம்பித்திருப்பீர்கள். அன்று நம்மில் பலருக்கும் பல கனவுகள் இருந்தன. அக் கனவுகளின் விம்பமொன்றை உங்கள் சார்பில் முன்வைக்கின்றேன். என்றும்

போல் அன்றும் உண்டியலில் சில்லறைகளையிடும் போது அந்த சில்லறைகள் உண்டியலினுள் இருக்கும் சில்லறைகள் மீது விழும் போது ஏற்படும் சத்தம் அளவில்லா மகிழ்ச்சியூட்டிய அனுபவம் என்னைப் போல உங்களுக்கும் இருந்திருக்கும். அந்த ஒவ்வொரு சத்தங்களிலும் என் கனவை அடைய காலம் நெருங்கிவிட்டது என்பது போல் இருக்கும். அந்தகனவை நிஜமாக்கும் காலத்தை சிறுகச் செய்ய நம் பெற்றோர்களே மிக முக்கிய பங்குதாரர்கள் எனலாம். சில நேரங்களில் உரிமையோடும் இன்னும் சில நேரங்களில் பலவந்தமாகவும் சில்லறைகளை கேட்டு வாங்கி நம் கனவின் காலத்தை குறைத்ததுண்டு. எப்படியோ வருட இறுதிக்குள் உண்டியலும் நிறைந்துவிடும். அன்று ஏதோ பெரிய ஆனந்தம் அதை சொல்ல எனக்கு வரிகள் எட்டவில்லை. கோடி ரூபா கிடைத்ததுபோல என்னால் எதையும் வாங்க முடியும். இது என்னுடைய பணம் என்ற ஒரு மமதையும் அதனுள் இருந்தது.

இறுதியில் சில்லறைகளை எண்ணிப் பார்க்கும்போது தொகை 706 ரூபாவை தாண்டவில்லை. ஆனாலும் அதை பெரிதாகக்கூறி எனக்கு தைரியம் தந்தவர் அப்பா. “அப்பா இதை கொடுத்து என் கனவை நிறைவேற்ற முடியுமா? அதை வாங்கித் தருவீர்களா?” என்று கேட்ட கேள்வி இன்றும் நினைவில் உள்ளது. சிறிதாய் ஒரு பதில் ‘வாங்கிடலாம்’. உண்டியல் பணத்தை ‘சிசு உதான’ வங்கிப்புத்தகத்தில் வைப்புச் செய்துவிட்டு, தனது வருமானத்திற்கு அப்பாற் சென்று என் கனவை நிறைவேற்றியவரே அப்பா. என் வைப்பில் வைத்த கதையை நான் பெரியவன் ஆனதுமே அறிய கிடைத்தது. அன்று என் கண்ணீரும் என் வங்கிப் புத்தகத்தை எட்டிப் பார்த்த தருணம் அது. உங்கள் பெற்றோரும் இதைப் போன்ற பல வாழ்க்கை அனுபவங்களையும், நெறிகளையும் கற்பித்து உங்களுக்காக பல தியாகங்களையும் செய்திருப்பர். சில நேரங்களில் நம் பெற்றோர்கள் செய்யும் தியாகங்கள் கண்ணில்படுவதில்லை.

நீங்கள் நினைக்கலாம் என்ன அப்படி பெரிய கனவென்று? அது என் சைக்கிள். [துவிச்சக்கர வண்டி] அது வரை மூன்று சில்லு வண்டியில் மட்டும் சென்ற அனுபவமுடைய எனக்கு, சைக்கிள் மிகப் பெரிய ஆடம்பரப் பொருளாகவே இருந்தது. அன்று அதுவே மிகப் பெரிய செல்வம், உலகமென எண்ணி தொடர்ந்து பல வருடங்கள் வாழ்ந்த அனுபவம் நினைவிற்கு வருகின்றது. ஆசைக்கு வண்டி வாங்கினால் மட்டும் போதாது அந்த சைக்கிளை சமநிலைப்படுத்திக் கொள்ள பல பூச்சாடிகளை பிரட்டியதும், கால் கைகளில் ஏற்பட்ட தழும்புகளும் இன்றும் மாறவில்லை. அது எப்படியோ இலக்கை அடைய முதலாவது சைக்கிளை தள்ளி [உருட்டி] பார்த்தேன். சிலர் சிரித்தனர். தொடர்ந்து ஒரு பக்கமாக சமப்படுத்தி ஒரு கால் பூமியிலும் மறுகால் சைக்கிளிலும் என்று ஓட்டி பார்த்தேன். [பெடல் அடித்து]. எல்லா முயற்சிகளையும் பார்த்த அப்பா என்னை வண்டியில் ஏறச் செய்து சைக்கிளை சமநிலை செய்ய கற்றுத் தந்த பாடங்கள் இன்றுபோல் நினைவில் உள்ளது.

அது வாழ்க்கையை சமநிலையாகக் கொண்டுசெல்லும் சிறப்பு பாடங்களாக பிற்காலத்தில் உதவும் என்பதை உணர்ந்து அப்படி சொல்லித் தந்தார் என்பதை இன்று உணர்கின்றேன். எப்படியோ ஓரிரு வாரங்களுள் எவரதும் துணையின்றி சைக்கிளை தனியாக ஓட்டிய நாள் அப்பாடா! என்ன ஒரு இன்பம். வானத்தில் பறந்த அனுபவத்தை பூமியில் உணர்ந்த தருணம் ஆயிற்று. அன்று தொடக்கம் சைக்கிளில் செல்ல வேண்டிய பிரயாணங்கள் ஏராளமாயிற்று.

அது மட்டுமல்ல, சைக்கிளுக்கு பல விதமான அலங்கார வேலைகளையும் சில்லறை தொழில்நுட்ப முறைகளையும் கையாண்ட ஞாபகமும் உண்டு. எங்காவது கழட்டி எறியப்பட்ட டைனமோ ஒன்றை பொருத்தல். கடைகளில் வீசி எறியப்பட்ட ஸ்ரோ பட்டைகளை சேகரித்து சில்லுகளின் கம்பிகளுக்கு போட்டமை, சில ஸ்டிக்கர்களை ஒட்டுதல், நாளுக்கு ஒரு முறை வண்டியை துடைத்தல், அதையெல்லாம் செய்து புறப்பட்டபோது ஏதோ BMW வில் செல்வது போலிருக்கும். சில நேரங்களில் என்னை யாரும் அவதானித்ததும் சைக்கிளில் வேகமா சென்றமை, சில சைக்கிள்களை முன்கடந்து செல்ல முயன்றமை, சைக்கிளின் பிடியை விட்டு பயணித்தமை, சில சமயங்களில் வயதில் சிறிய பெரியவர்களை சைக்கிளில் ஏற்றிச் செல்ல முயன்றமையும், குப்புற விழுந்த நினைவுகள் என்னை போல உங்கள் வாழ்விலும் மறக்க முடியாத கொடைகள் என்றே கூறுவேன்.

என் சைக்கிள் மழையிலும் வெயிலிலும், பாடசாலை வாழ்கை நிறைவுபெறும் வரையிலும் என் வாழ்க்கையோடு பயணிக்கும் என்பதை ஆரம்பத்தில் அறியவில்லை. எந்த வகையிலும் சைக்கிளை நம் வாழ்க்கையில் இருந்து வேறுபடுத்தி பார்க்கவோ, மறக்கவோ முடியாது. அப்படி மறந்தால் நானும் நீங்களும் நன்றிகொட்டவர்கள் என்ற பொல்லாப்பிற்கு ஆளாகிவிடக்கூடும்.

சமூக ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுத்தப்பட்டு சைக்கிள் கூட வாங்கி தர வசதியில்லா எங்களுக்கு இந்த அரசும், சமூகமும் தந்த பட்டம் ஏழ்மை. தம் கனவுகளை மனதோடு சமாதியாக்கிக் கொண்ட நண்பர்களுடன் பயணித்த காலம் அது. ஆரம்பத்தில் சைக்கிளை பகிர்ந்து கொள்ள மறுத்தாலும் அப்பா சொல்லிதந்த பாடத்தால் சைக்கிளுக்கு இரண்டு சில்லு என்பது போல நானும் நண்பர்களுடன் இணைந்தே பயணித்தேன்.

ஆரம்பத்தில் சைக்கிள் பயணத்திற்காக வீட்டின் சில்லறை வேலைகளை சுயமாக முன் வந்து செய்தாலும் பிற்காலத்தில் வீட்டுக்கு தேவையான மளிகைப் பொருட்களை வாங்கி வருவது என் கடமையாறிற்று. அந்த வேலை எனக்கு பிடித்திருந்தது. காரணம், சைக்கிள் பயணம். என்னையும் என் சைக்கிளினதும் சேவையை ஒருவர் நாடும்போது மேலும் ஒருபடி மனதோடு பெருமிதம் அடைந்த நாட்களும் உண்டு.


இன்று என்னுடைய வாழ்க்கை சுயமையை முகாமை செய்ய சைக்கிள் பயம் பின்வருமாறு உதவியது. பாதையை நடத்தவும் அதன் ஏற்;ற இறக்கங்களில் வேகத்தைக் குறைக்கவும் அதிகரிக்கவும் அமைதியாக பயணிக்கவும் கற்றுத்தந்தது. மேடு பள்ளங்களில் ஏறி இறங்கவும், சமவெளிகளில் நிதானமாக செல்லவும் கற்றுத் தந்தன.

அது மட்டுமா? வண்டி மக்கர் பண்ணும் சில நேரங்களில் பொறுமையோடு திருத்தி அமைத்துக் கொள்ளலும் மாற்று வழிகளை தேடி அறியவும் கற்று தந்தமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு என்னை சாரதியாக்க பிள்ளையார் சுழியிட்ட சைக்கிளுக்கு கடமைப்பட்டவன் நான். இந்த அனுபவம் இன்றைய சிறார்களுக்கு மிக அரிதாகவே கிடைக்கிறது. சில பிள்ளைகளின் வாழ்க்கையில் முச்சக்கர வண்டியை பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிள்களே வழக்கமாக்கப்பட்டுள்ளன.

இங்கு சைக்கிள் என்ற பேச்சிக்கு இடமில்லை. சில பெற்றோர்கள் ஆடம்பரத்திற்காகவும் பிள்ளைக்கு சிரமம் ஏற்படக்கூடாது என்று இவ்வாறான வசதிகளை செய்து கொடுக்கின்றனர். இன்றைய பெற்றோர்கள் தமது பிள்ளைகள் சுயமாக சைக்கிளில் ஊடாக கற்க வேண்டிய வாழ்க்கை பாடங்களை கற்பதற்கான வாய்ப்பை தவறச் செய்கின்றனர்.

அது இன்றைய பல பெற்றோர் செய்யும் தவறு என்றுதான் சொல்வேன். சைக்கிளோடு தொடர்ந்த பயணங்கள் இன்றும் சில்லுகளாக உருண்டோடுகின்றன.



அச்சிடல் ... ற்றும் விநியோக ... மற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.




# டென்னிஸ் அரங்கிற்கு விடைகொடுத்த இரட்டையர்கள்

அமெரிக்காவைச் சேர்ந்த டென்னிஸ் வீரர்களான பெப் பிரயன் - மைக் பிரயன் ஆகிய இரட்டைச் சகோதரர்கள் டென்னிஸ் அரங்கிலிருந்து உடன் அமுலுக்குவரும் வகையில் ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளனர்.

சர்வதேச டென்னிஸ் அரங்கில் இரட்டையர் பிரிவில் வெற்றிகரமான ஜோடியாக உருவெடுத்து எண்ணற்ற சாதனைகளை படைத்துள்ள அமெரிக்காவின் பெப் பிரயன் - மைக் பிரையன் ஆகிய இரட்டைச் சகோதரர்கள் டென்னிஸ் போட்டிகளிலிருந்து உடனடியாக ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளனர்.

ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கமும் வென்றுள்ள 42 வயதான இரு சகோதரர்களும், கூட்டாக 16 கிராண்ட்ஸ்லாம், 4 ஆண்கள் சம்பியன்ஷிப் உட்பட 119 பட்டங்களை வென்றுள்ளார்கள். 438 வாரங்கள் இரட்டையர் தரவரிசையில் முதலிடத்தை அலங்கரித்த சாதனையையும் பெப் பிரயன் - மைக் பிரயன் ஆகிய இரட்டைச் சகோதரர்கள் படைத்துள்ளார்கள்.

டென்னிஸ் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவது குறித்து அவர்கள் தெரிவிக்கையில், "இன்னும் டென்னிஸ் போட்டிகளில் விளையாட ஆசைதான். ஆனால், உடலை கஷ்டப்படுத்த விரும்பவில்லை. விலகுவதற்கு இதுவே சரியான தருணம்" என தெரிவித்து விடைகொடுத்தனர்.




# FFSL இறுதிப்போட்டிக்குள் கொழும்பு – ப்ளூ ஈகில்ஸ்

இலங்கை காற்பந்து சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் எவ்.எவ்.எஸ்.எல். தலைவர் கிண்ண காற்பந்து தொடரின் இறுதிப்போட்டிக்கு கொழும்பு காற்பந்து கழகம் மற்றும் ப்ளூ ஈகில்ஸ் விளையாட்டுக் கழகம் என்பன தகுதிபெற்றுள்ளன. வியாழக்கிழமை மாலை நடைபெற்ற தொடரின் முதலாவது அரையிறுதிப் போட்டியில் ஜாவா லேன் விளையாட்டுக் கழகம் - ப்ளூ ஈகில்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்கொண்டது.

போட்டியின் 9ஆவது நிமிடத்திலேயே ப்ளூ ஈகில்ஸ் கழகம் சார்பாக நெத்ம மல்ஷான் கோல் அடித்தார். தொடர்ந்து அடுத்த மூன்று நிமிடங்களில் ப்ளூ ஈகில்ஸ் கழகத்துக்காக கவிந்து இஷான் கோலடிக்க அணியின் கோல் எண்ணிக்கை இரண்டாக உயர்வடைந்தது. ஜாவா லேன் கழகம் கோலடிக்க முயற்சிகளை மேற்கொண்டாலும் அது பயனளிக்கவில்லை. இதனுடன் முதல் பாதி முடிவில் ப்ளூ ஈகில்ஸ் 2-0 என்ற அடிப்படையில் முன்னிலை பெற்றது.

தொடர்ந்து ஆரம்பமான இரண்டாவது பாதி ஆட்டத்தின் மூன்றாவது நிமிடத்தில் ஜாவா லேன் கழகம் முதல் கோலை பெற்றது. மாலக பெரேரா முதல் கோலை பெற்றுக்கொடுத்தார். தொடர்ந்து போட்டி விறுவிறுப்பாக சென்றுகொண்டிருந்த வேளையில் போட்டியின் இறுதியில் 87ஆவது நிமிடத்தில் ஜாவா லேன் சார்பாக நவீன் ஜூட் கோலடிக்க போட்டி சமநிலையானது. போட்டியின் இறுதி விசில் அடிக்கப்பட்ட நிலையில், கோல்கள் சமநிலை பெற்றதன் அடிப்படையில் வெற்றியாளரை தீர்மானிக்க பெனால்டி வாய்ப்பு வழங்கப்பட்டது.


ப்ளூ ஈகில்ஸ் விளையாட்டுக் கழகம்

குறித்த பெனால்டி வாய்ப்பை சரியாக பயன்படுத்திய ப்ளூ ஈகில்ஸ் கழகம் 4-3 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்கு முதல் அணியாக தெரிவாகியது. தொடர்ந்து இரவு நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் கொழும்பு காற்பந்து கழகம் - ரெட் ஸ்டார்ஸ் காற்பந்து கழகத்தை எதிர்கொண்டது.


கொழும்பு காற்பந்து கழகம்

குறித்த போட்டியும் முதல் போட்டியை போன்று பெனால்டியிலேயே முடிவுற்றது. போட்டியின் ஆரம்பத்தில் 13ஆவது நிமிடத்தில் கொழும்பு கழகம் சார்பாக சபீர் ரசுனியா கோலடிக்க, தொடர்ந்து 22ஆவது நிமிடத்தில் மொஹமட் ஆகிப் கோலடித்தார். இந்த இரு கோல்களுடன் முதல் பாதி முடிவுக்குவர கொழும்பு கழகம் 2-0 என்ற ரீதியில் முன்னிலை பெற்றது.

தொடர்ந்து ஆரம்பமாகிய இரண்டாவது பாதி ஆட்டத்தில் ரெட் ஸ்டார்ஸ் கழகம் இரண்டு கோல்களை அடிக்க போட்டி 2-2 என்ற கோல்கள் கணக்கில் சமநிலை பெற்றது. 55ஆவது நிமிடத்தில் மொஹமட் ரஹ்மான் மற்றும் 73ஆவது நிமிடத்தில் சுபுன் தனஞ்ஜய ஆகியோர் கோலடித்தனர். போட்டியின் வெற்றியாளரை தீர்மானிப்பதற்காக பெனால்டி வாய்ப்பு வழங்கப்பட்டது.

குறித்த பெனால்டி வாய்ப்பை சரியாக பயன்படுத்திய கொழும்பு காற்பந்து கழகம் 3-2 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்கு அடுத்த அணியாக தெரிவாகியது. சம்பியனை தீர்மானிப்பதற்கான இறுதிப்போட்டி செப்டெம்பர் 2ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# சர்வதேச கிரிக்கெட் அரங்குக்கு விடைகொடுத்த தரங்க பரணவிதான



இலங்கை கிரிக்கெட் அணி வீரரான 38 வயதுடைய இடதுகை ஆரம்ப துடுப்பாட்ட வீரரான தரங்க பரணவிதான சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார்.

கடந்த 2009ஆம் ஆண்டு கராச்சியில் வைத்து பாகிஸ்தான் அணியுடன் நடைபெற்ற போட்டியில் டெஸ்ட் அறிமுகம்பெற்ற ஆரம்ப துடுப்பாட்ட வீரர் தரங்க பரணவிதான, இலங்கை அணிக்காக 32 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 2 சதங்கள், 11 அரைச்சதங்களுடன் மொத்தமாக 1,792 ஓட்டங்களை குவித்துள்ளார்.

கடந்த 2012ஆம் ஆண்டு கொழும்பு பி.சரவணமுத்து ஓவல் மைதானத்தில் வைத்து நியூஸிலாந்து அணியுடன் இறுதியாக டெஸ்ட் போட்டியில் விளையாடியதன் பின்னர் இளம் வீரர்களின் வருகையால் தொடர்ந்து டெஸ்ட் போட்டிகளில் விளையாடும் வாய்ப்பு கிடைக்கவில்லை. இந்நிலையில், தற்போது சர்வதேச கிரிக்கெட் அரங்கிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய தரங்க பரணவிதான ஒருநாள் மற்றும் இருபதுக்கு இருபது சர்வதேச போட்டிகளில் அறிமுகம் பெறாமலேயே சர்வதேச அரங்குக்கு விடைகொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நவம்பர் 14 முதல் லங்கன் பிரிமியர் லீக்



இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள லீக் தொடரான 'லங்கன் பிரிமியர் லீக்' இருபதுக்கு இருபது தொடர் நவம்பர் 14ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 8ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஓகஸ்ட் மாதத்தில் ஆரம்பமாகவிருந்த லங்கன் பிரிமியர் லீக் தொடரானது, கொரோனா வைரஸின் தனிமைப்படுத்தலில் உள்ள கால சிக்கல் நிலை காரணமாக நவம்பர் மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது. ஆனால், தொடருக்கான திகதி அறிவிப்பு வெளியாகவில்லை.

இந்நிலையில், இப்போட்டிகள் நவம்பர் 14ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 8ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஆனால், குறித்த திகதி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐ.பி.எல். தொடரிலிருந்து விலகிய ஹரி கேர்னி



2020ஆம் ஆண்டுக்கான இந்தியன் பிரிமியர் லீக் தொடரில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் இடம்பெற்றிருந்த 33 வயதுடைய இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஹரி கேர்னி அறுவைசிகிச்சை மேற்கொள்ளவுள்ளதன் காரணமாக இந்தியன் பிரிமியர் லீக் தொடரிலிருந்து விலகியுள்ளார்.

இந்தியன் பிரிமியர் லீக் தொடர் எதிர்வரும் செப்டெம்பர் 19ஆம் திகதி ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஆரம்பமாகவுள்ள நிலையில், தொடரில் விளையாடவுள்ள அனைத்து அணி வீரர்களும் ஐக்கிய அரபு இராச்சியம் சென்றுள்ள நிலையில் அனைத்து வீரர்களும் ஏழு நாட்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

இந்நிலையில், இந்த வருட ஐ.பி.எல். தொடரிலிருந்து கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி வீரர் ஹரி கேர்னி விலகியுள்ளதாக அறிவித்துள்ளார்.

தோள்பட்டையில் காயம் ஏற்பட்டுள்ளதால் அறுவைசிகிச்சை மேற்கொள்ளவுள்ள அடிப்படையில் தொடரிலிருந்து விலகியுள்ளார்.

கடந்த வருட இந்தியன் பிரிமியர் லீக் தொடரில் விளையாடிய ஹரி கேர்னி, 8 போட்டிகளில் விளையாடி 7 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார்.

இதேவேளை, "T-20 பிளாஸ்ட்' லீக் தொடரிலும் இடம்பெற்றிருந்த ஹரி கேர்னி அதிலிருந்தும் விலகியுள்ளதாக அறிவித்துள்ளார்.

# சம்பியனானது கொழும்பு கிரிக்கெட் கழகம்

இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற உள்ளூர் கிரிக்கெட் தொடரான 'மேஜர் லீக் டியர் ஏ' தொடரில் 'சுப்பர் 8' சுற்று நிறைவில் புள்ளிப்பட்டியலில் முதலிடம் பிடித்த குசல் மெண்டிஸ் தலைமையிலான கொழும்பு கிரிக்கெட் கழகம் சம்பியனாக தெரிவானது.

புள்ளிப்பட்டியலில் முதலிடத்தில் காணப்பட்ட கொழும்பு கிரிக்கெட் கழகம் மற்றும் புள்ளிப்பட்டியலில் மூன்றாமிடத்தில் இருந்த சிலாபம் மேரியன்ஸ் கிரிக்கெட் கழகங்களுக்கிடையில் கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை நிறைவுக்குவந்த போட்டியானது சமநிலையில் முடிவடைந்தது.




நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு கிரிக்கெட் கழகம் முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்களையும் இழந்து 287 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

பதிலுக்கு முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய சிலாபம் மேரியன்ஸ் கிரிக்கெட் கழகம் 9 விக்கெட் இழப்புக்கு 458 ஓட்டங்களை குவித்த வேளையில் ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது.

171 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த கொழும்பு கிரிக்கெட் கழகம் 8 விக்கெட் இழப்புக்கு 494 ஓட்டங்களை குவித்த நிலையில், ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது.

324 ஓட்டங்களை வெற்றி யிலக்காகக்கொண்டு துடுப் பெடுத்தாடிய சிலாபம் மேரியன்ஸ் கிரிக்கெட் கழகம் இறுதிநாள் ஆட்டம் இடைநிறுத்தப்பட்ட வேளையில் 2 விக்கெட்டு களை இழந்து 52 ஓட்டங்களை பெற்றது.

இதன்மூலம் போட்டி வெற்றி தோல்வியின்றி சமநிலையில் நிறைவுக்குவந்தது. இதனடிப்படையில் புள்ளிப்பட்டியலில் தோல்விகள் எதுவுமின்றி 4 வெற்றிகள், 3 சமநிலை முடிவுகளுடன் 95.19 புள்ளிகளை பெற்ற குசல் மெண்டிஸ் தலைமையிலான கொழும்பு கிரிக்கெட் கழகம் சம்பியனாக தெரிவாகியது.



அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.

# தேயிலைச் சாபம்

அட்டைப் பூச்சியின்
அன்றாட உணவாய்
அவதாரம் எடுத்த
அப்பாவி நானோ...?

நெட்டைப் பகுதியில்
நெளிந்த முதுகும்...
நெம்ப மறுக்குது
நெடுநாள் ஏனோ...!

உயர்ந்த இடத்தில்
உழைப்பதால் தானோ...!
எட்டிவிட முடியாமல்
ஏங்குது மகிழ்ச்சி...!

நிறைந்த குளிரில்
நித்தமும் நடந்தும்
உறைய மறுக்குதே
கண்ணீர் வீழ்ச்சி...!

பச்சையோடு நாளும்
பணிபுரியும் எனக்கு...
பசுமையே இல்லாத
பட்டுப்போன வீடு...!

கத்தரித்தச் செடியின்
கர்மாதான் இதுவோ...
வரைவுக்கு உட்பட்ட
வளராத கூலி...!

அதிகாலை எழுந்து
அயராது உழைத்தும்
உதயத்தை வாழ்வில்
உணரவே முடியல...

அதிகார வர்க்கத்தின்
அகம்பாவ கால்களில்...
மிதிபட்டு வாழ்ந்து
மிஞ்சவும் தெரியல...

அரசியல் உதவுமென
அக்கறையை எதிர்பார்க்க...
அடிகள் ஒவ்வொன்றும்
அங்கிருந்தே வருகிறது...!

உரசினால் எரிகின்ற
உணர்வுள்ள எம்மை...
ஊதிச் சாம்பலாக்க
ஊகம்தான் செய்கிறது...!

உழுத மாட்டுக்கு
உள்ளங்கை அளவில்...
உணவு தந்தால்
உழைக்குமா மறுநாளில்...!

அழுது புலம்புகிறோம்
அந்த சோகம் போல...
உழைச்ச கூலிய
உயர்த்துங்க சாமிகளா...!

ந.ராஜ்குமார்
தமிழ்நாடு

# பொறுமை கடந்துவிட்டால்...

பொறுத்து போகிறார்கள்
சகித்துக்கொள்கிறார்கள் என்பதற்காக
திரும்பத் திரும்ப நோகடிக்காதீர்கள்
உறவில் பிரிவு வந்துவிடக்கூடாது
நேசத்தில் விரிசல் வந்துவிடக்கூடாது
என்ற காரணங்களுக்காகத்தான்
அவர்கள் எல்லாவற்றையும்
தாங்கிக்கொள்கிறார்கள்
இதயம் மரத்துப் போனதால் அவர்கள்
வலியை வெளியே காட்டிக்கொள்வதில்லை
அவர்கள் கண்ணீர்த்துளிகளை
அனுதாபத்திற்காக சிந்துவதும் இல்லை
காயங்களை தாங்க பழகியவர்களுக்கு
கோபத்தை அடக்கவும் தெரியும்
துயரங்களை அனுபவித்தவர்களுக்கு
எல்லாவற்றையும் மறந்து சிரிக்கவும் தெரியும்
அன்புக்கு அடிமையாகிவிட்டார்கள்
என்பதால் அவர்களை உங்களுக்கு
அடிமையாக பயன்படுத்தாதீர்கள்
பொறுமையின் எல்லையை அவர்கள்
தாண்ட துணிந்துவிட்டால்
முடிவெடுக்க தொடங்கிடுவார்கள்
உங்களால் அதை தடுக்கவே முடியாது.

நெடுந்தீவு முகிலன்



ஆளில்லா வீதியில்
இளைப்பாறி நடக்கையில்
அநாயசமாக உரசும் என் விரல்கள்,
இடக்கையின் இடுக்கில் உன் விரல்கள்!
உள்ளங்கை உஷ்ணத்தில்
உள்ளப் பரிமாற்றம் செய்தோம்.
திளைக்கும் காதலுக்கு
திரையிட தெரியவில்லை.
உயிரழுந்தும் ஸ்பரிசத்தை
உச்சம் என்ன சொல்ல?
நிலைக்கும் அன்பிற்கு
பெயர் வைக்க முடிந்தால்
"நா(ம்)"மென்க!

- அக்ஷயா

# வெயில்

வெளுத்து வாங்கும் வெயிலில்
வெளிரிப் போகும் வேளாண்மை!

அள்ளி எரியும் நெருப்பில்
சுள்ளி எகிறுது வியர்வை !

கோடை என்ற பெயரில்
கொளுத்தித் தள்ளுகிறது சூரியன் !
சுட்டுத் தெறிக்கும் வெயிலில்
உயிர் சுரப்பி உயிர் பிச்சை கேட்கிறது தண்ணீரிடம்!

ஆதவன் காதலி சூரிய காந்தி
ஆழ்ந்த அனுதாபத்துடன்
மனுக் கொடுத்தது மழைக்கு !

வானவில்லிடம்
வர்ணங்கள் கடன் கேட்டது
வண்ணத்துப் பூச்சி!

ஓடியாடி ஓயாதுழைக்கும்
சூரியத் தாம்பாளமே
உனக்கெப்போது ஓய்வு என
ரகசியம் கதைக்கும்
மேகத்தின் மோணத்தை
புரிவதெப்போது ?..
ஆனாலும்
உச்சி வெயில்
ஊசியாய் இருக்கையில்
என்னவன் ஞாபகம் மட்டும்
குளிர்ச்சியாய் என்னுள் !!!!

-ஹுமைதா ஏ கப்பார்-
உயன்வத்த

# தலைப்பு இல்லா கவிதை

எனது பாதம் உங்களிடம்.
எனது பாதை கூட உங்களிடமே
ஓடு ஓடு என்பவர்களே...!
நான் யாருக்காக
ஓட வேண்டும் என்கின்றீர்கள்...!
பார்வையை
சொற்களை
கனாக்களை...
என்னையே பிடுங்கி
எடுத்துக் கொண்டவர்களே...!
நான் அடிமைகளின் அடிமையென்றா
நினைத்தீர்கள்...!
நாளைய உலகம்
உன் கையில்
என்பவர்களே
இன்று கூட எனக்கானதில்லை
என்பதை அறிவீர்களா?
நீங்கள் எழுதித் தருவதை
உங்கள் தொனியில்
உங்களது உடல் மொழியில்
ஒப்புவிக்க ..
நான் நடிகையல்ல
எனது பெயரில்
எனது வயதில்
என்னுடைய வானில்
சிறகு விரிக்கின்றேன்
நீங்கள் நீங்களாகவே
இருந்து விடுங்கள்
நான் நானாக வாழப் பிறந்தவள்...!

எம்.எச்.எம். ஜவ்பர்

# தூறல்கள்...

## நிலவிடம் புலம்பும் பதுமை

சொல்லித்தாடி
என் செல்லத்தோழி
தேய்ந்தாலும் மீண்டும் வளர...!

அல்லிப் பூவின்
ஆசைக் காதல்
மாய்ந்தாலும் மீண்டும் மலர...!

சூரியன் ஒளி தந்தாலும்
நீ சுற்றி வருவதோ
பூமியை மட்டும்தான்...!

ஆயிரம் பேர்
அன்பைத் தந்தாலும்
என் அகத்தில் – அந்த
அரக்கன் மட்டும்தான்...!

எத்தனை முறையோ
எண்ணத்தை சொன்னாலும்...
எதிர்க்கும் நிலையிலே
அவன் புத்தன் மனது...!

நித்தம் நித்தம்
காதல் சொல்லி...
நீர்த்துப் போனதோ
நீசக் கனவு...!

தொல்லை என்று
துரத்துகிறான்...!
எல்லை மீறி
மிரட்டுகிறான்...!

கல்லை மட்டுமே
எடுக்கவில்லை...
காதல் அவனுக்கு
நாய்தான்...!

கள்ளிச் செடியில்
வீசும் காற்றே...
கண்கள் என்ன
குருடா என்றான்...!

மல்லுக்கட்டி
மயக்கிப் பார்த்தும்...
மனது இங்கு
மலடே என்றான்...!

சொல்லித்தாடி
என் செல்லத்தோழி
தேய்ந்தாலும் மீண்டும் வளர...!

அல்லிப் பூவின்
ஆசைக் காதல்
மாய்ந்தாலும் மீண்டும் மலர...!


– லசி –

# கருணைக் கொலை செய்துவிடு

கண்ணிமைக்கும் நேரத்தில்
கலைந்து விட நினைத்தால்
கருவிழிகள் கலங்குவதை
கனவாக்கவா முடியும்
கற்பனை அல்ல...
காகிதம் நிரம்பிய ரணங்கள்
கதையும் அல்ல...
கருவாக எண்ணிய என் காதல்
கவிகள் மட்டுமல்ல...
கணக்கும் இதயத்தின்
கடிவாளம்...!
கறை படிந்த அவன் உள்ளம்
கழுவ முடியாத பாவம்...!
கண்ணிவெடியில்
கால் பதித்த மனநிலை தானிது
கடக்க முடியாத சாபம்...!
காலத்தின் கட்டளையோ இது
கர்மாவின் தொடர்கதையோ...
காணவில்லை அவன் முகமும்
களைந்துவிட்டாள்
இக் காரிகையும்...!
கல்லறைக்குள் புதைக்கப்பட்ட
கன்னியிவள் உயிர்த்தெழுந்தால்....
கடைசி வரை பிரியாத உன்
கரம் மட்டும் தந்துவிடு...!
கலகம் தானென நினைத்தால் எனை
கருணைக்கொலை செய்துவிடு...!

-நேசு-
கொழும்பு-07

# இவ்வார இராசி பலன்கள்



வித்வ கலாபூஷணம்
ஜோதிட திலகம்
சிவஸ்ரீ
வெங்கட சுப்ரமணிய
குருக்கள்

**மேஷ இராசி அன்பர்களே!**

இவ்வாரம் உங்களுக்கு 9ஆம் இடத்தில் குரு பகவான் சஞ்சாரம் செய்வதால் மிகச் சிறப்பாக அமையும். இவ்வாரம் உங்களுக்கு மகிழ்ச்சி தரும் வாரமாக அமையும். புது கொள்முதல் செய்வதுக்கு உகந்த வாரமாகும். எடுக்கும் காரியங்களில் வெற்றிபெறுவீர்கள். உல்லாசப் பயணங்கள், தல யாத்திரை என்பவற்றால் மனமகிழ்ச்சி உண்டாகும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமடைவார்கள். தொழிலாளர்களுக்கு இலாபம் தரக்கூடிய வாரமாக இது அமையும்.

அதிர்ஷ்ட நாள் : புதன்
அதிர்ஷ்ட எண் : 03,08

**ரிஷப இராசி அன்பர்களே!**

இவ்வாரம் உங்களுக்கு எதிர்பார்த்த விடயங்கள் கைகூடும். மனதில் அமைதி நிலை காணப்படும். உடல் நிலையில் உபாதை குறைந்து காணப்படும். நண்பர்கள், உறவினர்கள் மூலம் நன்மை கிட்டும். பணவரவு திருப்திகரமாக அமையும். பிள்ளைகள் வழியில் சந்தோஷத்தை தரும். மாணவர்கள் கல்வியில் கவனம் தேவை. வியாபாரிகள் கூடிய இலாபமடைவார்கள்.

அதிர்ஷ்ட நாள் : திங்கள்
அதிர்ஷ்ட எண்: 13,07

**மிதுன இராசி அன்பர்களே!**

குடும்பத்தில் ஏற்பட்டிருந்த மனக்குழப்பங்கள், கஷ்டங்கள் நீங்கும். சந்தோஷமான நிலை உருவாகும். கொடுத்த கடனை திரும்பப் பெறுவீர்கள். செய்யும் தொழிலில்; மகிழ்ச்சி அடைவீர்கள். தூர தேசத்திலிருந்து நல்ல சேதி பெறுவீர்கள். எதிர்பார்த்த சலுகைகள் பெறுவீர்கள். மாணவர்களுக்கு கல்வியில் உயர்வு கிட்டும். அரசியலில் உள்ளவர்கள் எதிர்பார்த்த சலுகைகள் கிட்டும்.

அதிர்ஷ்ட நாள் : செவ்வாய்
அதிர்ஷ்ட எண்: 03,09

**கடக இராசி அன்பர்களே!**

இவ்வாரம் செய்யும் தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள். பொருட் கொள்முதல் போன்ற நற்பலனை எதிர்பார்க்கலாம். ஆண், பெண் இருபாலாருக்கும் திருமணம் கைகூடி வரும். மனதில் இருந்த கஷ்டங்கள் விலகி மகிழ்ச்சியை தரும். ஆழமாக சிந்தித்துச் செயற்பட்டால் வெற்றி நிச்சயம். கொடுக்கல் - வாங்கல் விடயங்களில் அவதானம் தேவை. தொழில்புரிபவர்கள், மாணவர்கள் இலாபமடைவார்கள்.

அதிர்ஷ்ட எண் : 14, 23
அதிர்ஷ்ட நாள் : ஞாயிறு

**சிம்ம இராசி அன்பர்களே!**

இவ்வாரம் சம பலனை எதிர்பார்க்கலாம். பொதுவாக மற்றவர்கள் விடயத்தில் தலையிடுவதை தவிர்த்துக்கொள்ளவும். கொடுக்கல் வாங்கல் விடயத்தில் கவனம் தேவை. வாகனம் செலுத்துவோர் நிதானத்தை கடைப்பிடிப்பது அவசியம். உடல்நலத்தில் கவனம் தேவை. கையிலுள்ள பொருட்களை பாதுகாப்பது முக்கியம். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம் தேவை.

அதிர்ஷ்ட எண்: 03, 07
அதிர்ஷ்ட நாள் : புதன்

**கன்னி இராசி அன்பர்களே!**

குரு அருள் மூலம் எந்தவொரு விடயத்தையும் எப்படியும் சாதிப்பீர்கள். பணம், சட்டம், சுபவிடயம், ஆன்மீகம், வியாபாரம், பழம், புஸ்பங்கள் மூலம் இலாபம் கிட்டும். பிறர் துணையுடன் எதையும் சாதிப்பதுடன், எடுத்த காரியங்களில் வெற்றிபெறுவீர்கள். உங்களுக்கு பின்னால் உங்கள் சேமிப்பு, ஆள்பலம், பக்தி துணை நிற்கும். எதிர்பார்த்த தொழிலில் உயர் பதவிகள் பெறுவார்கள். மாணவர்கள், கல்வியில் பல வெற்றிகள் பெறுவார்கள். அரச உத்தியோகத்தர்கள் அதிக இலாபம் அடைவார்கள். விவசாயிகள், வியாபாரிகள் அதிக இலாபம் அடைவார்கள். அரசியல்வாதிகள் நன்மை அடைவார்கள்.

அதிர்ஷ்ட எண் : 24,13
அதிர்ஷ்ட நாள் : சனி

**விருச்சிக இராசி அன்பர்களே!**

இவ்வாரம் குடும்பத்தில் கஷ்டங்கள் குறைந்து நன்மையடைவார்கள். வழக்கு விவகாரங்களில் உள்ளோர் வெற்றிபெறுவார்கள். பண வரவு திருப்தியை தரும். பண முதலீடு செய்ய உள்ளவர்கள் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நன்மை தரும். தொழில் புரியும் இடத்தில் மேல் அதிகாரியுடன் அனுசரித்துச் செல்வது நன்மையைத் தரும். அசையும், அசையா சொத்துகள் கைவந்து சேரும். விளையாட்டில் பங்குகொள்ளும் வீரர்கள் உடல்நலம் பேணுதல் அவசியம். மாணவர்களுக்கு நன்மை தரும்.

அதிர்ஷ்ட எண் : 03, 21
அதிர்ஷ்ட : புதன்

**துலா இராசி அன்பர்களே!**

இந்த வாரம் கவலையின்றி உங்கள் முயற்சிகளில் வேகமாகச் செயற்படலாம். பிரச்சினைகள் படிப்படியாக விலகிச்செல்லும். உழைப்புக்கேற்ற ஊதியம் பெறுவார்கள். குடும்பத்தில் நிம்மதி கிடைக்க பெரும் முயற்சி தேவைப்படும். உங்களின் குடும்ப விவகாரத்தில் பிறர் தலையிடுவதை தவிர்த்துக்கொள்ளவும். பணியாளர்கள் சக பணியாளர்களிடம் சுமுகமாக நடந்துக்கொள்வதன் மூலம் நன்மையடைவார்கள். கணவன் - மனைவி உறவுகள் நன்மை தரும். பெரியோர்களின் ஆசிகள், வாழ்த்துகளைப் பெறுவார்கள். புது பொருட்கள் கொள்முதல் செய்யும் வாய்ப்பு கிட்டும். மாணவர்கள் கல்வியில் உயர்வடைவார்கள்.

அதிர்ஷ்ட எண்டு : 07, 09
அதிர்ஷ்ட நாள் : வியாழன்

**தனுசு இராசி அன்பர்களே!**

தற்காலம் ஏழரைச் சனி கடைக்கூறு நடைபெறுகிறது. அத்துடன், குரு 2ஆம் இடத்தில் சஞ்சரிக்கின்றார். உடல் நிலையில் இடையிடையே ரோகங்கள் உண்டாகும். குடும்ப நிலையில் சிற்சில கஷ்டங்கள் எதிர்கொள்ள நேரிடும். பொருளாதார நிலை நன்றாக இருக்கும். கொடுக்கல் வாங்கல் நிலையில் சுமுக நிலை ஏற்படும். தொழில் துறையில் ஆர்வமும் உற்சாகமும் கிட்டும். வர்த்தகத்துறையில் உள்ளோருக்கு வருமானம் அதிகரிக்கும். சனி வழிபாடு செய்வது நன்மை தரும். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம் தேவை. வியாபாரிகளுக்கு சம இலாபம் கிட்டும்.

அதிர்ஷ்ட எண் : 11, 9
அதிர்ஷ்ட நாள் : புதன்

**மகர இராசி அன்பர்களே!**

தற்காலம் குரு பகவான் ஜன்மத்தில் சஞ்சரிக்கின்றார். எனவே, மாறி மாறி மனக் கஷ்டமும் யோசனையும் தோன்றி மறையும். உடல் சுகம் பாதிக்கப்படும். உறவினர்கள் நண்பர்களுக்கிடையே உறவுகள் பலவீனமுறும். பொருளாதாரம் பாதிப்புக்கு உள்ளாகும். கொடுக்கல் வாங்கல் விடயங்களில் சில பிணக்குகள் ஏற்படும். தொழில் செய்வோர் நிம்மதி குறைந்து காணப்படுவர். அலைச்சல் உண்டாகும். பொதுவாக இவர்களுக்கு இவ்வாரம் சம பலனை எதிர்பார்க்கலாம். மாணவர்களுக்கு கல்வியில் மந்தநிலை ஏற்படும். வியாழக்கிழமையில் குரு பகவானுக்கு கடலை மாலை சாத்தி வழிபடுதல் நன்மையை தரும்.

அதிரஷ்ட எண் : 21, 30
அதிர்ஷ்ட நாள் : ஞாயிறு

**கும்ப இராசி அன்பர்களே!**

இவ்வாரம் உங்களுக்கு சுப பலன்களே உண்டாகும். ஆரம்பிக்கும் முயற்சிகள் அனுகூலம் தரக்கூடியதாக அமையும். உடல்நிலையில் ரோகங்கள் ஏற்பட்டு குணமாகும். பொருளாதார தேவைகளில் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும். குடும்ப நிலையில் ஒற்றுமை வலுப்பெறும். கொடுக்கல் வாங்கல் விடயங்கள் மூலம் இணக்க நிலை உருவாகும். ஊதிய அதிகரிப்பு, தொழில் மாற்றம், இடமாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு. வருமானம் அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் அதிக மதிப்பெண்கள் கிடைக்கும். விவசாயிகள் அதிக இலாபம் அடைவார்கள். தொழில் அதிபர்கள் புது முதலீடு செய்து இலாபம் பெறுவர்கள்.

அதிர்ஷ்ட எண் : 04, 05
அதிர்ஷ்ட நாள் : வெள்ளி

**மீன இராசி அன்பர்களே!**

உங்களுக்கு இவ்வாரம் சனி, குரு 11ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்வதால் விசேட முன்னேற்றம் காண்பீர்கள். உடல்நிலையில் உற்சாகத்தைத் தரும். குடும்ப நிலையில் குதூகலம் காணப்படும். தேவையான பொருட்கள் வாங்கக்கூடியதாக அமையும். திருமணத்தை எதிர்நோக்கி இருப்போருக்கு மங்கள கருமம் மனம்போல் அமையும். மாணவர்களுக்கு கல்வித்துறையில் விசேட முன்னேற்றம் காணப்படும். வர்த்தகத் துறையினர், வியாபாரிகள் வங்கி ஆதரவால் வியாபார விஸ்தரிப்பை மேற்கொள்வார்கள். உத்தியோகத்தர்கள் பதவி உயர்வு பெறுவார்கள்.

அதிர்ஷ்ட எண் : 06, 04
அதிர்ஷ்ட நாள் : திங்கள்

# பட்டத்து யானை



முன்னொரு காலத்தில் மகத நாட்டு அரண்மனையில் பட்டத்து யானையொன்று இருந்தது. அதன்மீது அமர்ந்து செல்வதைப் பெருமையாக நினைத்தான் அரசன். அதற்கு எந்தக் குறையும் இல்லாமல் பார்த்துக் கொண்டான். அரண்மனை லாயத்தில் அந்த யானை உண்டுகொண்டிருந்தது. பசியால் வாடிய நாயொன்று அங்கே வந்தது. எலும்பும், தோலுமாகப் பார்ப்பதற்கே பரிதாபமாக இருந்தது அது.

யானை உண்டபோது சிந்திய உணவை அது பரபரப்புடன் உண்டது. இதைப் பார்த்து இரக்கப்பட்ட யானை, அதற்கு நிறைய உணவைத் தந்தது. அதுவும் மகிழ்ச்சியுடன் உண்டது. அதன்பிறகு அது நாள்தோறும் அங்கே வரத் தொடங்கியது. யானையும் தன் உணவை அதற்குத் தந்தது.

நாளாக நாளாக அவை இரண்டும் நெருங்கிய நண்பர்களாயின. எப்போதும் இணைபிரியாமல் இருந்தன. நாள்தோறும் நிறைய உணவு உண்டதால் அந்த நாய் கொழுத்துப் பருத்தது. அழகாகக் காட்சியளித்தது. அங்கே வந்த செல்வர் ஒருவர் அந்த நாயைப் பார்த்தார். அதைத் தன் வீட்டில் வளர்க்க விரும்பினார்.

பாகனிடம் அவர், “இந்த நாய்க்கு விலையாக நூறு பணம் தருகிறேன்” என்றார்.

பணத்தாசை கொண்ட அவன் அந்த நாயை அவரிடம் விற்றுவிட்டான். தன் நண்பனை நினைத்து அந்த யானை உணவு உண்ணவில்லை. எப்போதும் கண்ணீர் வடித்தபடியே இருந்தது. அதை அறிந்த அரசன், அரண்மனை மருத்துவர்களை அனுப்பி யானையை சோதிக்கச் சொன்னான். பட்டத்து யானையைச் சோதித்த அவர்கள் அரசனிடம் வந்தனர்.

“அரசே! பட்டத்து யானைக்கு எந்த நோயும் இல்லை. அது ஏன் உணவு உண்ணவில்லை? கண்ணீர் வடிக்கிறது என்பது புரியவில்லை” என்றனர்.

என்ன செய்வது என்று குழம்பிய அரசன் அமைச்சரை அழைத்தான். “பட்டத்து யானைக்கு எந்த நோயும் இல்லை என்று மருத்துவர்கள் சொல்கின்றனர். நீங்கள்தான் எப்படியாவது அதைக் குணப்படுத்த வேண்டும்” என்றான்.

அறிவு நிறைந்த அந்த அமைச்சர் லாயத்திற்கு வந்தார். உடல் மெலிந்து கண்ணீர் வடித்தபடி இருந்த யானையைப் பார்த்தார். அதன் முன் வைக்கப்பட்டு இருந்த சுவையான உணவு வகைகள் அப்படியே இருந்தன. “இந்த யானைக்கு ஏதோ துன்பம் நிகழ்ந்துள்ளது. கண்டிப்பாக அது பாகனுக்குத் தெரிந்திருக்கும்'' என்று நினைத்தார் அவர்.

பாகனை அழைத்த அவர், “அண்மையில் இந்த யானையைத் துன்பப்படுத்தும் நிகழ்ச்சி ஒன்று நடந்துள்ளது. அது உனக்குத் தெரிந்திருக்கும். அது என்ன என்று உண்மையைச் சொன்னால் நீ உயிர் பிழைப்பாய்” என்று மிரட்டினார்.

வேறு வழியில்லாத அவன், “இங்கே கொழு கொழுவென்று நாயொன்று இருந்தது. அதுவும் இந்த யானையும் எப்போதும் ஒன்றாகவே இருந்தன. அந்த நாயை செல்வந்தர் ஒருவர் விலைக்குக் கேட்டார். நானும் விற்றுவிட்டேன். அன்றிலிருந்து இந்த யானை எதையும் உண்பதில்லை. கண்ணீர் வடித்தபடி உள்ளது” என்றான்.

“அந்த நாயை மீண்டும் இங்கே கொண்டுவா” என்றார் அமைச்சர்.

அவனும் நாயுடன் அங்கே வந்தான். படுத்திருந்த யானை தன் நண்பனைப் பார்த்ததும் எழுந்தது. அந்த நாய் வாலை ஆட்டியபடியே யானையின் அருகே ஓடியது. மகிழ்ச்சியாகக் குரைத்தது. யானை அதைத் தன் துதிக்கையால் தடவிக்கொடுத்தது.

உணர்ச்சி மிகுந்த இந்தக் காட்சியைப் பார்த்து உள்ளம் நெகிழ்ந்தார் அமைச்சர். விலங்குகளுக்குள் இப்படி ஒரு நட்பா என்று வியப்படைந்தார். அரசனைச் சந்தித்த அவர் நடந்ததை எல்லாம் சொன்னார்.

“சில நாட்களில் பட்டத்து யானை பழைய நிலையை அடைந்துவிடும்” என்றார். அவர் சொன்னதுபோலவே அந்த யானையும் பழைய பெருமித நிலையை அடைந்தது.

## பொன்மொழிகள்

- நம்மிடம் பெரிய தவறுகள் இல்லை எனக் குறிப்பிடுவதற்கே, சிறிய தவறுகளை ஒப்புக்கொள்கிறோம்!
- வாழ்க்கை என்பது குறைவான தகவல்களை வைத்துக்கொண்டு சரியான முடிவுக்கு வரும் ஒரு கலை.
- ஓடுவதில் பயனில்லை. நேரத்தில் புறப்படுங்கள்.
- எல்லோரையும் நேசிப்பது சிரமம். ஆனால், பழகிக்கொள்ளுங்கள்.
- நல்லவர்களோடு நட்பாயிரு. நீயும் நல்லவனாவாய் இரு.
- காரணமே இல்லாமல் கோபம் தோன்றுவதில்லை. ஆனால், காரணம் நல்லதாய் இருப்பதில்லை.
- இவர்கள் ஏன் இப்படி? என்பதை விட, இவர்கள் இப்படித்தான் என எண்ணிக்கொள்.
- யார் சொல்வது சரி என்பதை விட, எது சரி என்பதே முக்கியம்.
- பலமுறை சிந்தியுங்கள். ஒருமுறை முடிவெடுங்கள்.
- பயம்தான் நம்மைப் பயமுறுத்துகிறது. பயத்தை உதறி எறிவோம்.



## மரம் வளர்ப்போமே...

தாத்தா வைத்த தென்னையுமே,
தலையால் இளநீர் தருகிறது!

பாட்டி வைத்த கொய்யாவும்,
பழங்கள் நிறைய கொடுக்கிறது!

அப்பா வைத்த மாஞ்செடியும்,
அல்வா போல பழம் தருகிறது!

அம்மா வைத்த முருங்கையுமே
அளவில்லாமல் காய்க்கிறது!

அண்ணன் வைத்த மாதுளையும்,
கிண்ணம் போல பழுக்கிறது!

சின்னஞ்சிறுவன் நானுமொரு
செடியை நட்டு வளர்ப்பேனே....

## பொது அறிவு



- ★ சூரியக் குடும்பத்தைக் கண்டறிந்தவர், கோபர் நிக்கஸ்.
- ★ பாரத ரத்னா விருது பெற்ற முதல் பெண்மணி, இந்திரா காந்தி.
- ★ சீனர்கள்தான் முறையான நெல் சாகுபடி முறையை உலகுக்கு அறிமுகப்படுத்தியவர்கள்.
- ★ உயிரியல் கோட்பாட்டின் தந்தை என்று அழைக்கப்படுபவர், சார்லஸ் டார்வின்.
- ★ இந்திய மருத்துவ ஆராய்ச்சி மையம், லக்னோவில் அமைந்துள்ளது.
- ★ முதுகெலும்புடன் தோன்றிய முதல் உயிரினம், மீன்.
- ★ திருவருட்பாவை இயற்றியவர், வள்ளலார்.
- ★ பாலில் ஹலாக்டிக் அமிலம் உள்ளது.
- ★ குஜராத் மாநிலத்தின் புகழ்பெற்ற நடனம், தாண்டியா.
- ★ ஆரோக்கியமான மனிதரின் கண்கள், சுமார் ஒரு கோடிக்கும் மேற்பட்ட வண்ணங்களின் வேறுபாடுகளை அறியக்கூடியது.

## கண்டுபிடியுங்கள்...



**கடந்த வார கண்டுபிடியுங்கள் பகுதிக்கான சரியான விடையை அனுப்பிய மாணவர்கள்...**

**தவசீலன் ஹெஷ்கில்**
தரம்-07
விவேகானந்தா கல்லூரி, கொழும்பு.

**அக்ஷரா**
தரம்-01
றோமன் கத்தோலிக்க மகாவித்தியாலயம், நிலாவெளி.

## முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டதைப்போல

ஒருவரின் குறையைச் சொல்லி இழிவுபடுத்துவது பழமொழியின் நோக்கமல்ல. இந்தப் பழமொழி காலப்போக்கில் மருவியிருந்தாலும் அது கண்டிக்கத்தக்கது. உண்மையான பழமொழி “முயலான் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டதைப் போல” என்பதுதான். முயற்சியே செய்யாமல் ஒருவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படலாமா? என்பது அதன் உண்மையான அர்த்தம். முயலான் என்ற சொல் முடவன் என்று மாறிப்போய்விட்டது.



## ஒளிரும் கடல்



இரவில் விண்மீன் நிறைந்த வானம் எவ்வளவு அழகாக இருக்குமோ அப்படி ஒரு அழகிய தோற்றத்தை தருகிறது மாலைதீவிலுள்ள நாப்தாலுகா ஸ்கிண்டிலேன்ஸ் எனும் ஒளிரும் கடற்கரை. இங்கு இரவில் வானில் மின்னும் நட்சத்திரம்போன்று கடற்கரையும் நீல நிறத்தில் ஒளிவீசுவது கண்கவர் காட்சியாக இருக்கின்றது.

இந்த அழகான அதிசய நிகழ்வுக்குக் காரணம், இந்தக் கடலில் கோடிக்கணக்கில் காணப்படும் பைட்டோபிளாங்டோன் எனும் கடல்வாழ் மிதக்கும் உயிரினமாகும். பொதுவாக இந்த உயிரினங்கள் கண்ணுக்குத் தெரியாத நிலையில்தான் இருக்கும்.

ஆனால், கடல் அலையினாலும், தொடுவதினாலும் இதற்கு தொந்தரவு ஏற்படும்போது இது அழகிய நீல நிறத்தில் ஒளிர்கிறது. இந்த அதிசய நிகழ்வு சுற்றுலாப் பயணிகளை அதிகளவு ஈர்க்கின்றது.

## சமத்துவம்

உலகில் பிறந்துவிட்ட யாவரும் வாழத்தான் வேண்டும். வாழ்க்கை வசதிகளைப் தேட, பெற, காக்க, துய்க்க மற்றும் பிறர்க்கு இட எல்லோருக்கும் உரிமையுண்டு. இதுவே பிறப்புரிமை. ஒருவர் உரிமையை மற்றவர் உடல் வலிவு, பொருள் வலிவு, செல்வாக்கு வலிவு, அறிவு வலிவு இவற்றால் பறிக்காத, தடுக்காத ஒரு சமுதாயப் பாதுகாப்பே பிறப்புரிமை சுதந்திரமாகும்.இதுவே ஆட்சிமுறையாகும்.

வலிந்தவன் மெலிந்தவனுக்கு தன் ஆற்றலைக் கொண்டு உதவிசெய்து, எல்லோருடைய பிறப்புரிமையையும் ஒப்புக்கொண்டு, அவர்கள் சுதந்திரத்தைக் காக்க, தன்னாலாகிய கடமைகளைச் செய்து, எல்லோருடனும் ஒத்து இயன்றவரை உதவி வாழ்கின்ற தகைமையே சமத்துவமாகும். தனிமனிதனின் கருத்திலும் சமுதாய அமைப்பு என்ற ஆட்சி சட்டத்திலும் சமத்துவம் இடம்பெற்றால்தான் முழுமையான பலன் கிடைக்கும்.

“பிறப்பு ஒக்கும் எவ்வுயிர்க்கும் சிறப்பு ஒவ்வா செய்தொழில் வேற்றுமையால்” என்ற குறளையும் சிந்தியுங்கள். பிறப்பினால் அமைந்த உரிமையை ஒப்புக்கொள்ளும் பேருணர்வே சமத்துவமாகும்.

**சோ. வினோஜ்குமார்,**
**தொழில்நுட்பப்பீடம்,**
**யாழ்.பல்கலைகழகம்,**
**கிளிநொச்சி.**





## நூல்களிலிருந்து...

**மூதுரை**

**வெண்பா : 2**
**நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்**
**கல்மேல் எழுத்துப்போல் காணுமே – அல்லாத**
**ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்**
**நீர் மேல் எழுத்துக்கு நேர்.**

**விளக்கம்**
**நல்லவர்களுக்கு செய்யும் உதவி, கல்லின் மேல் எழுத்தைச் செதுக்குவது போன்றது. அது எவரும் அறியும் வண்ணம் என்றும் நிலைத்திருக்கும். அப்படியல்லாது இரக்கமற்றவர்களுக்கு செய்யும் உதவி எவர்க்கும் பயன்தராது. அது நீரின் மேல் எழுதும் எழுத்துகளைப் போன்று பயனின்றி நிலைக்காதுபோகும்.**

## குறள் அறிவோம்



குறள் 191:
பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்.


**விளக்க உரை:**
**பலரும் கேட்டு வெறுக்கப்படுகின்ற, பயனற்ற சொற்களைச் சொல்லுபவன் எல்லோராலும் இகழப்படுவான்.**

உங்களது ஆக்கங்களையும், சிறார்களின் பிறந்த தின வாழ்த்துகளையும் (புகைப்படத்துடன்) பகிர்ந்துகொள்ள களம் அமைத்துத் தருகிறது ‘தமிழன்’ பத்திரிகை. உங்களது விபரங்களுடன் எங்களுக்கு அனுப்பிவைக்கலாம்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
**இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு. 07**
**மின்னஞ்சல் முகவரி: thamilansiruvarula@yahoo.com**

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.





# மருதாணி

பெண்கள் மருதாணி அலங்காரம் செய்துகொள்ள எப்போதுமே விரும்புவார்கள். ஏனென்றால், அது அவர்களுக்கு அழகோடு, ஆரோக்கியத்தையும் சேர்த்து தருகிறது.

திருமணங்களில் மணப்பெண்களுக்கு பாரம்பரிய முறையில் பதினாறு வகையான அலங்காரங்களை செய்கிறார்கள். அதில் முக்கியமானது, மருதாணி அலங்காரம். பெண்கள் மருதாணி அலங்காரம் செய்துகொள்ள எப்போதுமே விரும்புவார்கள். ஏனென்றால், அது அவர்களுக்கு அழகோடு, ஆரோக்கியத்தையும் சேர்த்து தருகிறது. மருதாணி உடலில் பித்தத் தன்மையை கட்டுப்படுத்தி, குளிர்ச்சியைத் தருகிறது.

பாத்திரங்களை பளிச்சிடவைக்கும் சோப்பு முதல் துணி துவைக்க பயன்படுத்தும் பவுடர் வரை எல்லாமுமே தற்போது இரசாயன கலவைகளாக மாறி வருகின்றன. அவற்றால் பெண்களின் கைகளுக்கு ஏற்படும் அனைத்து பாதிப்புகளையும் போக்கும் சக்தி இயற்கையான மருதாணிக்கு இருக்கிறது. கால், கைகளில் ஏற்படும் பித்த வெடிப்பு, தோலுரிதல் போன்றவைகளும் மருதாணியால் மறையும். இத்தகைய மருத்துவக் குணங்கள் கொண்ட மருதாணி சுப நிகழ்ச்சிகளில் மங்கள பொருளாகவும் விளங்குகிறது.

மருதாணி அரைத்து கைகளை அழகுபடுத்திக்கொண்டு சில மணிநேரம் காத்திருக்கவேண்டியிருப்பதால் இன்றைய அவசர யுகத்தில் பெண்கள் அதற்கெல்லாம் நேரம் ஒதுக்குவதில்லை. அதனால் மருதாணி, பெண்களின் பயன்பாட்டிலிருந்து ஓரங்கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதை உணர்ந்த வியாபாரிகள் அதிலும் ரெடிமேட் வகைகளை கொண்டுவந்துவிட்டார்கள். வைத்ததும் அது காய்ந்துவிடும் என்றாலும், அதில் இயற்கையான மருத்துவக் குணம் குறைவு. கிளிட்டர் மருதாணி, நெயில் பொலிஷ் மருதாணி, ஜர்தோசி மருதாணி என்று இப்போது அதற்கு பல பெயர்கள் உள்ளன. அவற்றைப் பயன்படுத்தி கைகளில் அழகிய உருவங்களை வடிவமைக்கிறார்கள். அதன்மூலம் குறுகிய நேரத்தில் அந்த அலங்காரத்தை செய்துமுடித்துவிட முடிகிறது. காய்வதற்காக காத்திருக்கவேண்டிய அவசியம் இல்லை. அழகு நிலையங்களில் விதவிதமான மருதாணிகளை தயார்செய்து வைத்திருக்கிறார்கள். திடீர் விருந்து, விழாக்களுக்குச் செல்லும்போது அதனை விருப்பம்போல் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

ஜர்தோசி எனப்படும் பாரம்பரிய மருதாணியில் தங்கம், வெள்ளி துகள்கள் கலப்பதால் அது பளபளப்பாக காட்சியளிக்கிறது. கிளிட்டர் மருதாணியை உடைக்கு பொருத்தமாகவும் வைத்துக்கொள் ளலாம். பாரம்பரிய மருதாணியால் அழகுபடுத்திக்கொண்டு பின்பு அதற்குமேல் பளபளக்கும் ஜெல், மைக்கா போன்ற பொருட்களை கலந்து பூசி அழகிய வடிவத்தை அலங்காரம் செய்வார்கள். மருதாணியின் புதிய பரிமாணம் கவர்ச்சியாக இருப்பதால், இப்போது பலராலும் இது விரும்பி ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதன் பெருமை வெளிநாடுகளுக்கும் பரவிக்கொண்டிருக்கிறது.



பாரம்பரிய மருதாணி உள்ளங்கைகளிலும், கால்களிலும் மட்டுமே வைக்கப்பட்டது. இப்போது தோள்பட்டையிலிருந்து விரல்கள் வரை அலங்கரிக்கப்படுகிறது.

மருதாணிக்காக புதிய டிசைன்களை அழகுக்கலை நிபுணர்கள் உருவாக்குகிறார்கள். பூக்கள், இலை, கொடிகள், பறவைகள், விலங்குகள், அழகிய வாசகங்கள், விருப்பமானவர்களின் பெயர், தேள், டிராகன், பாம்பு போன்றவை அதில் பிரபலமாக இருக்கிறது. இந்த டிசைன்களை போடுவதற்கு தேர்ச்சிபெற்ற கலைஞர்களை அழகு நிலையங்கள் வேலைக்கு அமர்த்தியிருக்கின்றன.

இந்த மருதாணி கலைஞர்களுக்கு வெளிநாடுகளிலும் இப்போது நல்ல மவுசு. வெளிநாடுகளில் நம்ம ஊர் சுத்தமான மருதாணிக்கு தனி செல்வாக்கு உள்ளது. அதன் வாசமும், இயற்கையான வண்ணமும் அவர்களுக்கு நன்றாக பிடித்துப்போய்விட்டது. அதனால் மருதாணியோடு சேர்ந்து மருதாணி கலைஞர்களும் வெளிநாடு செல்கிறார்கள்.

நெயில் பொலிஷ் கலந்த மருதாணியும் இப்போது கிடைக்கிறது. பல வண்ணங்களில், பல டிசைன்களில் அதை நகங்களில் வைத்துக்கொள்ளலாம். பிறகு ரிமூவர் கலந்து அழித்துவிடலாம். தொலைக்காட்சி நிகழ்ச்சி நடத்துபவர்கள், மேடை நிகழ்ச்சி செய்பவர்கள், ஐந்து நட்சத்திர ஹோட்டல் வரவேற்பாளர்கள் போன்றவர்கள் இதனை அதிகம் பயன்படுத்துகிறார்கள்.

பல நட்சத்திர ஹோட்டல்கள், தங்கள் வாடிக்கையாளர்களை கவர அவர்களுக்கு மருதாணி அலங்காரம் செய்கிறார்கள். பாரம்பரிய அழகுசாதனப் பொருளான மருதாணி இன்று பலவகையில் மாற்றமடைந்து பார் முழுவதும் மணக்கிறது. மருதாணி இலங்கை நாடுகளில் மாத்திரமன்றி பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், டுபாய் போன்ற நாடுகளிலும் பிரசித்திபெற்றிருக்கிறது.

# மெட்டியில் இத்தனைப் பயன்களா...?





பெண்களின் கர்ப்பப்பை நரம்புகளுக்கும் கால் விரல் நரம்புகளுக்கும் ஒருவித தொடர்பு உள்ளது.

கால் விரலில் மெட்டி அணிவதால் கர்ப்பப்பையின் நீர்ச் சமநிலை எப்போதும் பாதிப்படைவதில்லை. அது மட்டுமன்றி, வெள்ளி ஆபரணத்தில் செய்த மெட்டியைத்தான் அணிய 'வேண்டும்.

ஏனெனில், வெள்ளியில் இருக்கக்கூடிய ஒருவித காந்தசக்தி காலில் இருக்கும் நரம்புகளிலிருந்து உடலில் ஊடுருவி நோய்களை நிவாரணம் செய்யும் ஆற்றலுள்ளது.

பெண்கள் கர்ப்பம் அடையும்போது ஏற்படும் மயக்கம், வாந்தி, சோர்வு, பசியின்மை ஏற்படும். கர்ப்பக்காலத்தின்போது இந்த நரம்பை அழுத்தித் தேய்த்தால் மேற்கண்ட நோய்கள் குறையும்.

இதனை எப்போதும் செய்துகொண்டிருக்க முடியாது என்பதற்காக வெள்ளியிலான மெட்டி அணிவித்தார்கள். காரணம், நடக்கும்போது இயற்கையாகவே அழுத்தி, உராய்த்து வலியை குறைக்கிறது.

கர்ப்பப்பை பாதிப்புகள் ஏதும் வரக்கூடாது என்பதால்தான் காலில் மெட்டி அணியும் பழக்கத்தை முன்னோர்கள் உருவாக்கியிருக்கின்றார்கள்.



# அதிரசம்

**தேவையான பொருட்கள் :**

பச்சரிசி – அரை கிலோ
வெல்லம் – அரை கிலோ
ஏலக்காய் (பொடித்தது) – 1 டீஸ்பூன்
தண்ணீர் – தேவையான அளவு
எண்ணெய் – தேவையான அளவு

**செய்முறை :**

முதலில் பச்சரிசியை மூன்று மணிநேரம் ஊறவைத்துக்கொள்ளவும். பிறகு ஒரு மெல்லிய வெண்ணிறத்துணியில் பச்சரிசியை பரப்பி நிழலில் காயவைக்கவும். ஈரம் காய்ந்த பிறகு மிக்ஸியில் நைசாக அரைத்துக்கொள்ளவும்.

வெல்லத்தை தூளாக்கி ஒரு பாத்திரத்தில் போட்டு தேவையான அளவு தண்ணீர் சேர்த்து, பாகு காய்ச்சவும். பாகு பதமாக வரும்போது ஏலக்காய் போட்டு பாகை அடுப்பிலிருந்து இறக்கிவைத்துவிட்டு, பச்சரிசி மாவை சிறிது, சிறிதாக கொட்டி கிளறவும்.

இந்தக் கலவை சிறிது ஆறியதும், சிறு சிறு உருண்டைகளாக எடுத்து, எண்ணெய் தடவியுள்ள வாழை இலை அல்லது பொலித்தீன் பேப்பரில் தட்டிக்கொள்ளவும்.

கடாயில் எண்ணெய் ஊற்றி சூடேறியதும், தட்டிவைத்துள்ள மாவை போட்டு பொரித் தெடுக்கவும். நன்றாக வெந்து, சிவந்த நிறமானதும் எண்ணெய்யை முழுமையாக வடித்து அதிரசத்தை எடுத்து, ஆறிய பின்பு பாத்திரத்தில் வைக்கவும். சுவையான அதிரசம் தயார்.!



# கூந்தல் மற்றும் சரும அழகுக்கு உதவும் ஆவாரம்பூ

பெண்களுக்கு முகத்தில் இருக்கும் தேவையில்லாத முடிகளை அழிக்க ஆவாரம் பூ அதிக அளவில் உதவி புரிகின்றது.

ஆவாரம்பூவுடன் வெள்ளரி விதை, கசகசா, பால் ஆகியவற்றை சேர்த்து அரைத்துக்கொள்ள வேண்டும். இவற்றை உடலிலும் முகத்திலும் தேய்த்துக் குளிக்கலாம். வாரத்துக்கு இரண்டு முறை இவ்வாறு செய்துவந்தால் உடல் வறட்சி நீங்கிவிடும், நிறம் பளிச்சென்று இருக்கும்.

பெண்களுக்கு முகத்தில் இருக்கும் தேவையில்லாத முடிகளை அழிக்க ஆவாரம் பூ அதிகளவில் உதவி புரிகின்றது. பூலான் கிழங்கு, கோரைக் கிழங்கு, உலர்ந்த ஆவாரம் பூ ஆகிய மூன்றையும் பசைபோல அரைத்துக்கொள்ளவேண்டும். இதை தொடர்ந்து உங்கள் முகத்துக்கு பூசி வந்தால் முகம் பளிச்சென்று மின்ன ஆரம்பித்துவிடும்.

முடி கொட்டுவதைத் தடுக்கவும் ஆவாரம்பூ மிகச்சிறந்த பணிபுரிகிறது. செம்பருத்தி, தேங்காய்ப் பால் மற்றும் ஆவாரம்பூ ஆகியவற்றைச் சேர்த்து அரைத்துக்கொள்ள வேண்டும். இதை வாரத்துக்கு மூன்று முறை தேய்த்து குளித்துவந்தால் முடி கொட்டுவது நின்றுவிடும். கூந்தலும் நன்கு வளர்ச்சி அடையும்.

வடிகட்டிய ஆவாரம் பூவின் தண்ணீரை வைத்து உங்கள் கூந்தலை அலசலாம். முகத்தையும் கழுவலாம், இதை தொடர்ந்து செய்தால் முடி சுத்தமாவது மட்டுமில்லாமல், முகமும் பளிச்சென்று இருக்கும். உடலின் நிறம் அதிகரிக்கும். உடலுக்கு புத்துணர்ச்சி கிடைக்கும்.

ஆவாரம் பூவின் சாற்றை சுண்டக் காய்ச்சி, அதனுடன் தேங்காய் எண்ணெயை சேர்த்து தினமும் முடிக்கு தடவி வரலாம். இவ்வாறு தொடர்ந்து செய்தால் முடி நன்கு வளருவதுடன் முடி கொட்டுவதும் நின்றுவிடும்.

# காரிகை களம்

## சமையலறைக் குறிப்புகள்




### கெரட்

பொதுவாக மண்ணுக்கு அடியில் விளையக்கூடிய கெரட் போன்ற காய்கறிகளை நாம் வாங்கினால் அவற்றின் வெளி தோற்றத்தை வைத்தே நல்ல காயா? இல்லையா? என்பதை கண்டறிந்து விடலாம். முக்கியமாக அதன் தோல் பகுதி மிகவும் வறண்டு காணப்பட்டாலோ அல் லது வெடிப்பாக இருந்தாலோ அவை பழைய காயாகும்.



### மாங்காய்

பலர் மாங்காயை வாங்குவதற்குப் பதிலாக மாம்பழத்தை வாங்கிவிடுவோம். எப்போதும் அழுத்தி பார்த்தே பழங்களை வாங்கவேண்டும். மேலும், மேலும் சிவப்பு நிறத்தில் இருந்தால் அவை பழுத் துள்ளது என அர்த்தம் கிடையாது.



### கத்தரிக்காய்

பொதுவாக கத்தரிக்காயை வாங்கும் போது அவற்றின் அளவை பார்த்துதான் வாங்க வேண்டும். மேலும், அவை மிகவும் முத்தி இருக்கக்கூடாது. அப்போதுதான் அதன் சுவை கூடுதலாக இருக்கும்.



### பீட்ரூட்

பீட்ரூட்டின் மீது அதிக வெடிப்புகள் இருந்தால் அதனை வாங்காதீர்கள். மேலும், இதன் தோல் பகுதி வறண்டிருந்தால் இவை பல நாட்களாக விற்கப் படாமல் இருக்கும் காய் என்பதை உணர்ந்து கொள்ளுங் கள்.



அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.





## கவர்ச்சிக்குமாறிய சின்னத்திரை நடிகை

கொரோனா லொக்டவுன் காலத்தில் தொடர்ந்து கவர்ச்சி புகைப்படங்களை சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுவருகிறார் சின்னத்திரை நடிகை ஷிவானி. இதேவேளை, நடிகை சாக்ஷியும் இந்த கொரோனா காலத்தில் ஒருநாள்கூட விடாமல் தொடர்ந்து கிளாமர் புகைப்படங்களை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றிவருகிறார். அதில் சில புகைப்படங்கள் கிளாமர் எல்லையை மீறி கவர்ச்சிகரமாகவும் இருக்கும் என்பதெல்லாம் அவர்களுக்குக் கவலையே அல்ல. இவர்கள் இருவருக்கும் இடையிலான போட்டியில் டிவி நடிகை ஷிவானி முந்திக் கொண்டு வருகிறார். அவரை இன்ஸ்டாகிராமில் தொடர்பவர்களின் எண்ணிக்கை 2 மில்லியனைத் தொடவுள்ளது. ஆனால், சாக்ஷி அகர்வால் இப்போதுதான் ஒரு மில்லியனைத் தொட்டுள்ளார்.

சாக்ஷி, ஷிவானி இருவரும் போட்டி போட்டு கவர்ச்சி புகைப்படங்களை வெளியிடுவதற்குக் காரணம் லைக்குகளா, புதிய பாலோயர்களா, புதிய பட வாய்ப்புகளா என பின்னர்தான் தெரியவரும்.



## பொறுமைசாலி கிடைக்கும்வரை வெயிட்டிங்... - வேதிகா

குத்து டான்ஸ் மூலம் இந்தக் கொரோனா ஊரடங்கிலும் சமூக வலைத்தளத்தின் மூலம் தெறிக்கவிட்டுக்கொண்டிருக்கிறார் வேதிகா. இன்ஸ்டாகிராமில் குத்து டான்ஸைத் தெறிக்கவிட்டு 'வாவ்' சொல்ல வைக்கும் வேதிகா, இப்போது தமிழ், இந்தி, கன்னடம் என மூன்று மொழிகளிலும் சிறகடிக்கிறார். மும்பை ஹீரோயின்களில் சரளமாக தமிழ் பேசத் தெரிந்த ஒருசிலரில் இவருக்கும் தனி இடமுண்டு.

''மும்பையில் பிறந்து வளர்ந்த நான், தென்னிந்தியாவில் என் கெரியரைத் தொடங்குவேன்னு நினைச்சதில்ல. ஆக்சுவலா நிறைய மொழிகள் கத்துக்க பிடிக்கும். நான் எந்தவொரு இண்டஸ்ட்ரில எண்ட்ரி ஆனாலும், அங்குள்ள மொழியைத் தெரிஞ்சுக்க விரும்புவேன். தமிழுக்கு வந்தப்ப எனக்கு தமிழ் பேசத் தெரியாது. முதல் படம் 'மதராஸி' ஷூட் முடிக்கும்போது, தமிழைத் தெரிஞ்சுக்க ஆரம்பிச்சிட்டேன். இப்ப, நல்லா பேச வருது. என்ஜாய் பண்ணி பேசுறேன்...'' கைகூப்பி கண்களில் புன்னகைக்கிறார் வேதிகா.

### ஒரு டான்ஸர், ஆக்டர் ஆனது எப்படி?

சின்ன வயசுல, மாதுரி தீட்சித், தேவி மேம் படங்கள் அதிகம் பார்ப்பேன். எங்க வீட்டுல இருக்கற கண்ணாடி முன்னாடி அவங்களை மாதிரி டான்ஸ் ஆடி ரிகர்சலும் பாத்திருக்கேன். ஸ்கூல், காலேஜ்ல கல்ச்சுரல்ஸ்ல கலந்துகிட்டு பரிசுகளும் வாங்குவேன். ஆனா, ஒரு கட்டத்துல, ஸ்கூல் டீச்சராகணும்னு விரும்பினேன். நைட் தூங்கறப்ப கனவுல, பிளாக் போர்டுல எழுதுறது மாதிரியும், க்ளாஸ் ரூம்ல சின்ஸியரா பாடம் எடுக்கற மாதிரியும் ட்ரீம் எல்லாம் வரும். அப்படி ஒரு ஆசை இருந்துச்சு.

அப்புறம், காலேஜ் படிக்கும்போது, ஸ்ரீ தேவி மேமின் 'மூன்றாம் பிறை' பார்த்தேன். ஆக்ட்டிங்ல இறங்கலாம்னு தோணிடுச்சு. என் கெரியர் சினிமாதான்னு புரிஞ்சதும், அதுக்கான ஹோம் வோர்க்குகளை பண்ண ஆரம்பிச்சிட்டேன். யெஸ். முறைப்படி டான்ஸ் கத்துக்கிட்டேன். ஆக்ட்டிங் ஸ்கூல் போனேன். அது எல்லாமே என்னோட கெரியருக்கு பயனுள்ளதா இருக்கு.

தமிழ்ல இருந்து நடிக்க ஓஃபர் வந்தப்ப தென்னிந்திய இண்டஸ்ட்ரி பத்தி எதுவுமே தெரியாது. ஆனா, இங்க வந்த பிறகுதான், இங்குள்ள பிரமாண்டம் புரிஞ்சுது. டெக்னீஷியன்ஸ் எப்படி தேசிய அளவுல கலக்கறாங்கனு தெரிஞ்சதும்... சரியான இடத்துக்குதான் வந்திருக்கோம்னு தோணிச்சு.

மெல்ல மெல்ல 'பரதேசி', 'காவியத் தலைவன்'னு பர்ஃபார்ம் பண்ணக்கூடிய படங்கள் அமைஞ்சது. என்னைப் பொறுத்தவரை நான் படங்கள் எதையும் செலக்ட் பண்ணி நடிச்சதில்ல. ஃபிலிம்ஸ்தான் என்னை செலக்ட் பண்ணியிருக்குனு நம்பறேன். ஆக்ட்டிங் தவிர, டான்ஸ்ல ரொம்ப இன்ட்ரஸ்ட் இருக்கு. அதிலும் குத்து டான்ஸ் ரொம்ப பிடிக்கும். குத்து டான்ஸ் நிறைய ஆடணும்னு ஆசையிருக்கு. இப்ப என்னை 'குட்டிப் பிசாசே' வேதிகானுதான் கூப்பிடறாங்க.

### காதல்ல நம்பிக்கையுண்டா?

லவ்னாலே, ஹேப்பினஸ். ஒரு ரைம்ல ஒரே ஒரு லவ் இருந்துச்சு. அப்புறம், அதே ஸ்பீடுல பிரேக் அப் ஆகிடுச்சு. ஒரு நேரத்துல தனிமையை விரும்பியிருக்கேன். யாரோட டிஸ்டர்பன்சும் இல்லாம வீட்ல தனியா இருப்பேன். பாட்டு கேட்டுட்டு, புக்ஸ் படிச்சிட்டு, இன்ஸ்டாவில் லைக் போட்டுக்கிட்டு... அந்த தனிமையை இனிமையாக்கியிருக்கேன். இப்படி சோஷியலைஸ் பண்ணாமல் இருக்கறது சரியில்லைனு ஒருநாள் தோணுச்சு. அப்புறமென்ன! எங்க அம்மாவோட ரைம் செலவழிக்க ஆரம்பிச்சேன். ஆனா, நான் இப்ப சிங்கிள்தான். நாட் ரெடி டு மிங்கிள்.

### உங்கள கட்டிக்கப் போறவர் எப்படி இருக்கணும்னு விரும்பறீங்க?

நான் ரியல் லைஃப்ல எப்படி இருப்பேனோ, அப்படித்தான் நான் நடிக்கற படங்கள்லயும் கெரக்டர்ஸ் அமைஞ்சிருக்கு. ஒரு விஷயத்துல நான் ரொம்ப சீரியஸா இருப்பேன். அது சுத்தம். என் கைகளை அடிக்கடி டிஷ்யூ, டெட்டால் போட்டு சுத்தம் பண்ணுவேன். ஸோ, எனக்கு வரப்போறவர் ரொம்பவும் பொறுமைசாலியா இருந்தாதான், அவரால சமாளிக்க முடியும். அப்படி பொறுமைசாலி கிடைக்கற வரை வெயிட்டிங்தான்!

அடுத்து தமிழ்ல ரெண்டு படங்கள் பண்றேன். கன்னடத்துல உபேந்திராவோட ஒரு படமும், இந்தில இம்ரான் ரேஷ்மியோட ஒரு படமும் பண்றேன்!



## பொறுப்பான அப்பாவாக மிளிரும் ஜீ.வி.பிரகாஷ்

இசையமைப்பாளராக, நடிகராக ஜீ.வி.பிரகாஷ் குமார் பல பேட்டிகள் கொடுத்திருந்தாலும், தந்தையாக அவர் கொடுத்திருக்கும் முதல் பேட்டியில்,

"எங்களுக்கு ஒரு குழந்தைங்கிறது எங்களோட ஏழு வருஷக் கனவு. சைந்தவி கர்ப்பம்னு டாக்டர்கிட்ட செக் பண்ணி, எல்லாம் கன்ஃபார்ம் ஆனதுக்கு அப்புறம், நான்பட்ட சந்தோஷத்துக்கு அளவே இல்லை.

இப்போ பாப்பாவுக்கு அன்வி'ங்கிற பெயரை வைத்திருக்கிறோம் 'அன்வி'னா குஜராத்தியில் சூரியனிலிருந்து வெளிவரும் முதல் கதிர்னு அர்த்தம்.

பெண்கள் எப்போதும் சுதந்திரமாகவும் தைரியமாகவும் இருக்கணும். அதைத்தான் என் மனைவிகிட்டேயும் தங்கச்சிகிட்டேயும் அடிக்கடி சொல்லுவேன்.

அப்படித்தான் அன்வியையும் வளர்க்கணும்னு ஆசைப்படுறேன். அதுமட்டுமல்லாமல், கஷ்டம் தெரிஞ்சு வளர்க்கணும். என் அப்பா என்னை ஒரு மிடில் க்ளாஸ் பையனாத்தான் வளர்த்தார். எல்லாருக்கும் மரியாதை கொடுக்கணும்னு சொல்லிக்கொடுத்து வளர்க்கணும். ஒரு அப்பாவா என் மகளுக்குத் தேவையான கல்வியை நான் கொடுப்பேன். மத்தபடி, அன்வியோட தனித்தன்மை என்னவோ அந்தவழியில் அவங்க போகணும்கிறது என் ஆசை'' என்ற ஜி.வி.பிரகாஷ் குமாரின் கண்களில் பொறுப்பான அப்பா மிளிர்கிறார்.

குழந்தையுடன் ஜீ.வி.பிரகாஷ், சைந்தவி எடுத்த போட்டோஷூட் படங்களை ஜீ.வி. பிரகாஷ் 'எங்க முதல் பெமிலி பேட்டோ' என்று தனது சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ளார்.

- தொகுப்பு: சசி




## 'சூரரைப்போற்று' ஓடிடியில் வெளியாவது குறித்து சூர்யா

சூர்யாவின் தயாரிப்பில் ஜோதிகா நடிப்பில் உருவான 'பொன்மகள் வந்தாள்' திரைப்படம் கொரோனா லொக்டௌன் காரணமாக நேரடியாக அமேசான் ப்ரைம் வீடியோ தளத்தில் வெளியானது. அதே சூர்யாவின் 2D எண்டர்டெயின்மெண்ட் தயாரிப்பிலும் அவரின் நடிப்பிலும் உருவான சூரரைப் போற்று திரைப்படமும் தற்போது அமேசான் ப்ரைம் வீடியோ தளத்தில் ஒக்டோபர் 30ஆம் திகதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சுதா கொங்குரா இயக்கத்தில் ஏர் டெக்கான் நிறுவனர் கோபிநாத்தின் வாழ்வைத் தழுவி எடுக்கப்பட்டிருக்கும் இந்தப் படத்தில் சூர்யா, அபர்ணா பாலமுரளி, மோகன் பாபு, பரேஷ் ராவல், ஊர்வசி, கருணாஸ், ஜாக்கி ஷராஃப் மற்றும் பலர் நடித்துள்ளனர்.

சூரரைப் போற்று படம் பொங்கலுக்குதான் என நினைத்த நிலையில், தற்போது நேரடி ஓடிடி ரிலீஸ் என சூர்யா அறிவித்துள்ளார்.

இது குறித்து விரிவான விளக்கமளித்துள்ள சூர்யா, "பல்துறை கலைஞர்களின் கற்பனைத் திறனிலும் கடுமையான உழைப்பிலும் உருவாகும் திரைப்படத்தைச் சரியான நேரத்தில் மக்களிடம் கொண்டுசேர்ப்பது தயாரிப்பாளரின் முக்கிய கடமை. மேலும், என்னைச் சார்ந்திருக்கிற படைப்பாளிகள் உட்பட பலரின் நலன் கருதி முடிவுகளை எடுக்க வேண்டியது அவசியமாகிறது. சோதனை மிகுந்த காலகட்டத்தில் நடிகராக இல்லாமல் தயாரிப்பாளராக முடிவெடுப்பதே சரியாக இருக்குமென நம்புகிறேன்" என விளக்கமளித்துள்ளார்.

2டி தயாரிக்கும் படங்களுக்குத் தனிநபர்களிடம் ஃபைனான்ஸ் வாங்காமல் வங்கிகள் மூலம் மட்டுமே கடன் வாங்கும் வழக்கத்தை வைத்திருக்கிறார் சூர்யா. சூரரைப் போற்று படத்துக்கு சூர்யாவின் சம்பளம் இல்லாமல், 30- 40 கோடி ரூபா செலவாகியிருக்கும் எனச் சொல்கிறார்கள். ஏர்லைன்ஸ் பிசினஸ் பற்றிய கதை என்பதால் விமானங்கள் வாடகைக்கு எடுக்கப்பட்டு ஷூட் செய்யப்பட்டிருக்கின்றன.

சூர்யாவின் சம்பளம் என்பது சில படங்களுக்கு முன்புவரை 15 கோடி ரூபா ப்ளஸ் தெலுங்கு உரிமம் என்பதுதான். இதையெல்லாம் சேர்த்தால் சூர்யாவின் சம்பளம் 30 கோடி ரூபா வரும் என்பது கணக்கு. ஆனால், இப்போது இந்த 30 கோடி ரூபாவில் சில பல கோடிகளை சூர்யா, நேரடி ஓடிடி ரிலீஸுக்காக விட்டுக்கொடுத்திருக்கிறார் என்றே தெரிகிறது.

என்னுடைய சம்பளத்தை வைத்து இலாபக்கணக்குப் பார்க்கவேண்டாம். எனக்கு சம்பளத்தில் நஷ்டம் ஆனாலும் பரவாயில்லை. படத்துக்குச் செலவுசெய்த பணத்தை விட நல்ல விலைக்கு கேட்டால் ஓகே என சூர்யா தெரிவித்துள்ளார்.




## த்ரில்லர் படத்தில் நடிக்கும் ரைசா

கார்த்திக் ராஜு இயக்கத்தில் ரைசா த்ரில்லர் கதையில் நடிக்கவிருக்கிறார்.

சூர்ப்பனகை படத்தை இயக்கிவந்த கார்த்திக் ராஜு, கொரோனா பிரச்சினையால் அப்படத்தை நிறுத்தி வைத்துள்ளார். இந்த ஊரடங்கு காலத்தில் குறைந்த தொழிலாளர்களைக்கொண்டு பணிசெய்யும் விதமாக மற்றொரு கதையை எழுதி, அதை படமாக்கியும் முடித்துவிட்டார்.

இது குறித்து இயக்குநர் கூறுகையில், இது ஒரு தாய், மகள் மற்றும் ஒரு பதின்மவயது இளைஞர் ஆகியோரை பற்றிய படம். ரைசா வில்சன், ஹரீஷ் உத்தமன், பால சரவணன், காளி வெங்கட், மோனிகா முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். உணர்வுபூர்வமாக த்ரில்லர் பாணியில் இந்தப் படம் இருக்கும்.

திண்டுக்கல் மாவட்டம் சிறுமலையில் இந்தக் கதைக்கேற்ற களமாக இருந்தது. கொரோனா தொற்று இல்லாத அந்த கிராமத்தில் 500இற்கும் குறைவான குடும்பங்களே வசிக்கிறார்கள்.

படப்பிடிப்புக்கு முன்பும், பின்பும் நடிகர்கள், படக்குழுவினர் உட்பட 28 பேருக்கும் கொவிட் - 19 பரிசோதனை செய்யப்பட்டது. முழுபடப்பிடிப்பும் முடித்து திரும்பிவிட்டோம், தற்போது எடிட்டிங் வேலைகளும் முடிந்துவிட்டது. டப்பிங் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஒளிப்பதிவு: வேல்ராஜ், இசை : சாம்.சிஎஸ். விரைவில் படத்தின் பர்ஸ்ட் லுக் வெளியாகவுள்ளது. கண்டிப்பாக பார்வையாளர்களை அடுத்த காட்சி என்ன என்று யூகிக்க முடியாத நிலையிலும், கொமடியுடனும் இந்த த்ரில்லர் இருக்கும். சூர்ப்பனகை தயாரிப்பாளர் ராஜ்சேகர் வர்மா இந்தப் படத்தையும் தயாரிக்கிறார் என்றார் கார்த்திக் ராஜு.



Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7